சீரணி

(கிராம நலம்)

கதிர் 15] பிப்ரவரி 1970 [நெல் 5



மகளிர் இதழ்

தமிழ்நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத் திங்கள் வெளியீடு

சிரமப்பட்டு சேமித்த பணத்திற்கு ஏற்ற சிறந்ததொரு சைக்கிளை வாங்க விரும்புகிறீர்களா? ஹெர்குலிஸ்*



நெற்றி வியர்வை நிலத்தில் விழ சம்பாதிக்கிறீர்கள். அப்படி அரும்பாடுபட்டு சேமித்த பணத்தைக் கொண்டு நீங்கள் வாங்கும் சைக்கிள் நீடித்து உழைக்கவல்லதாக இருக்க வேண்டாமா?

மதிப்பிற்சிறந்த ஹெர்குலிஸ்சைக்கிளை வாங்குங்கள், அது வலிவு, சரளமான இயக்கம், துண்னியவேலைப்பாடு, சிக்கனம், நீடித்து உழைக்கும் தன்மை ஆகிய எல்லா அம்சங்களும் ஒருங்கே கொண்டுள்ளது.

தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய தொழிற்சாலையில் சிறந்த இயந்திர சாதனங்கள் கொண்டு உருவாக்கப்படும் ஹெர்குலிஸ் உங்கள் வாழ்நாள் முழுதும் பழுதின்றி பணியாற்றவல்லது.

இந்தியா முழுவதிலுமுள்ள முப்பது லட்சத்திற்கும் மேற்பட்ட ஹெர்குலிஸ் சொந்தக்காரர்களைப்போலவே நீங்களும் ஹெர்குலிஸை நம்பலாம்.

ஹெர்குலிஸ் வெறும்சைக்கிள் மட்டுமன்று—
உங்கள் வாழ்நாள்முழுதும் உழைக்கும் உறுதுணை

இந்தியாவில் தயாரிப்பவர்கள்: டி.ஐ. சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53. உரிமையாளர்கள்: ட்யூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை-1. பதிவு பெற்று உபயோகிப்போர்.*ஹெர்குலிஸ் சைக்கிள்ஸ் & மோட்டார் கம்பெனி லிமிடெட்., யு. கே. யின் பதிவுசெய்த ட்ரேட்மார்க்.



TIC-H-5452

அளவான குடும்பமே அழகான குடும்பம்



காலம் பொன் போன்றது

ஓராண்டு உருண்டு ஓடிவிட்டது!

பேரறிஞர் அண்ணா நம்மைப் பிரிந்ததால் மீளாத் துயருக்கு ஆளானதுடன் அண்ணன் சுமந்த பெருஞ்சுமையையும் ஏற்க நேரிட்டது.

அண்ணன் வளர்த்த அரசியல் நாகரிகத்தால் அகில இந்தியாவும் புகழும் நிலையில் இருக்கிறோம்.

அண்ணன் வழியில் உறவுக்குக் கை கொடுக்கிறோம்! உரிமைக்குக் குரல் கொடுக்கிறோம்!

வெற்றிக் கனிகள் நம் எதிரே குவிகின்றன.

சேலம் இரும்பாலை - ஏட்டளவில் என்ற நிலை மாறி, நாட்டளவில்செயல் படத் தொடங்கிவிட்டது.

'கல்லக்குடி' - கனவு என்றோர் நாண, நனவாகிவிட்டது.

உணவு உற்பத்திப் பெருக்கம் - புதிய சாதனையாக மனநிறைவைத் தருகிறது.

தமிழகத்தில் உள்ள சிற்றூர் எல்லாம் மின்சார ஒளி பெற்றிட வகுக்கப் பட்ட திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

இந்தியா எங்கும் பரவி நிற்கும் வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையை நம் மாநிலத்திலிருந்து அகற்றிடத் திட்டங்கள் வகுத்து வருகிறோம்.

இவை அனைத்தையும் நம்மை வளர்த்துவிட்ட அண்ணனின் காலடியில் காணிக்கையாக்குவோம்.

ஓராண்டு உருண்டு ஓடிவிட்டது!

செய்து முடித்தவை அனைத்தும் பெரும் பணிகளல்ல எனினும், வெறும் பணிகளல்ல!

செய்ய இருப்பவை ஏராளம்! ஏராளம்!

அந்தக் கடமைகளுக்காக - பொது நன்மைகளுக்காக மாறுபட்ட கொள்கை உடையவர்களுடனும் கலந்து செயல்படுவோம்.

ஏனெனில், காலம் பொன் போன்றது!

— முதல்வரின் சிறப்புச் செய்தி



செல்வி புவனேசுவரி, பி.ஏ.,

வீணைக்கு நரம்பேழு! அகம்பு றத்தில்
விதங்கண்ட தீணைஏழு! மக்கள் வாழும்
நீணிலத்தை வளைத்துள்ள கடல்கள் கூட
நிரல்படவோர் ஏழாகும்! கொடைக்க ரத்தால்
வாணுளைக் கல்லெழுத்தாய் நிறுத்தி வைத்த
வள்ளல்கள் மூவேழு பேர்கள்! இங்கே
காணவரும் பேரழகு மகளிர் எங்கள்
கனிவான பருவங்கள் ஏழே ஆகும்

பேதை

மலர்களுக்குள் அரும்பாவேன்! வானில் தோன்றும்
வளர் மதியில் ஒருமூன்றும் பிறைநான்! கண்ணுல்
கலவரத்தை விளைவிக்கும் கலையைச் சற்றும்
கற்காத இளமான்நான்! சுவரில் தீட்டும்
அலகுசிவந் திருக்கின்ற கிளியைக் கூட
அசல்கிளியாய் நினைப்பவள்நான் அதனுல் தானே
உலகத்தார் எனைப்பேதை என்ருர்! பாடும்
உலாக்களிலோ அணிமுதல்வி நானே என்பேன்.

பெதும்பை

தாவணியிற் சதுராடி வருமோர் தேமாந்
தளிர்நான்தான், இருள்புலர்ந்தும் புலராக் காலை
பூவாது பூத்திருக்கும் மலரைப் போன்ற
புதுப்பருவம் என்பருவம்; இனையோர் தங்கள்
ஆவியினை விழியாலே பறிக்கும் கல்வி
அரிச்சுவடி படிப்பவள்நான்; பெதும்பை என்று
பாவலரைப் புலியாக வெருட்டு கின்ற
பருவத்தாள், பொழுதில்நான் அந்தி மாலை!

மங்கை

ஈராறு வருடத்தில் குறிஞ்சி பூக்கும்
எண்ணிரண்டில் பூப்பவள்நான்; செவிக ளோடு
போராடும் விழியிரண்டில் நோயும், நோயை
போக்குகிற பெருமருந்தும் ஒருங்கு வைத்து
தேரோட்டம் காட்டுபவள்! மங்கை! கொம்புத்
தேனடைபோல் இனிக்கின்ற பருவம்; பைசாப்
பேரான நகரிருக்கும் கோபு ரத்துப்
பிழையதனைச் செய்யாத பாட்டி னத்தாள்!

மடந்தை

பதினறும் தாண்டியவள்! சோலைப் பூவின்
பருவத்தில் அலராவேன்! இன்ப யாப்பு
விதியாவும் கற்றவள்நான்! வாய்ச்சி வப்பை
விழிமாற்றிக் கொள்கின்ற மந்தி ரத்தால்
அதிகாரம் பலவகுப்பேன்! மங்கை பெற்ற
அனுபவத்தின் முத்திரைநான்! மடந்தை என்று
முதிராத இளமையிலே முதிர்ந்த இன்ப
முகவுரைப்பின் பொருள்விளக்கம் தரும்நன் னூல்நான்!

(வேறு)

அரிவை

இருபது வயதைத் தாண்டி
இரண்டடி எடுத்து வைக்கும்
பருவமென் பருவம்! வல்லிப்
பசுங்கொடி! சொன்ன நான்கு
பெருங்குணம் ஏந்தி நிற்கும்
பெற்றியாள்! அரிவை! அள்ளிச்
சொருகிய கூந்த லுக்குள்
சிறைபடும் உயிர்கள் கோடி

(தொடர்ச்சி 24ஆம் பக்கம் பார்க்க)





பேரறிஞர் அண்ணாவின் அஞ்சல் தலை வெளியிடப்பட்ட அதே பல் கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம்.

1968-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலே ஒரு நாள்...

இந்தியாவின் எல்லா மாநிலங்களையும் சேர்ந்த முதலமைச்சர்கள், சமுதாய வளர்ச்சி, கூட்டுறவுத் துறை அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் கூடியிருந்தனர். சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு வந்திருந்த எல்லா மாநிலத்தினரும் அந்தப் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

பள்ளிச் சீரமைப்புக்குத் தமிழ்ச் சமுதாயம் அளித்துவரும் உதவிகளைப் பற்றியும்—'அடையா நெடுங்கதவும் அஞ்சேல்' என்ற சொல்லும் உடைய தமிழ்க்குடியின் புகழைப்பற்றியும்—ஈந்து சிவந்த கரங்களைப்பற்றியும்—வலது கை கொடுப்பதை இடது கை, அறியாவண்ணம் அளிப்பவர் களைப் பற்றியும்-அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதைவிட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி என்பதை உணர்ந்த உள்ளங்களைப் பற்றியும் தமக்கே உரிய நாவன்மையுடன் எடுத்துரைத்த அறிஞர் அண்ணா, வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஆசிரியர் சமுதாயம் ஆற்றி வரும் தொண்டுகளைப்பற்றியும் விவரித்தார்கள்.

விழா மூடிவில் நன்றி கூறிய இளைஞர், ''நான் அமைச்சர் என்பதால்தான், இங்கு நன்றி கூறச் சொன்னார்கள் என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியத் தொழிலின் பெருமையை எடுத்துரைத்த பிறகு அமைச்சராக இருந்து நன்றி சொல்வதைவிட ஆசிரியராக இருந்து நன்றி சொல்வதுதான் பெருமை என்று எண்ணி ஆசிரியராக நன்றி கூறுகின்றேன்...'' என்று தொடங்கியவுடன் மண்டபம் அதிரும்படிக் கையொலி எழும்பியது.

அருகிலிருந்த வெளிமாநில அமைச்சர்களுக்கு அவ்விளைஞர் ஆசிரியராக இருந்து அமைச்சரானவர் என்பதை அண்ணா விளக்கினார்கள்.

அவ்விளைஞர் யார் தெரியுமா?

தொடக்கப் பள்ளி ஆசிரியராக இருந்து, நடுநிலைப்பள்ளி ஆசிரியராக வளர்ந்து, உயர் நிலைப் பள்ளி ஆசிரியராக விளங்கி, பின் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அண்ணாவின் அமைச்சரவையில் இடம் பெற்ற அமைச்சர், ஆசிரியப் பெருமக்களின் பிரதிநிதியாக அமைச்சரவையில் இடம் பெற்றூர் என்பதோடு—

நெடுங்காலமாகத் தமிழக அமைச்சரவையில் எங்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் இல்லை என்ற குறையை நீக்குபவராகவும் அமைந்து விட்டவர்—

முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ''அமைச்சரான பிறகும் சட்ட மன்ற உறுப்பினர் என்ற

சொல்லுக்குரிய சுருக்கெழுத்துக்களே பிடித்துவைத்துக் கொண்டிருக்கும் பெருமைக்குரியவர்—

அவர்தான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி என்பதை நீங்கள் இது வரையிலுமா புரிந்து கொள்ளாமலிருப்பீர்கள்!

[**M**inister for **L**ocal **A**dministration —உள்ளாட்சித்துறை அமைச்சர்.

Member of the **L**egislative **A**ssembly—சட்டப் பேரவை உறுப்பினர்.

இரண்டிற்கும் சுருக்கெழுத்து M.L.A. என்பதே.]

திரு. முத்துசாமி அவர்கள் எங்கள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பரளி என்னும் சிற்றூரில் பிறந்தவர்.

முதலில் 'ஹையர் கிரேடு' ஆசிரியராக ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர். படிப்படியாகத் தம் சொந்த முயற்சியால் படித்து முன்னேறி **பி. ஏ.** தேர்வில் வெற்றி பெற்றார். பின்னர் பி. டி. ஆசிரியப் பயிற்சியும் பெற்றார்.

தமிழில் நீங்காப் பற்றுடைய திரு. மா. முத்துசாமி அவர்கள்மீது 1965 ஆம் ஆண்டில், அன்றைய அரசு இந்தி எதிர்ப்பு மாணவர் போராட்டத்தையொட்டி வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. நீதி மன்றம் அவ்வழக்கைத் தள்ளுபடி செய்தது.


அதுமுதல் அரசியலில் நேரடியான பங்கு பெறுபவரானார் திரு. முத்துசாமி. 1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாமக்கல் தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார். திருச்செங்கோடு தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்குப் பேராசிரியர் அன்பழகன் போட்டியிட்டார்.

அப்பொழுது தேர்தல் கூட்டங்களிலே பேசிய அண்ணா அவர்கள், நாடாளு மன்றத்திற்குப் பெரிய வாத்தியாரும் (பேராசிரியர் அன்பழகன்), சட்டமன்றத்திற்குச் சின்ன வாத்தியாரும் (ஆசிரியர் முத்துசாமி) போட்டியிடுகிறார்கள். அவர்களே நீங்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும்'' என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவதுண்டு.

அண்ணாவின் விருப்பப்படி 'சின்ன வாத்தியாரை' நாமக்கல் தொகுதி வாக்காளர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அதற்கு நன்றி செலுத்தும் முறையிலும் சேலம் மாவட்டத்தினரின் நீண்டநாள் குறையைக் களையும் வகையிலும் அண்ணா அவர்கள் தம் அமைச்சரவையில் இடம் பெறுவோர்களில் ஒருவராக இவரைத் தேர்ந்தெடுத்தார்.

ஆசிரியராக இருந்தவர் அமைச்சரானார்.

நேற்றுவரை மாணவர்களுக்குப் பாடம் கற்பித்த ஆசிரியர் இன்று அமைச்சர் பொறுப்பை ஏற்கிறாரே! எப்படி ஆட்சி செய்யப் போகிறார்? அதிலும் ஊராட்சி ஆயிற்றே! என்று சிலருக்கு ஐயம் தோன்றிற்று. பொறுப்பேற்ற சின்னஞ்சிறுகளிலேயே அவருடைய அயரா உழைப்பும், நிர்வாகத் திறனும் ஏற்பட்ட ஐயங்



களே இருந்த இடம் தெரியாமல் செய்தன.

நிலத்தை ஆள ஒருவரிடத்து நீங்காமல் இருக்கவேண்டிய தூங்காமை, துணிவுடைமை, கல்வி என்ற மூன்றும் இவரிடத்து இயற்கையிலேயே அமையப் பெற்றிருந்தன என்பதை எவர் மறுக்க இயலும்?

அறிவுலகச் சொத்தாம் அண்ணாவின் அருமைத் தம்பிமார்களிலே இவரும் ஒருவரல்லவா? ஆட்சி நிர்வாகத்தில் பட்டறிவு பெற்றவர் போல் விளங்கலுற்றார். ஊராட்சி ஒன்றியங்களை ஒவ்வொன்றாக நேரடியாகப் பார்வையிட்டார். தமிழக முதல்வர் அவர்களின் வரவு செலவுத் திட்டத்தின்படி ஊராட்சிக்கு ஒதுக்கிய தொகையைச் சீராகச் செலவு செய்து திட்டங்களை நிறைவேற்றினார்; வெற்றியும் கண்டார்.

மாவட்ட வாரியாக மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட, நிர்வாகத்தில் உள்ளவர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் ஒன்றாகக் கூட்டலானார். நாட்டிற்குச் செய்ய வேண்டிய நற்பணிகளை எடுத்துக் கூறி, நிர்வாகத்திலுள்ளவர்களின் அன்புரையால் அஞ்சத்தக் கொண்டு செயல்பட வேண்டிய பயனுள்ள முறைகளை ஒன்றியத் தலைவர்களிடம் எடுத்துக்கூறி, நிர்வாக இயந்திரத்தைப் புதுப்பித்தார்; அதன்வாயிலாகப் புதுமையைக் கண்டார்.

பணவசதி படைத்தோரே ஊராட்சி ஒன்றியத் தலைவராக வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் நிலையை மாற்ற எண்ணினார். முதற் கட்டமாக ஊராட்சித் தலைவர் தேர்தலை நேரிடைத் தேர்தலாக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார்.

அண்ணாவின் பிறந்தநாள் காணிக்கையாக, சமுதாயத் திட்டத்தின்கீழ் ஓராண்டுத் திட்டத்தைச் செயல் படுத்தினார். இத் திட்டம் சென்றாண்டுக்கு முந்திய ஆண்டு அண்ணா பிறந்த நாளன்று அன்புக் காணிக்கையாக ஆரம்பிக்கப் பெற்றது. தொடர்ந்து அத் திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வருகின்றன.

ஓராண்டுத் திட்டத்தின் மூலமாக கிராமங்களில் பள்ளிகள் துவக்கவும், மருத்துவமனைகள் திறக்கவும், குடிநீர்க் கிணறுகள் தோண்டவும், விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள் வழங்கவும் ஏற்பாடு செய்து மக்களின் பாராட்டைப் பெற்றார். அண்ணா அவர்கள் தம்மிடம் வைத்திருந்த 'சிரணி'ப் படைப் பொறுப்பை இவரிடம் கொடுத்தார்.

ஊரும் நாடும் உயரத் தன்னலம் கருதாத் தொண்டர்கள் உழைக்கத் தொடங்கினர். உழைப்பின் பயனே ஊரார் காணத் தலைப்பட்டனர். பத்தே நாட்களில் பள்ளிகளைக் கண்டனர். மழைக் காலத்தில் ஆயிரக் கணக்கான குடிசைகள் நீரில் மூழ்கி அழிந்து போவதைத் தடுக்க வியாசர் பாடியில் வாய்க்கால் உருவாக்கினர். பல ஊர்களில் பள்ளங்கள் தூர்க்கப் பெற்றுப் பாதைகள் அமைக்கப் பெற்றன. எக் கட்சிக்கும் பயன் படும் கட்சிச் சார்பற்ற சிரணி அரங்கம் கடற்கரை மணற்பரப்பில் உருவாக்கப் பெற்றது என்றால், அதன் முழுப் பொறுப்பையும் ஏற்று முடித்த பெருமை திரு. முத்துசாமி அவர்களையே சாரும்.

சேவையின் மூலமே சுகத்தின் தலைவராக விளங்கிய காந்தியின் வழி நடக்கும் எல்லைக் காந்தியின் உள்ளத்தைப் பெரிதும் இத் திட்டம் கவர்ந்துள்ளது.

திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு, கதரின் கதி என்னவாகுமோ? அத் தொழிலில் ஈடுபட்டோர் நிலை என்னவாகுமோ? என்றெல்லாம் பலர் குழம்பித் தேம்பி நின்றனர். தேம்பி நின்றவர்களுக்கு, ''கதர் இலாகா என்றும் போல் இருக்கும். அதில் கை வைத்து இவட்சக்கணக்கான குடும்பங்களை நடுத்தெருவில் நிறுத்தும் கொடுமை மனம் படைத்தவனல்ல நான்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார். அண்ணா அவர்கள் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அமைச்சர் முத்துசாமி அவர்கள் கதர்த் துறையில் பேரார்வம் காட்டி ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினார். துணியின் ஓரத்தில் கரைகள் (border) அமைப்பதில் சில மாற்றங்களைச் செய்து ஒரு கட்சியினர் மட்டுமே அணிந்துவந்த கதரை எல்லாக் கட்சியினரும் அணியும்படி செய்தார்.

கதரின் விற்பனை ஈடிலா' உச்சக் கட்டத்தை எய்தியது என்றால்; அதற்கு முழுமுதற் காரணம் அமைச்சர் அவர்களின் திட்டமேயாகும். இவற்றையெல்லாம்விட எல்லாமே தமிழில் நடைபெறுகிற ஒரு துறையாகக் கதர்த்துறை மாறியது என்றால் அம் மாற்றத்தைச் செய்தவர் மாண்புமிகு முத்துசாமி என்றெண்ணும்போது மனம் மகிழாதார் யார்?

இனி, நகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வுக்கால உதவித் திட்டத்தைக் கொண்டுவந்து அவர் தம் உள்ளங்களிலே நீங்கா இடம் பெற்றார். நிர்வாகம் செம்மையாக நடைபெற நகராட்சி நிர்வாகத்தை ஒரு மூனைப்பில் கொண்டுவந்து எப்பொழுது வேண்டினும் நிர்வாகிகளை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு மாற்றல் செய்கின்ற முறையைப் புகுத்தியிருக்கிறார்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களில் இளநிலை (Higher Grade) ஊதியத்தில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்துவந்த இடைநிலை ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய ஊதியத்தை அளித்து ஆசிரியர் சமுதாயத்தை ஊக்குவித்தார்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்கள் ஆயிரத்து இருநூறு பேர்களைப் பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாகத் திடீரென்று மாநகராட்சி வேலைநீக்கம் செய்தது. பொருளாதாரம் பற்றாக்குறையாயிருப்பினும் பரவாயில்லை; ஆசிரியர் எவரும் அல்லல்படக் கூடாது என்று எண்ணித் தடை போட்டு ஆசிரியர்களுக்கு உயிரூட்டினார்.

தான் பொறுப்பேற்று இருக்கின்ற துறைகளில் அவர் பல்வேறு வெற்றிகளைப் பெறுவதற்குக் காரணம் ஒன்றுண்டு.

சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரி சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் பேசுகின்றபோது "நண்பர் முத்துசாமி எப்போதும் என்னிடம் எது கேட்டாலும் இல்லை என்று கூறாமல் அளித்து வருவேன். அவரும் நியாயமானவற்றைத்தான் கேட்பார்" என்றார். அச் சொற்கள்தான் அமைச்சர் முத்துசாமி அவர்கள் பெற்று வருகின்ற வெற்றிகளுக்கான இரகசியம்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பொன்மொழியைத் தன் பண்பாடாகக் கொண்டொழுகும் தமிழர் வாழ்த்தித் தமிழ்நாட்டில் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்தினார்; வையகத்துப் பேரறிஞர் அண்ணாவும் வியக்கும் வண்ணம் மாநாடு கண்ட அண்ணா அவர்கள், 'உலகத்தமிழ் மாநாட்டு மலர்' பொறுப்பை அமைச்சர் முத்துசாமி அவர்களிடம் ஒப்படைத்தார். அரசாங்க ஏடு என்றால் எவரும் விரும்பிப் படிக்கக் கூடாத நிலை இருந்ததுண்டு, ஒரு காலத்தில். அதை மாற்ற எண்ணிய வராய், தம் துறையின் கீழிருந்த 'கிராம நலம்' என்ற இதழைச் 'சீரணி' என்ற செந்தமிழ்ப் பெயருடன் அனைவரும் விரும்பி வரவேற்றுப் படிக்கும் ஓர் இதழாக வெளிவர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அதில் வெற்றியும் கண்டார்.

நாமக்கல், கவிஞர் இராமலிங்கம் பிள்ளையை ஈன்று பெருமைபெற்றது. அப் பெருமை தொடர்ந்து நீடிக்கும் வகையில் திரு. முத்துசாமி அவர்கள் அரிய கவிதைகள் புனையும் ஆற்றல் பெற்றவராய், தமிழர் தந்தை பெரியார் அவர்கள் 'பாவலர்' என்று பாசத்துடன் பட்டமளிக்கும் முறையில் சிறந்து விளங்குகிறார்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிகின்ற சொல்லாற்றல் படைத்தவர்.

இவருடைய தெள்ளுதமிழ்த் துள்ளு நடையால் எழுதப்பெற்ற கட்டுரை, கவிதை முதலியவற்றைத் தமிழகத்தில் பல்வேறு இதழ்கள் வெளியிட்டுப் பெருமை பெறுகின்றன.

இலக்கியத் துறையில் இவருக்கு ஈடுபாடு அதிகம் என்பதைத் தம் மகளுக்குக் கண்ணகி எனப் பெயர் சூட்டியிருப்பது புலப்படுத்தும். முத்

தமிழில் ஒன்றும் நன்றுண இசைத் தமிழை வளர்க்கும் சில முனைகளில் ஒன்றுதான் கவியரங்கமாகும். கவியரங்கத்திற்கு உயிர் கவிஞர் என்றால் அந்த உயிரால் இயங்கும் உடல் பாவலர் முத்துசாமி ஆவார் என்றால், அது தவருகாது.

இவ்வாறு எளிய ஆசிரியராக இருந்த முத்துசாமி அவர்கள், கழகத்தில் சேர்ந்து, எழுத்தாளராகி, பேச்சாளராகி, கவிஞராகி உயர்ந்து நாட்டுக்குத் தொண்டாற்றும் நல்லமைச்சராக இருப்பது எல்லோரும் பாராட்டுதற்குரியது.

அன்றையத் தமிழகத்துப் புலவர்கள் எல்லாம் போற்றிப் புகழ்ந்த பொன்னிநதியின் பெயர் இந்த அமைச்சரின் இல்லத்திற்குச் சூட்டப் பட்டுள்ளது. பொன்னி ஆறு ஓடும் பகுதியில் பிறந்த இவர், பொன்னியின் செல்வன் இராஜ ராஜன் போலப் புகழுக்குரியவராய் வளர்ந்து வருகிறார். ''ஆற்றங்கரை நாட்டு நாகரிகத்தின் ஊற்றுக்கண்'' என்றார் அண்ணு.பொன்னியாறு புனற்பெருக் கெடுத்துச் செந்நெல்வினைத்துச் செல்வத்தைச் சேர்ப்பதுபோல் பொன்னியில் வாழ்கின்ற பொன்னியின் செல்வரும் அறிவுப் பெருக்கால் பல்வேறு திட்டங்களைத் திட்டி நன்மை செய்கின்ற பாங்கை நாம் மறக்க முடியுமா? பொன்னியாற்றின் நுண்ணிய மணலினும் பன்னெடுங் காலம் புகழோடு அவர் சிறக்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறோம்.

பாவலர் முத்துசாமி

பேராசிரியர் மா.கி.தசரதன், எம்.ஏ.,

'ஆசிரியர்களுக்கு அரசியல் ஏன்?' நீண்ட நெடுநாட்களாக இந்தக் கேள்வியைப் பலர் கேட்கின்றனர். கேள்வியின் பொருள் புரிகிறதோ என்னவோ, கேள்வியைமட்டும் விடாமல் கேட்கின்றனர். அதிலும் வேடிக்கை என்னவென்றால், கேள்வி கேட்பதையேதொழிலாகக்கொண்ட ஆசிரியர்களிடமே இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது! யாரோ சிலர் கேட்கிறார்கள் என்பதனால் ஆசிரியர்களுக்கும் அரசியலுக்கும் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடவில்லை. மேற்கு நாட்டுப் பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளில் நான்கு சுவர்களுக்கு இடையிலே தத்துவங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருந்த பல ஆசிரியர்கள் அரசியல் அரங்குகளில் வழிகாட்டிகளாக, கொள்கை வகுப்பவர்களாக விளங்கியுள்ளனர்.

இந்தத் திருநாட்டிலும் அந்தப் பெருவாழ்வில்லாமல் போகவில்லை. பச்சையப்பன் கல்லூரியின் பொருளியல் துறையில் ஆசிரியராக இருந்து தான், ரங்கா அரசியல் பேராசிரியர் ஆனார். வெஸ்லிபள்ளிப் பிள்ளைக்குத் தந்தமிழ் தந்துவந்த திரு.வி.க. பின்னர் நாட்டு மக்களுக்குத் தமிழ்த் தென்றலாக மாறினர். அடுத்துப் பேராசிரியர் அன்பழகனர், இப்படி ஒரு பெரிய படை வரிசை அந்தப் பாடி வீட்டிலிருந்து புறப்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணவும் இன்னும் இந்தப் பெரும் பணியில் தொடர்பு கொண்டிருந்தார் என்பது பெருமைக்கு உரிய செய்தியாகும்.

அறிஞர் அண்ணு அவர்கள் சொல்வார்கள்: ''ஆசிரியர்களைப் பார்த்து உங்களுக்கு ஏன் அரசியல் என்று கேட்கிறார்கள். அலுவலர்களைப் பார்த்து உங்களுக்கு ஏன் அரசியல் என்று கேட்கிறார்கள். வணிகர்களைப்

யார்த்து உங்களுக்கு ஏன் அரசியல் என்று கேட்கிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் இருப்பவர் களைப் பார்த்து உங்களுக்கு ஏன் அரசியல், ஏன் அரசியல் என்று அவர்களை அப்புறப்படுத்திவிட்டால் அப்புறம் அரசியலில் யார்தான் இருப்பது? வேலை வெட்டி அற்றவர்களுக்காகவா அரசியல் இருக்கிறது?'' என்று

அனைவரும் அரசியலைத் தெரிந்து கொள்ளவேண்டும்; புரிந்து கொள்ள வேண்டும். நாம் அரசியலைப் புறக்கணித்தாலும் இன்று அரசியல் நம்மை விட்டுவிடுவதாக இல்லை. தொட்டிலில் தொடங்கிடும் வாழ்வு முதல் கல்லறையில் மீளா உறக்கம் கொள்ளும்வரையில் அரசியல் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்து விட்டிருக்கிறது.

இந்தப் பேருண்மையைப் புரிந்து கொண்டவர்களுள் ஆசிரியர் முத்து சாமியும் ஒருவர் ஆவார். அப்படிப் புரிந்து கொண்டதனால், தாம் கொண்ட கருத்தினை நாட்டுமக்களுக்கும் புரியவைத்திடல் வேண்டும் என்ற பெரிய எண்ணம் அவர் மனத்தில் எழுந்தது. எழுந்த எண்ணம் வளர்ந்தது; வடிவம் பெற்றது. நாட்டிலே இந்தி எனும் செந்தீ பரவத் தொடங்கியபோது அதனை அணைத்திடத் துடித்தெழுந்த தொகை தொகையான தொண்டர் கூட்டத்தில் தாமும் ஒருவரானார். சட்டத்தின் இரும்புக் கரங்களுக்குள் இக்கிச் சங்கடங்கள் பல ஏற்று, அதனால் தொழிலையும் துறந்துவிடும் நிலை வாய்த்தது.

அதனால்?

அதனால்—

ஆசிரியர் முத்துசாமி, அமைச்சர் முத்துசாமி ஆனார்!

அமைச்சர் என்ற அறிவிப்போடு அவருடைய படமும் தாள்களில் வந்தபோது மீசையைக் கண்டு மிரண்டவர்கள், மருண்டவர்கள் பலர். பின்னர் மீசை மெலிந்தது; அவர்மேல் ஆசை மலிந்தது. காரணம்—தம் தொண்டில் அவர் காட்டிய அக்கறையும் உற்சாகமும்தான்.

பாட்டின் கிறக்கிலில் இந்தப் பாரைத் திருத்திடலாம் என்பது நம் முன்னோரும் மூத்தோரும் கண்ட நெறி. பரமன் அடி சார்வதற்கும் பாட்டு துணையாகும் என்று கருதியவர்கள் நம் முன்னோர். நாட்டைத் திருத்தி நல்வழிப் படுத்திடவும் பாட்டு பயனுகும் என்பதை நாம் என்றோ உணர்ந்திருந்தோம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்த மண்ணில் செங்கோல் செலுத்தியவர்கள் யாப்பறிந்து பாப்பூனகின்ற வர்களாக இருந்திருக்கின்றனர். பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், அறிவுடை நம்பி, கோப்பெருஞ்சோழன் இப்படி எண்ணற்ற பேர் செங்கோல் ஏந்திய கையில் ஏடும் எழுத்தாணியும் ஏந்தி அடிமேல் அடிதொடுத்துப் புகழ்பெற்றனர். செங்கோல் ஏந்தாவிடினும் செந்தமிழ்க்கோல் ஏந்திப் பெருமை பெற்றிட்டான் சேரனின் தம்பி.

அந்த மரபு மாண்டுவிடவில்லை; மீண்டும் இந்த மண்ணிலே மூளீத்து விட்டது என்பதை இன்று உணருகின்றோம்.

பேரறிஞர் அண்ணு அவர்களின் உரைநடையே பாட்டாகப் பரிமளித்தது! அவர் அடியொற்றிச் செல்லும் கலைஞர் கருணாநிதி அவர்கள் கவிதைக்குப் புத்துயிரும் புதுப்பெருமையும் தந்தார் என்பது இலக்கிய உலகம் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். அமைச்சராகி விட்டதினுல் பிறர் தம்மைப் பாடி மகிழ்வித்தால் போதும் என்றிருந்திடாமல் தாமே பாடிப் பிறரை மகிழ்வித்த பெருமை யுடையார் அவர். 'வேலையற்ற சிலர் வேலை அது' என்று பலர் கருதிடத் தக்க நிலையில் வெறும் முணு முணுப்பாக, இங்கும் அங்குமாகச் சிதறல்களாக இருந்த 'கவியரங்கம்' என்ற இலக்கியச் சடங்கு, சவமாகிவிடாமல் அதனைக் காத்து, அதற்குப் புகழ் உரம் சேர்த்த பெருமை நிச்சயம் கலைஞருக்கு உண்டு. அவர் தலைமை ஏற்று தம்முடைய 'தாளித்தத்தை'யும் சேர்த்த பின்னரே அந்தக் கவிதைச் சமையல் சுவையும் மணமும் பெற்றது.

ஆசிரியர் முத்துசாமி, அமைச்சர் முத்துசாமி என்ற நிலை போதும் என்றிருந்திடாமல் அந்தப் பாட்டுப் பெருமையில் தன்னை ஈடுபடுத்திக்

கொண்டு இன்று பாவலர் முத்துசாமி ஆகிவிட்டார்.

பாவலர் ஆகிவிட்டோம் - தம் பாட்டுத் திறத்தினாலேமட்டும் என்று அவர் கருதவில்லை. ''நான் பாராட்டப் பெறுகிறேன் என்றால் என் பாட்டுச் சிறந்தது என்று நான் கருதவில்லை. பாடுவதற்கு நான் எடுத்துக்கொள்ளும் பொருள் சிறந்தது என்றுதான் கருதுகிறேன். நான்; ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்த நாட்டில் தோன்றிய குடிமகனின் பெருமையை, அவன் தந்த நூல் இந்த வையத்துக்கு வழிகாட்டி வாழ்வளிக்கும் பெருமையைப் பாடுகிறேன்; அவன் வழியை நமக்கெடுத்துரைத்த அண்ணனின் பெருமையைப் பாடுகிறேன்; அண்ணனைத் தன் அரசியல் பிள்ளையாகப் பெற்ற பெரியாரைப் பாடுகிறேன். இன்று நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்லும் வல்லவனை, கலைஞரைப் பாடுகிறேன். கண்ணுக்கும் கருத்துக்கும் தெரிந்த இந்தப் பொருள்களைப் பாடுவதனால்தான் பெருமையே தவிர என் பாட்டுக்காக அல்ல இந்தப் பெருமை'' என்று சொல்லிக் கொள்வதில் அவருடைய தன்னடக்கம் நமக்குப் புலனாகிறது. ஆனால் அவருடைய பாட்டில் அவருடைய புலமையும் புலனாகும் வகையில் இன்சுவையும் இலக்கணச் சுவையும் கலந்திருக்கிறது என்பதைப் புலவர் அறிவார்; அறிந்து அகம் மகிழ்வர்.

அந்த மகிழ்ச்சியைத் தமிழகத்துக் குடிமக்கள் எல்லோரும் பங்கு போட்டுக் கொள்ள முன்வருவர் என்றாலும், கழகத் தோழர்களுக்கு அதில் பெரும் பங்கு கிடைக்கும் என்றாலும், ஆசிரியர்களுக்கு அதில் சிறப்புப் பங்கு உண்டு என்பதை அறிவோம். அறிந்து, அந்தப் பெருமையைத் தேடித்தந்த

ஆசிரியரை
அமைச்சரை
பாவலரை வாழ்த்துகின்றோம்!

முத்தமிழ்ச்சாமி வாழ்க!

பாவலர் பட்டம்பெற்ற பைந்தமிழ்க் கவியமைச்சே!
காவலர் கலைஞர்நாட்டு நலம்வளர் அரசமன்றில்
ஆவலாய்த் தமிழர்மக்கள் அன்பினுள் அழைத்துப்போற்ற
பாவலர் ஆனஎங்கள் பண்புடை அமைச்சேவாழ்க!

காவளம் கனிவளத்தில் கனஇரும் பதன்வளத்தில்
மாவளம் மலைவளத்தில் மாபலா வாழைத்தோப்பில்
கூவிளம் குயில்முழங்கும் குலவிடும் கொங்குநாட்டின்
மூவிளம் தமிழ்வழங்கும் முத்தமிழ்ச் சாமிவாழ்க!

முத்துயர் தென்னகத்தில் முடிமலை கொங்குநாட்டில்
சத்துயர்ச் சம்பாச்சோற்றைச் சமைத்தபின் பறித்துப்போடும்
கொத்துயர் மாம்பழங்கள் கொடுத்திடும் சுவையினைப்போல்
பத்தரை மாற்றுப்பாடல் படைத்திட வல்லோய்வாழ்க!

பாவளம் வாழ்ககூட்டுப் பயிர்வளம் வாழ்கநாட்டில்
நாவளம் வாழ்கநாளும் நல்வளம் வாழ்ககோட்டுப்
பூவளம் வாழ்கநித்தம் புதுப்புது வெற்றிசூட்டும்
பாவலர் முத்துசாமி பெருவளம் வாழ்கவாழ்க!

— கவிஞர் எஸ். டி. சுந்தரம்




'இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும், வல்லது அரசு'

என்கிறது தமிழ் மறை. இந்தக் கருத்தை ஒட்டி மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள், 'சமூகத்தின் ஆக்க சக்திகளான அறிவியல் அறிஞர்,பொறியியல் நிபுணர் போன்றோர்க்குப் பணி செய்யும் வாய்ப்பும், மக்களிடையே மதிப்பும் அளிப்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதற்படியாகும்' என்ற அறிவுரையைப் பலமுறை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அத்தகு அண்ணாவின் அருமைத் தம்பியாம் தமிழக அரசு முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் உள்ள அமைச்சரவையில் பொதுப் பணித்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்று இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது. இந்த ஓராண்டில், இத்துறையில் தமிழக அரசின் பணிகளை நினைவு கூர்வது முறையே என்று கருதுகிறேன். தமிழக அரசின் பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் ஆக்கத் திட்டங்களைச் செம்மையுற நிறைவேற்றுகின்றன.

முதல்வர் கலைஞர் அவர்கள் முன்பு பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது தமக்கென ஒரு தனி வழிமுறையை வகுத்துக்கொண்டு, சிக்கனமும், உறுதியும், வலிவும், பொலிவும் உள்ளதான திட்டங்களை உருவாக்கித் தந்ததை ஏற்று இந்தத் துறையினர் பின்பற்றிவருகின்றனர்.

சிங்களத் தீவினைத் தமிழகத்துடன் இணைக்கும் கப்பல் மார்க்கத்தின் தொடக்கத்தில் இருக்கும், இராமேசுவரத்தில் ஒரு படகுத் துறையும், அப்படகுத் துறைக்கு ஒரு பாதையும் அமைப்பது சென்ற ஆண்டின் சீரிய பணிகளில் ஒன்றாய் அமைந்தது. அஃதே போன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நெடுந்தூரக் கப்பல்கள் வெளிநாடுகளுக்கு நேரடியாகச் செல்வதற்கு வசதியாகச் சேதுசமுத்திரம் கடற்பாதையை ஆழப்படுத்துவதற்கு மத்திய அரசை வலியுறுத்தும் முயற்சிகளும் சென்ற ஆண்டு கணிசமான அளவிற்கு மேற்கொள்ளப்பட்டன.

கப்பல்களை ஈர்க்கும் ஆழ்கடல் துறைமுகமாகத் தூத்துக்குடித் திருநகரை ஆக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் செலவிடப்பட்ட தொகையும் கணிசமானவையாகும்.



மாண்புமிகு எஸ்.ஜே.சாதிக் பாட்சா.
பொதுப் பணித் துறை அமைச்சர்

உழவுத்தொழிலுக்கு இந்த அரசு செய்த வந்தேறியை இந்த நாடே அறியும். புதிய நீர்த்தேக்கத் திட்டங்

கூடி நிறைவேற்றியதன் மூலமும், பழையனவற்றைச் சீர்திருத்தியதன் மூலமும் சென்ற ஓர் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ நான்கு இலட்சம் ஏக்கர் நிலங்களைச் சாகுபடிக்குக் கொணர்ந்துள்ள சாதனை, நாம் நினைத்து நினைத்து மகிழ்வதற்குரிய ஒன்றாகும்.

சென்னைப் பெருநகரின் வாகனப் போக்குவரத்திற்கு உதவுவான் வேண்டி, இந்த அரசு சென்ற ஆண்டு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் தலையாயது ஜெமினி வட்டத்தில் சுமார் நாற்பத்து ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் கட்டப்படவிருக்கும் 'மேல் நிலைப் பாலம்' (Gemini ply over) ஆகும். இது இந்தியாவிலேயே மூன்றாவது மேம்பாலமாகப் பல புதுமைகளைக் கொண்டதாக அமையப் போகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

அதேபோல், இரயில் பாதைகளில் சாலையில் குறுக்காக உள்ள 'லெவல் கிராசிங்குகளில்' மக்களுக்கும், வாகனங்களுக்கும் ஏற்படும் போக்குவரத்துத் தடையால் வீணாகும் நேர இழப்பு அடிப்படையில் மாநிலம் முழுவதும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின்படித் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவற்றுள் மதுரை, கோவை, மாயூரம், குடந்தை, தஞ்சை, விழுப்புரம், திருச்சி, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட வேண்டிய மேம்பாலங்களுக்காக இரண்டரைக் கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதே போல், சேலம் மாநகரில் ஒரு மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டதுடன், சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் தாம்பரம் அருகே கடந்த ஆண்டு ஒரு மேம்பால வேலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. திருநெல்வேலியில் சுமார் மூப்பத்தைந்து இலட்ச ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம் திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்பால அமைப்பில் புதியதொரு வகை கையாளப்பட இருக்கிறது. அதன்படி வேகம் மிகுந்த வாகனங்களும் வேகம் குறைந்த வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று சேராமல் வெவ்வேறு மட்டங்களில் செல்லும் படித் திட்டமிடப்பட்டுள்ளன. இவ் வகமப்புடன் கூடிய பாலம் தென் கிழக்கு ஆசியாவிலேயே முதன் முதலாக இங்குதான் திட்டமிடப்பட்டிருக்கிறது.

'காடாரம்பம்' என்று சொல்லப்படும் அரியலூர் வட்டத்தையும், தஞ்சை மாவட்ட நெற்களஞ்சியத்தின் ஒரு சிறந்த அங்கமான திருவையாற்றுப் பகுதியையும் இணைக்கப் போகும் திருமானூர் பால வேலை சென்ற ஆண்டில் துவக்கப்பட்டிருப்பது கொள்ளிட ஆற்றின் இருமருங்கும் வாழ்வோருக்கு ஓர் இனிப்பான செய்தியாகும்.

கடலூரில் கடிலம் ஆற்றுக்குக் குறுக்கே சென்ற ஆண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ள பாலத்தில் 'Twisted Steel' எனப்படும் முறுக்கேற்றிய இரும்பை உபயோகித்த காரணத்தால் மொத்த இரும்பில் மூப்பதுசதவிகித்தை மிச்சப்படுத்தி யிருக்கிறோம். மேலும் இந்த முறுக்கேற்றிய இரும்பை மற்றவர்களும் பயன்படுத்தி இலாபம் அடைய இது ஒரு முன்னோடியாக இருந்து உதவி புரிந்து வருகிறது.

உலக வங்கியிலிருந்து இந்திய அரசு பெற்றுத் தரும் பத்துக்கோடி ரூபாயில் சேலம், கோவை மாவட்டங்களின் வழியாகச் செல்லும் பெங்களூர் - கொச்சி நெடுஞ்சாலையை அகலப்படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும் தேவையான ஆய்வுகளும், மதிப்பீடுகளும் சென்ற ஆண்டு ஒரு தனி மேற்பார்வைப் பொறியாளரைக் கொண்டு தொடக்கப்பட்டுள்ளன.

விழுப்புரத்துக்கும் திண்டிவனத்துக்கும் இடையே சங்கராபரணிப் பாலம் சென்ற ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, பொது மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

சேலம் அருகே கஞ்சமலையில் இரும்புச்சுரங்கம் வெட்டப்பட இருப்பதால், அதற்கு முன்னோடியாக இச் சுரங்கச் சுற்றுப்புறங்களை இணைக்கும் வட்டச்சாலை ஒன்று 17 கோடி ரூபாய் அளவிலும், நம் மாநில எல்லைகளில் ஆந்திர, கேரள, கருநாடக மாநிலங்களை இணைக்கும் சாலைகள் சுமார் 1½ கோடி ரூபாய் அளவும் அமைக்கப்படத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இவையன்றி,

எண்ணூர், எல்லிங்டன் பாலங்களுக்கும் சுமார் 1 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் ஆயிரம்மைல் நீளத்திற்குச் சாலைகள் புதிதாகத் தளமிடப்பட்டுள்ளதுடன், நாலாறுமைல் நீளத்திற்குப் புதிய சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகரில் கடந்த ஆண்டில் குடிநீர் வசதி குறைந்த போது மாநகராட்சி முழுவதும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. சென்னையில் தற்போதுள்ள மக்கள் தொகை சுமார் 20 இலட்சம். இன்னும் 10 ஆண்டுகளில் இது 26 இலட்சமாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அப்போது ஏற்படும் தொழிற்சாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்குக் குடிநீர் வழங்கத் தற்போதுள்ள புழலேரி நீர் போதுமானதல்ல என்பதை உணர்ந்து இந்த அரசு பொன்னி நதித் தண்ணீரை வீராணம் ஏரியில் நிரப்பி, அதனைத் தூய்மைப்படுத்திச் சென்னை வாழ் மக்களுக்கு வழங்க, சுமார் 22 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டம் நிறைவேறியதும், இப்போது சென்னையில் ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு வழங்கப்பட்டு வரும் 17 காலன் குடிநீரை 40 காலன் அளவாக உயர்த்த முடியும்.

வான் பொய்த்த காரணத்தால், சென்ற ஆண்டு தமிழகத்தின் பெரும் பகுதிகளில் புன்செய்ப் பயிர்கள் நசித்துப் போன நிலையில், பாசன நிலங்களில் நன்செய்ப் பயிர்களை விளைக்க முடியாத சூழ்நிலையில், இத்தகு வறட்சித் துயர் துடைக்க, தமிழக அரசு திட்டிய திட்டம், நம் மக்கள் நலனில் மாநில அரசு கொண்டுள்ள அக்கறைக்கு ஓர் அருமையான அத்தாட்சியாக அமைந்தது.

கிராமப் பகுதிகளுக்கு மட்டுமின்றி தண்ணீர்த் தட்டினால் அவதியுற்ற நகராட்சிகள் பலவற்றுக்குக்கூட அரசு வறட்சி நிவாரண நிதியில் இருந்து உதவியளித்தது. குடிமராமத்து வேலைகள், பாசன ஏரிகளைச் செப்பனிடல், மண்வளப் பாதுகாப்பு, சாலை அமைப்பு, சாலை செப்பனிடல் போன்ற பணிகளுக்கு வறட்சித் துயர் துடைப்பு நிதியில் இருந்து தாராளமாக உதவியளிக்கப் பட்டது. இந்தப் பணிகளின் உச்ச கட்டத்தில், ஒரே சமயத்தில் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட வேலைகள் நடத்தப்பட்டு, 8 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது என்ற உண்மை சரித்திரத்தில் பொறிக்கத்தக்க ஒன்றாகும்.

குடிநீர்த் திட்டங்களுக்கு 5 கோடியும், சிறு பாசன வேலைகளுக்கு 2½ கோடியும், பெரும் பாசன வேலைகளுக்கு 2 கோடியும், சாலைகளுக்கு 2½ கோடியும், மண்வளப் பாதுகாப்புக்கு 20 இலட்சமும், குடி மராமத்துக்கு 10 இலட்சமும், பாறை உடைக்கும், பாறை தூளாக்கும் கருவிகளுக்கு 60 இலட்சமும் ஆக சுமார் 13 கோடி ரூபாய் இந்த வறட்சித் துயர்த் துடைப்புப் பணிகளுக்காக சென்ற ஓர் ஆண்டில்மட்டும் செலவிடப்பட்டுள்ளது என்ற செய்தி உண்மையிலேயே திருப்தி அளிக்கும் ஒன்றாகும்.

தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையை அழகுத் திருநகராக்குவதற்குக் கூவம் கால்வாய்ச் சீரமைப்பு பேருதவி புரியும். இக் கால்வாய் ஆழப்படுத்தப்பட்டு, இரு புறமும் பூங்காக்கள் அமைக்கப்படும் பணி என்ற ஆண்டில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில் முதல் படியாக நடப்பு ஆண்டில்மட்டும் சுமார் பதினேழு இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

நிலமட்ட நீரியல் அதாவது 'Ground Water' வாய்ப்புகள் அதிகமாக உள்ள இடங்களை ஆய்ந்தறியப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சோதனைகள் நகரங்களில் மக்களுக்குச் சிக்கனமாகக் குடிநீர் வழங்கப் பெரிதும் பயன்படும். இவற்றுள் முதற்படியாகச் சென்னையிலும், அதன் சுற்றுப் புறங்களிலும், பாலாற்றிலும், நெய்வேலியிலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிகரமாக அமைந்துள்ளன என்பது மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியாகும். இதற்காக நடப்பு ஆண்டில் சுமார் 5½ இலட்ச ரூபாய் செலவிடப் பட்டுள்ளதுடன், சென்னை உரத் தொழிற்சாலைகளுக்கும், எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கும் நீர் வழங்கும் திட்டத்தில் முறையே

இருபது இலட்சமும், ஐந்தரை இலட்சமும் செலவு செய்து திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறையின் நீர்ப்பாசனப் பிரிவில் நடப்பு ஆண்டில் மேற்கொண்டுள்ள திட்டங்கள்மூலம் மேலும் 4 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி அளித்திருப்பதுடன், 1½ இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குத் தற்போதுள்ள பாசன வசதிகளை அதிகமான அளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட்டும் உள்ளது.

மேலும் நம் அரசு அண்டை மாநிலங்களுடன் தொடர்பு கொண்டு காவிரி, பரம்பிக்குளம், ஆளியாறு முதலிய நதிநீர்ப் பிரச்னைகளில் குறையாத ஆர்வத்துடன் தீவிரக் கவனம் செலுத்தி வருவது பொது மக்கள் யாவரும் அறிந்த ஒன்றாகும்.

மற்றும், பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவு மாநில மெங்கும் கல்லூரிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்குச் சிறந்த முறையில் புதிய கட்டடங்கள் நிறுவித்துள்ளமை பெரிதும் நினைவுகூரத்தக்கதாகும். எடுத்துக் காட்டாக, மதுரையில் சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு, முடியும் தறுவாயிலிருக்கும் மதுரை நீதிமன்ற அலுவலகம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தென்னகத்தின் திருவிளக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தன் புனிதமான அஞ்சலியைச் செலுத்துவதிலும் நம் பொதுப் பணித்துறை தவறவில்லை என்பது நாம் எழுப்பியுள்ள எழில்மிகு நினைவுச் சின்னத்திலிருந்து புலனாகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுப்பணித்துறையின் முக்கியத்துவம் கருதி, சென்ற ஆண்டின் இறுதியில், முதிர்ந்த, அனுபவம் வாய்ந்த பொறியியல் வல்லுநர் இருவரை இந்த அரசு தன் பொறியியல் ஆலோசகர்களாக அமர்த்தியுள்ளது, பொறியியல் துறையின்மீது இந்த அரசு கொண்டுள்ள அக்கரையை எடுத்துக் காட்டுவதாகும்.

மேற்குறிப்பிட்ட பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதில் பெருமுயற்சிகள் எடுத்துக்கொண்ட பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள்.

முடிவாக, 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்; சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்; நடையும் பிறப்புமுணர் வண்டிகள் செய்வோம்; காலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்; உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்ற பாரதியின் இலக்கணங்களுக்கு நம் பொதுப் பணித் துறையினுடைய சென்ற ஆண்டின் சிறந்த சாதனைகள், இலக்கியங்களாக அமைந்துள்ளன என்று எண்ணிப்பெருமை கொள்வோமாக!

— வாஞ்சிலிப் பேச்சு



மகளிர்-குழந்தைகள் நலத்திட்டம்

1947ஆம் ஆண்டிலிருந்து மாதர் நலத்துறை துவங்கிப் பணியாற்றி வருகிறது. மாதர் குலம் சீருடனும் சிறப்புடனும் திகழ, தாய்க்குலத்தின் முன்னேற்றமே தாயகத்தின் முன்னேற்றம் என்ற சீரிய நோக்குடன், அரசு பற்பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது, 1953-54இல் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் தொடங்கப் பெற்றன. அதைத் தொடர்ந்து, தேசிய வளர்ச்சிப் பணிப் பிரிவும் செயல்படத் தொடங்கியது. 1954இல் மாநில சமூக நல வாரியம் அமைக்கப்பட்டது. சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள், தேசிய வளர்ச்சிப் பணிப் பிரிவு, மாதர் நலத்துறை ஆகிய இம்மூன்று பிரிவுகளும் முக்கியமாக ஊர்ப்புறங்களில் வதியும் மகளிர்-குழந்தைகள் நலனுக்கான பணிகளைச் செய்து வந்தன. 1961இல் ஊராட்சி முறை தமிழ் நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த ஆட்சி முறையின்கீழ், ஊராட்சி மன்றத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு (Co-opted Members) ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சிப் பணிகள் குறித்த வேலைத் திட்டங்கள், நோக்கங்கள்பற்றி நிர்ணயிக்கும் அதிகாரமானது கொடுக்கப்பட்டதினால், இம்மூன்று பிரிவுகளும் ஒன்றிணைக்கப்பட்டு, மாதர் நலனுக்கென்று தனியாக ஓர் இயக்குநர் துறை 1961இல் நிறுவப்பட்டது.

மாநில அளவில், மகளிர் நலத் துறை இயக்குநர் துறைத்தலைவராவார். ஒவ்வொரு மாவட்டத்திலும், அவருக்கு உதவிபுரிய மாவட்ட மகளிர் நல அதிகாரி ஒருவர் இருக்கிறார். வட்டாரங்களிலும் பணியாளர்கள் உள்ளனர். மகளிர் நலத் துறை ஆற்றும் முக்கியப் பணிகளாவன :


1. பள்ளி முந்நிலை வேலைத் திட்டம்.

2. மகளிர் மன்றங்கள் அமைத்துப் பணியாற்றுதல்.

3. சேவை இல்லங்கள் அமைத்து நடத்துதல்.

4. பணிமனைகள், உற்பத்திப் பிரிவுகள் போன்றவை.

சேவை இல்லங்கள் : வசதி இழந்த, திக்கற்ற பெண்கள், குழந்தைகள் மறு வாழ்வு பெற, சமுதாயத்தில் தாங்களும் ஓர் அங்கம் என்ற நிலையை அவர்கள் பெற-அவர்களைப் பாதுகாத்து,



பராமரித்து, பயனுள்ள குடிமக்களாக மாற்றியமைக்கும் திருப்பணியை, சேவை இல்லங்கள் செய்து வருகின்றன. வாழ்வு இழந்து, வசதி இழந்து அனுதைகளாய் உள்ள மகளிர், குழந்தைகள் சேவை இல்லங்களில் சேர்க்கப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றனர். தமிழகத்தில் மகளிர் நலத் துறையினரால் இம்மாதிரி மூன்று சேவை இல்லங்கள் நடத்தப்பெறுகின்றன. தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இச் சேவை இல்லங்கள் உள்ளன. சேவை இல்லங்களில் சேர்க்கப்படும் மகளிர்க்குப் பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஊதியம் அளிக்கும் பணிகளை, அனுதைப்

பெண்டிர் கற்று, பயன்பெற, அவர்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளிவீச, நுணுக்கமான கைவேலைப்பாட்டுத் தொழில்களில் இச்சேவை இல்லங்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அண்மையில், தாம்பரத்தில் உள்ள சேவை இல்லத்தில் இடைநிலை ஆசிரியைப் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. சேவை இல்லத்தில் தங்கியிருப்போர் மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேற்படாமல் தங்கியிருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். அக்காலத்தில், அவர்களுக்குப் போதிய கல்வி வசதியும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. சேவை இல்லத்தில் தங்கியிருப்பவர்களுக்கு உதவித் தொகையும் (Stipends) அளிக்கப்படுகிறது. இத்தொகை அவர்களுடைய பராமரிப்புச் செலவுக்கும் தங்கியிருப்பதற்கான செலவுக்கும் சரிக்கட்டப்படுகிறது. அரசு நடத்தும் இம்மூன்று சேவை இல்லங்களில் அரசு அலுவலகங்களில் பணி புரிவதற்கான பயிற்சிகள் ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவற்றில் கடலூர், தாம்பரம், தஞ்சாவூரில் உள்ள சேவை இல்லங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வோர் இல்லத்திலும் 20பேருக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

பணிமனைகள், உற்பத்திப் பிரிவு நிலையங்கள்: பாய் முடைதல், கம்பளி பின்னுதல், கயிறு திரித்தல், தையல் வேலை, மூங்கிலினுல் பொருள்கள் தயாரித்தல் போன்ற சாதாரணமான கைவேலைப்பாட்டுத் தொழில்களில் ஊர்ப்புற மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியினைப் பணிமனைகளும், உற்பத்திப் பிரிவு நிலையங்களும் அளிக்கின்றன. ஊர்ப் புறமகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இப்பயிற்சிகள் பெரிதும் பயனளிக்கின்றன எனலாம்.

இன்றைய நிலையில் இதுமாதிரி 51 நிலையங்கள் செயல்படுகின்றன. நான்காவது திட்டக்காலம் வரையில் சுமார் 3954 மகளிர்க்கு இந்நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பெருவாரியானவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட குடிகளுமேயாவார்கள். நான்காவது திட்டக் காலத்தில் எல்லா வகுப்பினர்களுக்குமாக மேலும் சில நிலையங்களைத் திறக்கும் கருத்து உள்ளது. இதற்காக 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

1969-70இல் கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:

1. வடஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் Screwpile தொழிற்சாலை.
2. சேலம் மாவட்டத்தில் லத்துவாடியில் கம்பளி தயாரித்தல்.

} ஒரு ஆண்டுக்கு ஒவ்வொரு நிலையத்திலும் 15 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

முந்நிலைப் பள்ளிப் பயிற்சி நிலையங்கள்: 2-லிருந்து 5 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு முந்நிலைப் பள்ளிக் கல்வி அளிக்கப்பட வேண்டியதன் தேவையை அரசு உணர்ந்துள்ளது. மாநிலத்தில் 21 வட்டாரங்களில் ஒவ்வோர் ஊராட்சியிலும் ஒரு குழந்தைகள் காப்பகம் 1962இல் தொடங்கப் பெற்றது. முந்நிலைப் பள்ளிக் கல்வி நிலையங்கள், ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படத் தொடங்கின. இப்பொழுது மொத்தம் 1040 முந்நிலைப் பள்ளிகள் மாநிலத்தில் செயல்படுகின்றன. கல்விப் பொருள்கள், விளையாட்டுக்குத் தேவையான கருவிகள் இந்நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை நடத்திவைக்கும் நிர்வாக அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களிடம் உள்ளது. மகளிர் நலத்துறை இயக்குநர் இது சம்பந்தமான தலைமைப் பொறுப்பாளராவார். சில பள்ளிகளில் மதிய உணவும் கொடுக்கப்படுகிறது. தங்கள் தங்களுடைய பகுதிகளில் இப்பதிப்பட்ட பள்ளிகள் அமைக்கப்பட வேண்டுமென மற்ற ஊராட்சி ஒன்றியங்களும் வலியுறுத்தி வருகின்றன. நான்காவது திட்டக் காலத்தில்

ஊர்ப்புறங்களில் மேலும் பல குழந்தைகள் காப்பகங்களைத் திறப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

குடும்பம்—குழந்தைகள் நலத்திட்டம் (Family and Child Welfare Projects:) நாட்டில் எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்துவதற்காக வேண்டி, 'குடும்பம்—குழந்தைகள் நலத்திட்டம்' ஒன்றினை மைய அரசு உருவாக்கியது. மைய அரசு மூலமாக இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணி, புதுடெல்லியில் உள்ள மத்திய சமூக நல வாரியத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில், இத்திட்டமானது மாநில சமூக நல வாரியத்தினுல் செயல்படுத்தப்படுகிறது. (1967-68இல் மூன்றும், 1968-69இல் நான்குமாக) தமிழ் நாட்டில் ஏழு ''குடும்பம்—குழந்தைகள் நல நிலையங்''களுக்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளது. 31-3-1969 வரை இதற்கான செலவினை மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் மைய அரசும் மாநில அரசும் ஏற்றுக் கொண்டன. கடுமையான நிதித் தட்டுப் பாட்டின் காரணமாக, 1968-69இல் முதற் கட்டமாக தமிழகத்தில் இரண்டு 'குடும்ப - குழந்தைகள் நல நிலையங்களைத்' துவக்குவதென முடிவு செய்யப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டம் வில்லிவாக்கம் வட்டாரத்தில் ஒன்றும், தென் ஆர்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் ஒன்றுமாக இரண்டு, 'குடும்பம் — குழந்தைகள் நல நிலையங்கள்' 15-9-1968 முதல் துவங்கப்படவேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தது. இந்நிலையங்களை நடத்தி, அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கவனித்து அதனுல் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், தமிழ் நாட்டில் இவை மாநிலம் மேலும் சில நிலையங்களைப் பின்னுல் ஆரம்பிக்கலாமா என்பது குறித்து முடிவு எடுக்கலாம் என்றும் கருதப்பட்டது. ஊர்ப்புறங்களில், மகளிர்-குழந்தைகள் நல வாழ்வுக்காக எடுக்கப்படும் திட்டங்களில் இதுதான் பெரியதும், தனித்தியங்கக்கூடியதுமாகும். ஊர்ப் புறங்களில் வதியும் மகளிர்க்கு, குறிப்பாக வேலைவசதியின்மை, வேலையில்லாமை பரவலாக உள்ள காலங்களில், வேலைவசதியும் வருவாய் வசதியும் அளிக்கின்ற ஒரு திட்டமாகும் இது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் அடங்கும்:

(அ) ஊர்ப் புறங்களில் உள்ள குழந்தைகளுக்கு, குறிப்பாக, முந்நிலைப் பள்ளிப் பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயப் பணிகள் மூலம் அச்சேவை கிடைக்குமாறு செய்தல்;

(ஆ) வீட்டுவேலை; தாய் என்ற முறையில் செய்யவேண்டிய பணி, சுகாதாரம், துப்புரவு, சத்துணவு அளித்தல், மகளிர்க்கு அவசியம் தேவையான சுகாதாரம், மற்றும் மகப்பேறு வசதிகள் போன்ற துறைகளில் வேண்டிய அடிப்படைப் பயிற்சியை மகளிர் மற்றும் பருவ மகளிர்க்கு அளித்தல்;

(இ) மகளிர் மன்றங்கள் மூலமும், குறிப்பாக இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்காக நல்ல முறையில் இயங்கும் நிறுவனங்கள் மூலமாகவும் ஊர்ப் புறங்களில் உள்ள மகளிர்க்கு உதவி செய்தல்; இதன் மூலமாகக் குடும்ப நலனைப் பெருக்கவும், பொருளாதார வசதியினைப் பெருக்கிக் கொள்ளவும் ஆவன செய்தல்;

(ஈ) கலாச்சாரத் தொடர்புடைய வசதிகள், கல்வி வசதிகள், மேலும் மனமகிழ் வசதிகள் போன்றவற்றை ஊர்ப்புறங்களில் உள்ள மகளிர், குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்தல்.

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை பொருந்திய காலம் அகன்றது; அனைத்துத் துறையிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகராக நின்று பணியாற்றும் நிலை வளர்ந்து வருகிறது. இது கண்டு தாய்க்குலம் மகிழ்கிறது. தாய்க்குலத்தின் நலம் பேணும் தமிழ்நாடு அரசுக்கு நன்றி செலுத்துகிறது!


———

இந்த விவசாயிகளிடையே போதுவாகக் காண்பது என்ன?



ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டும், அதன்மூலம் கிடைத்த சுபிட்ச வாழ்வும்.

நாடெங்கும் உள்ள விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்க வகை செய்வது, பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்.



ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது. ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப் பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, **பெஸ்ட்!**

BEST

பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.

(ஸ்தாபிதம் : 1879)
13/15, ஸார்த் பீச் ரோடு, சென்னை-1
தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சி ரோடு, கோயமுத்தூர்.
49-D, மதுரை ரோடு, திருச்சி-1.

Focus.BC.191Tam (a)

எல்லாம் தமிழ்

''ஒரு நாட்டின் ஆட்சி மொழி ஆவதற்கு, தாய்மொழி என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும், நம் தமிழ் மொழி நம் தாய்மொழி என்பதால் மட்டுமன்றி வளமிக்கது என்பதாலும், எவரும் வியந்து பாராட்டத் தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளருமாறும், செயல்களைச் செம்மையாக்கித் தருவது, நம்முடைய கடமையாகும். தமிழ், ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில், வெற்றி பெற்றிட, எல்லோருடைய நல்லார்வம் நிரம்பத் தேவை''

என்று 7-9-1967 அன்று மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில் ஆட்சி மொழியின் ஆக்கம்பற்றி, அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட இந்தக் கொள்கை விளக்கம், தமிழ் நாடு அரசின் ஆட்சி மொழி வரலாற்றில் புதிய படலம் ஒன்றைத் தோற்றுவித்தது.

''நான், என் காலத்தில் என்னால் முடிந்ததைச் செய்வேன். எனக்குப் பின் வருபவர்கள், அவர்களால் இயன்றதைச் செய்வார்கள். ஆட்சி, தொடர்கதையே தவிர, தனித்தனிச் சிறுகதை அல்ல''

என்று 26-5-1967இல், பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறுக, தமக்கே உரிய தனி அழகுணர்ச்சியுடன், 'ஆட்சி இலக்கணம்' ஒன்றை அவர் வகுத்தளித்தார். இஃது அனைவரின் சிந்தனைக்கும் விருந்தாக அமையத்தக்கது.

செயலர், ஆட்சி மொழிக் குழு

ஆட்சி மொழிச் சட்டம், 1956 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, தமிழகத்தில், தமிழ்தான் ஆட்சி மொழி என்ற கொள்கை உறுதியாயிற்று. இந்தக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகள் காணப்பட்டன. ஆட்சி மொழிச் சட்டம், அரசு அலுவலகங்களில், படிப்படியே, தமிழை ஆட்சி மொழியாக்க வழி வகுத்துள்ளது.

ஆட்சி மொழிச் சட்டம் இயற்றிய பின்னர், அதைச் செயற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கூறுதற்கு, திரு. சு. வேங்கடேசுவரன், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில், ஆட்சி மொழிக் குழு ஒன்று அமைக்கப் பெற்றது. திரு. சு. வெங்கடேசுவரன் அவர்களுக்குப் பின், அரசுத் தலைமைச் செயலாளராக இருந்த திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். அவர்களும், தலைமை நீதிபதியாக இருந்த திரு. எம். அனந்தநாராயணன் அவர்களும் ஆட்சி மொழிக் குழுவிற்குத் தலைவராய்ப் பணியாற்றியுள்ளனர். அண்மையில் திருத்தியமைத்த இக் குழுவில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்

செழியன் அவர்களும் தலைமைப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஆட்சி மொழிக் குழு அலுவலகம், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் மேற்பார்வையில் இயங்குகிறது. இவ்வலுவலகத்தில், குழுச் செயலாளர், மொழிபெயர்ப்புத் தனி அலுவலர், ஆய்வுத் தனி அலுவலர் ஆகிய மூவர் பணிபுரிகின்றனர். செயலாளர் அவர்கள், அலுவலகத்தை நடத்தி வருவதுடன், வாரம் ஒரு முறை, சென்னை மாநகரிலுள்ள அரசு அலுவலகங்களுக்குச் சென்று, ஆட்சி மொழித் திட்டம் எந்த அளவுக்குச் செயற்படுகிறது என்பதை, நேரில் கண்டு வருகிறார். ஆய்வுத் தனி அலுவலர் அவர்கள், மாவட்ட நிலை வரையிலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத்தையும் ஆய்வு செய்கிறார். மேலும், இவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டம் செயல்படுவது குறித்து, வாரிய உறுப்பினர் (Board Member) ஆய்வு செய்வதற்கும் உதவி புரிந்து வருகிறார். மொழி பெயர்ப்புத் தனி அலுவலர் அவர்கள், மொழிபெயர்க்கப்பெற்ற நடைமுறை நூல்கள், விதித் தொகுப்புகள் முதலியவற்றை ஆராய்ந்தறிவது, ஆட்சிச் சொல்லகராதிக்குத் திருத்தங்கள் செய்வது, மாதிரி வரைவுகளையும் குறிப்புகளையும் உருவாக்குவது முதலிய பணிகளைச் செய்துவருகிறார். [இம் மூன்று பொறுப்புகளையும் முறையே, திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ., (கிராம வளர்ச்சித் துறையில் மக்கள் தொடர்பு அலுவலராகவும், 'சீரணி' மாத இதழின் பதிப்பாளராகவும் இருந்தவர்), திரு. மு. இராமதாசு, பி.ஏ., திரு. நா. குருசாமி ஆகியோர் 1-11-1969 முதல் புதிதாக ஏற்றுள்ளனர்.]

ஆட்சி மொழிச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன; அவற்றுள் ஒருசில வருமாறு:

ஆட்சிச் சொல்லகராதி ஒன்றை வெளியிடும் பணியை, ஆட்சி மொழிக் குழு முதலாவதாக மேற்கொண்டது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தயாரித்து வைத்திருந்த ஆட்சிச் சொல் அகராதியை, ஆட்சி மொழிக் குழு ஆராய்ந்து, தக்க திருத்தங்களுடன் 1957ஆம் ஆண்டில் வெளியிட்டது.

இவ்வகராதி, மேலும் திருத்தப் பெற்று 1962-ல், இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது. 1964 ஆம் ஆண்டில், இவ்வகராதிக்கு "சேர்ப்பும் திருத்தமும்" ஒன்று வெளியிடப்பட்டது. இவ்வகராதியின் படிகள் தீர்ந்துவிட்டதன் விளைவாக, இதை மீண்டும் திருத்தி, மறு பதிப்பு வெளியிடும் வேலை தொடங்கியுள்ளது. இப்பணி, தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு. முத்து இராசாகண்ணனார், எம்.ஏ., பி.ஓ.எல். அவர்களின் மேற்பார்வையில் விரைவாக நடைபெற்று வருகிறது.

எல்லா அலுவலகங்களிலும், பொதுவாகப் பயன்படும் இவ்வகராதியோடு, ஒவ்வொரு துறைக்கும் உரித்தான சிறப்புச் சொற்களையும் அவற்றிற்கான இணைப்புச் சொற்றொடர்களையும் தொகுத்து; "துணை அகராதிகள்" அச்சிடப்பெற்று வழங்கப் பெற்றன. இவ்வாறுக, தமிழக அரசின் சுமார் 46 துறைகளுக்கான துணை அகராதிகள் தனித் தனியே அச்சிடப்பட்டன. இப் பொழுது திருத்தத்துடன் புதிய பதிப்புகள் விரைவில் வெளிவரவிருக்கின்றன. தலைமைச் செயலகத்திலுள்ள அனைவருக்கும் இவை கொடுக்கப்பட்டுள்ளன.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் (Accountant General's Office), தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வு ஆணைக் குழு அலுவலகம், கதர் கிராமக் கைத்தொழில் வாரிய அலுவலகம் ஆகியவற்றைச் சார்ந்த பணியாளர்களில், தமிழில் போதிய தேர்ச்சி இல்லாதவர்களுக்குத் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன. தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குத் தமிழில் வரைவுகளும் குறிப்புகளும் எழுதப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில், தமிழ்த் தட்டச்சுகளின் விசைப்பலகை, தரப்படுத்தியதாக இல்லை. ஆட்சி மொழிக் குழு தமிழ்த் தட்டச்சு விசைப் பலகையைத் தரப்படுத்தி, எல்லா

அரசு அலுவலகங்களுக்கும், தரப் படுத்திய தமிழ்த் தட்டச்சை வழங்க, தக்க ஏற்பாடுகளைச் செய்தது.

தமிழை ஆட்சிமொழியாகச் செயற் படுத்துவதில், தரமான தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றைத் தயாரித்து வெளியிடுவது முக்கியம் என்று ஆட்சி மொழிக் குழு கருதியது. குழுவின் பெருமுயற்சியால் தயாரிக் கப்பெற்று, 16-9-1965இல் வெளி யிடப்பட்ட தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் சிறந்த சாதனையாகும்.

ஆட்சி மொழிக் குழு மேற் கொண்ட மற்றொரு முக்கியப் பணி, விதிகள், நடைமுறை நூல்கள், விதித் தொகுப்புகள் முதலியவற் றைத் தமிழில் மொழிபெயர்த்து, அச்சிட்டு வழங்குவதாகும். மொழி பெயர்ப்புப் பணி, தகுதியும், திறமை யும், அனுபவமும் வாய்ந்த அலுவலர் களிடம் ஒப்படைக்கப்படுகிறது. பல துறைகளுக்கான விதிகள், நடை முறை நூல்கள் முதலியன தற்போது அச்சில் உள்ளன.

மாவட்ட அலுவலக நடைமுறை நூலின் (District Office Manual) இரண்டு பாகங்களும் தமிழில் வெளி யிடப்பெற்றுள்ளன. வருவாய் வாரிய நிலை ஆணைகளின் (Board Standing Orders) நான்கு தொகுதி களும், மொழி பெயர்க்கப்பட்டு அச்சில் உள்ளன. இவை தவிர, இது வரை 5 சட்டங்கள், 41 விதிகள், 13 விதித் தொகுப்புகள், 46 நடை முறை நூல்கள், பல துறைகளுக் கான படிவங்கள் (Forms) ஆகியவை மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. பல துறைகளுக்கான மாதிரி வரைவு களும் குறிப்புகளும் (Model Notes and Drafts) தயாரித்து வழங்கப் பெற்றன.

அண்மையில் தமிழ் வளர்ச்சிஇயக் குநர் திரு. முத்து இராசாக் கண்ண னார், எம்.ஏ., பி.ஓ.எல். அவர்கள் அளித்த குறிப்பில் எடுத்துரைப்ப தாவது :

* பேராசிரியர் திரு. சி. இலக்கு வனார் அவர்கள் 'தொல்காப்பி யத்தை' ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டமைக் காக ரூ. 5000 மானியமாக வழங்கப்பெற்றது.

* அரசு ஊழியர்களின் அந்தரங்கக் கோப்புகளில் எழுதப்படும் குறிப்புகளை இயன்றவரை தமி ழிலேயே எழுதவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள் ளது.

* வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியில் பட்டப் பின்படிப்பு தொடங்கு வதற்கு ஆண்டுக்கு ரூ. 10,000 வீதம் 1970-71இலிருந்து 5 ஆண்டுகளுக்கு நிதியுதவியளிக்க இவ்வரசு ஒப்புதல் அளித்துள் ளது.

* சிவில், குற்றவியல் நீதி மன்றங் கள் யாவற்றிலும் வாக்குமூலங் களை 1970 பொங்கல் நாள்முதல் (14-1-1970) தொடங்கித் தமி ழிலேயே பதிவு செய்யவேண்டு மென்று உத்தரவிடப்பட்டுள் ளது.

இவை அனைத்தும் தமிழ் மேம்பாட் டுக்காகவும், எல்லாம் நம் தாய் மொழியில் என்ற அரசின் கொள்கை யைச் செயலாக்கம் செய்வதற்கும் அடையாளங்களாகும்.

தமிழ்நாடு அரசு 23-12-1969 அன்று வெளியிட்ட ஆணையின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவ லகங்களையும், அவர்களுடைய சார் நிலை அலுவலகங்களையும், துறைத் தலைமை அலுவலகங்களையும் தமிழ் ஆட்சிமொழித் திட்டம் செயல் படுவது குறித்துத் தமிழ்வளர்ச்சி இயக்குநர் அவ்வப்போது ஆய்ந்து காணும் பொறுப்பு அளிக்கப்பட் டுள்ளது.

1957ஆம் ஆண்டு முதலாக ஆட்சி மொழிச் சட்டம் படிப்படியே பல் வேறு நிலைகளில் செயற்படுத்தப் பட்டு வந்திருந்தாலும், கடந்த ஆண் டில் ஆட்சித்துறையில் குறிப்பிடத் தக்க இரு திருப்பங்கள் ஏற்பட் டுள்ளன.

துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று 27-9-69இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளதை மாண்பு மிகு முதலமைச்சர் கலைஞர் கருணா நிதி அவர்கள் செய்தியாளர் கூட்டத்

தில் அறிவித்திருப்பதை அனைவரும் அறிந்திருப்பர்.

இதை அடுத்து 27-12-69 அன்று தலைமைச் செயலாளர் திரு. இ. பி. இராயப்பா, ஐ.ஏ.எஸ். அவர்கள் பெயரால் வெளியாகியுள்ள அரசு ஆணை, தமிழ்நாடு ஆட்சிமொழி வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்க தாகும்.

இவ்வாணையின்படி, தலைமைச் செயலகத்தில் சட்டம், நிதி, சட்ட மன்றம் ஆகிய துறைகள் தவிர மற்ற துறைகளில் ஒரு சில விதிவிலக்கு களுக்கு உட்பட்டுத் தமிழ்மொழியை விரிவாகப் பயன்படுத்தும் திட்டம் செயலாகத் தொடங்கியது.

1970ஆம் ஆண்டில் தமிழ் மக்க ளுக்கு தமிழகஅரசு அளித்துள்ள இந்த இனிப்பான செய்தி, எதிர் காலத்தில் தமிழ் பெறும் ஏற்றத்தின் அடையாளமாகும்!

இதனை, அரசு அலுவலர்கள் அனை வரும் ஆர்வத்துடனும் ஊக்கத்துட னும் பெருமளவில் பயன்படுத்திக் கொள்வோமாக!

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவை

அருமையாய் வகுத்து வைத்த
அகத்துக்கோர் புறம்நான் இன்ப
விரிவுரை கூறும் வண்ணம்
விளைந்ததென் பருவம் 'யாவும்
தெரிவையா?' என்ற கேள்வி
தேவையில் லாத வாறு
'தெரிவை நீ' என்றுர் நல்ல
தேன்சுவை! சேலைத் தென்றல்!

(வேறு)

பேரிளம் பெண்

இளம்பெண்ணின் முடிவுரைநான் தொட்டால் வீழும்
இரசதாளிப் பழம்போலக் கனிந்த மாது
களங்கண்ட அகப்போரின் வெற்றி கண்ட
கவிப்பரணி நானென்பேன்! அல்லி ஆடைக்
குளம்போல அனுபவங்கள் தேக்கி வைத்துக்
கொண்டவள்நான்! ஆறேழைப் பெருக்கிக் கொண்ட
அளவுவரை தொடர்பவள்பேர் இளம்பெண் என்றே
அழைப்பார்கள்! மூன்றும்பால் விரிவு ரைநான்!



உற்பத்திப் பெருக்கமும் உழைப்பாளர் நலமும்

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளேக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

என்று புரட்சிக் கவிஞர் போற்றிய தொழிலாளர்களின் தோள்கள்தான் இந்த வையகம் என்ற கோளத்தை எழில் குலுங்கும் சோலையாய் மாற்றி யமைத்துள்ளது.

படைப்பாளன் உலகை உருவாக்கி ஞன்; மனிதனைப் படைத்தான்; அத்தோடு படைப்பாளனின் பணி முடிந்தது.

ஆனால் பாட்டாளிதான் படைப் பாளி விட்ட பணியைத் தொடர்ந்து ஆற்றினான். உலகம் அற்புதங்கள் மண்டிய அழகு நாடாக உருமாறி வருகிறது.

தொழிலாளர், சமுதாயம் என்னும் உடலின் கைகளைப் போன்றவர்கள். சமுதாயம் என்ற உடலின் விழிகள் போன்ற மேதைகள், மூளை போன்ற ஆட்சியாளர்கள், செவிகள் போன்ற அலுவலாளர்கள்முதலியோர் மிகமிக இன்றியமையாதவர்கள் என்றாலும், விழிக்கோ, காதுக்கோ காயம் ஏற் பட்டால் உடனே ஒடித் துணை புரியும் கைகளைப் போன்றவர்கள் தொழிலாளர்கள். மேற்கண்ட அறிவாளருக்கும் ஆட்சியாளருக்கும் உயிர்வாழ உணவு, உடை, உலகத்து வசதிகள் அத்தனையையும் உருவாக்கித் தருபவர்கள் பாட்டாளிகள் அல்லவா? உலகத்தாரின் தேவைகள் என்கிற வரங்களை அளிக்கும் தேவதைகள் தொழிலாளர்களே.

மாண்புமிகு கா.வேழவேந்தன், பி.ஏ., பி.எல்.,
(தொழிலாளர்நல அமைச்சர்)

ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தின் உயர்வே, அந்த நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திலே அடங்கியிருக்கிறது.

விரைவான உற்பத்திப் பெருக்கம் இல்லாவிட்டால் அந்நாட்டு மக்களின் உணவு வசதி, உடை வசதி, உறையுள் வசதி, உல்லாச வசதிகள் பெருகுவதற்கு வழியுண்டா?

உற்பத்தித் திறனைப் பெருக்க மூன்று முக்கிய வழிகள் உள்ளன. நாடெங்கும் புதுப்புதுத் தொழில்களை உருவாக்கவேண்டும். தொழிற்சாலைகளில் தாமேஇயங்கும் புதுவகை இயந்திரங்களையும் செய்முறைக் கருவிகளையும் நிறுவிடவேண்டும்.

அடுத்து, தற்போதுள்ள இயந்திர வசதி தொழில் வசதி ஆள் வசதிகளை க்கொண்டே திறமான, தரமான உழைப்பின்மூலம் உற்பத்தி

யைப் பெருக்கிடவேண்டும்.

புதுப்புதுத் தொழில்கள் ஏற்பட அடிப்படை மூலப் பொருள்கள் மூலதனம் ஆகியவை தேவைப்படுகின்றன. அவற்றில் தாமேஇயங்கும் இயந்திர சாதனங்களே எல்லாவற்றிலும் புகுத்துவதால் நாளும் நாளும் உற்பத்தியாகும் மனித இயந்திரங்களுக்கிடையே வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகுமோ என்ற பேரச்சம் இருக்கிறது.

எனவே, தரமான உற்பத்தித் திறன்மூலம் நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயலவேண்டும்.

திட்டவட்டமாகச் சொன்னால் உற்பத்தித் திறன் என்பது உற்பத்திக் காகச் செலவிடப்படும் பொருள், சக்தி இவற்றின் அளவிற்கும், உற்பத்தியான பொருள்களின் அளவிற்குமுள்ள விகிதமேயாகும். (Productivity is the ratio of input to output) என்று சொல்லுவார்கள். ஒரு தொழிலாளி ஒரு மணி நேரத்தில் எவ்வளவு பொருள் உற்பத்தி செய்கிறான், ஓர் இயந்திரம் ஒரு மணி நேரத்தில் எவ்வளவு பொருள் செய்கிறது, ஓர் ஏக்கர் நிலம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு உற்பத்தி செய்கின்றது ஆகியவற்றைக் கொண்டு, தொழிலாளி, இயந்திரம், நிலம் இவற்றின் உற்பத்தித் திறனை அளவிடமுடியும்.

எடுத்துக்காட்டாக எண்ணூயிரம் தொழிலாளி பணிபுரியும் ஒரு பஞ்சாலையில் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் மற்றோர் ஆலையில் 6000 தொழிலாளிகளைக் கொண்டே ஒரே நாளில் அதே ஒரு லட்சம் துணி உற்பத்தியாகின்றது என்றால் அந்த இரண்டாம் ஆலையின் உற்பத்தித் திறன்தான் இன்றைய நெருக்கடியைப் போக்க உரிய தீர்ப்பு ஆகிறது. இரண்டாம் ஆலையில் ஏன் அதிக உற்பத்தி காணப்படுகிறது?

1. அதற்குக் காரணம், அவர்கள் சிறந்த இயந்திரங்களைப் பயன்படுத்தலாம்.

2. இரண்டாம் ஆலை இயந்திரங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படலாம்.

3. இரண்டாம் ஆலையில் பயன்படுத்தப்படும் பஞ்சின் தரம் சிறப்பாக இருப்பதால் இழை அறுதல் போன்ற வீணுக்கம் குறையலாம்.

4. தொழிலாளிகளின் திட்ட மிட்ட கட்டுப்பாடு, நேரம் தவருத உழைப்பு, சீரிய ஊக்கம் ஆகியவை காரணமாக இருக்கலாம்.

5. காலத்துக்கு ஏற்றவகையில் தொழிலாளி, முதலாளி உறவு சிறந்த முறையில் அமைந்து இருக்கலாம்.

ஆகவே மேற்கண்ட காரணங்களால் உற்பத்திப் பெருக்கு அதிகமாகிறது.

தொழிலாக்கத்திலே கிடைக்கும் இலாபத்தில் உழைப்பாளிகளுக்கும் நியாயமான பங்கு கிடைக்கவேண்டும்.

தொழிற்சாலைகளில் தொழிலாளரின் சுகாதாரம், சீருடன் இருக்க நல்ல வெளிச்சம், காற்றோட்டம், பாதுகாப்புச் சாதனங்கள், தண்ணீர் வசதி, உணவு விடுதி வசதி, மருத்துவ வசதி ஆகியவை சரியான அளவில் செய்யப்படவேண்டும்.

ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளியின் உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதியும், மகிழ்ச்சியும் இல்லையானால் அது தொழிலகத்திலும் எதிரொலிக்கும். கவலையற்ற தொழிலாளியே கனவேகமாகப் பணி புரிந்து உற்பத்தியைப் பெருக்கமுடியும். ஆகவே தொழிலாளியின் ஊதிய உயர்வைப் பெருக்குவதை மட்டும் அல்லாமல் அவனுடைய வாழ்க்கை வசதியை மேம்படுத்துவதற்கு நியாய விலைக் கடைகள், கூட்டுறவு நிதி உதவிச் சங்கங்கள், பொழுதுபோக்கு வசதிகள், வீட்டு வசதித் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கவேண்டும்.

உழைப்பாளரின் வாழ்க்கை நலமும் உற்பத்திப் பெருக்கமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன.

தமிழக அரசு தமிழ்நாட்டில் தொழிலமைதியை நாட்டி உற்பத்திப் பெருக்கத்தை உயர்த்தவேண்டும் என்று எல்லா வகையிலும் முயலுகிறது. அதே நேரத்தில் தொழிலாளிக்குச் சமுதாய நீதி கிடைக்கவும், அவர்களின் நல்வாழ்வு வசதிகள்

உயரவும், தொழிலாளர் நலத்துறை என்றும் துணை நிற்கும் என்று தொழிற்சங்கத் துறையிலே ஈடுபாடு கொண்டிருந்த நான் திட்டவட்ட மாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

புதுப்புது வாய்களும் வயிறுகளும் வெகு வேகமாக உருவாகிக் கொண்டே யிருக்கும் இந்தக் காலத் தில் உற்பத்திப் பெருக்கம் உயர்ந் தால்தான் எதிர்கால நெருக்கடியைச் சமாளிக்க முடியும்.

"காதலுக்கு வழிவைத்து,கருப்பைச் சாத்த கதவொன்று கண்டறிவோம். இதில் என்ன குற்றம்?'' என்று சொன்ன கவிஞரின் வாக்குப்படி மனித உற்பத்தி வேகத்துக்குக் கத வடைப்புச் செய்வோம். ஆனால் நாட் டின் தொழில்வள உற்பத்தி பெருக, கதவடைப்புகள் இல்லாமல் பார்த் துக்கொள்ளவேண்டும்.

அதே நேரத்தில் தொழிலகங்களில் சுமுகமான தொழிலாளி முதலாளி உறவு நிலவிடப் பாடுபடுவோம். எல்லாப் பிரச்னைகளையும் இருதரப் பாரும் கூடிப் பேசி, அமைதியான தீர்வு காணவேண்டும் என்பது தமிழக அரசு சார்பில் நான் கூறிய கருத்தாகும். ஒரு தொழிலகம் என் பது அகல் விளக்கென்றால் அதிலே இருக்கும் திரியாக முதலாளிகள் இருக்கிறார்கள். திரியை ஏற்றும் தீயாக மூலதனம் இருக்கிறது. அந்த விளக்கின் திரி எரிந்து உற்பத்தி என்கிற ஒளி தொடர்ந்து பரவவேண் டும் என்றால் தொழிலாளர் என்கிற எண்ணெய் மிகமிகத் தேவைப்படு கிறது. திரி இல்லாமல் அகல் விளக்கு இல்லை. எண்ணெயே தேவையில்லை என்றாலும் விளக்கு நீண்ட நேரம் எரியாது. ஆகவேதான் தொழிலதி பர்களும், தொழிலாளிகளும் இந்த உறவை மனதிலே வைத்துச் சீரிய பணியாற்றவேண்டும்.

திரியே மங்கலாக எரியுமானால் அதைத் தூண்டிவிடும் சிறு தூண்டு கோலாகத் தொழிற்சங்கங்கள் பணி புரியவேண்டும். தூண்டுகோல் பல மாகத் திரியை தள்ளிவிடுமானால் திரி தூரத்திலே போய் விழுந்து விளக்கே காணமல் போய்விடுகிறது. ஆகவே அகல் விளக்கென்ற தொழிற்சாலை யில் எண்ணெய்யாக இருக்கிற தொழிலாளியும், திரியாக இருக்கிற தொழிலதிபர்களும்,தூண்டுகோலாக இருக்கிற தொழிற்சங்கங்களும் ஒன் றோடு ஒன்று பொருந்தி இனிய வசதி யில் நடைபோட்டால்தான் உற்பத்தி என்கிற நல்லொளி தொடர்ந்து சமுதாயம் என்கிற வீட்டுக்கு கிடைக் கும். இந்த அரசாங்கம் மேற்கண்ட அழகான தொழில் உறவை வளர்க்க வேண்டும் என்றும் தொழிலாளர் வசதிகளைப் பெருக்கவேண்டும் என் றும் முன்வந்து செயல்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற அண்ணா நாட்டுத் தொழிலாளர் நிறுவனப் பொன்விழா நிகழ்ச்சியில் தமிழ் நாட்டின் முதல் அமைச்சரான கலைஞர் அவர்கள் எதிர்காலத்தில் தமிழக அரசு உருவாக்கப்போகும் தொழிலாளர் நலச் சிறப்புத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மேற்கொண்டு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முயன்று பணி யாற்றி வருகிறது. எனவே தொழி லாளர் பெருமக்களே, தொழிலதிபர் களே, உங்களின் சீரிய ஒத்துழைப்பில் தான் ஒளிமயமான எதிர்காலத்தைக் காணமுடியும். உயர்க தொழில்! உயர்க தொழில்வளம்! ஓங்குக தொழிலாளர் நலம்!

பெண்ணே பெருந்தெய்வம்

அன்னை யெனவந்து அன்பின் அமுதீந்து
கண்ணுய் நமையென்றும் காப்பதினால் - மண்மீது
விண்ணோர் பெருவாழ்வை வேண்டிப் பெறினும்தான்
பெண்ணே பெருந்தெய்வம் பேசு!

— கூரூர் முத்துவடிவன்



அவள் முகத்திலா விழிக்கக் கூடாது?

பூதலூர் முத்து

விடுமுறை முடிந்துவிட்டது.

நீண்டக்கையிலேயே ஓர் இதமாய் - நெஞ்சுக்குக் குளிர்ச்சியாய், நினைக்க நினைக்கப் புளகாங்கிதமடையச் செய்த அவன்-பாஸ்கரன் சொந்த மண்ணேவிட்டு இன்னும் கொஞ்ச நேரத்தில் இரயிலேற வேண்டும்.

இந்தியாதான் என் சொந்த மண் என்று பரந்த அளவில் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிக் கொண்டாலும், மழைத் தூறல் விழுந்து நெஞ்சுக்கினிய மணத்தை அளிக்கும் அந்தக் கிராமத்து மண்ணே - நெஞ்சுக்குள்ளே பாசத்தின் காரணமாக உயர்வு படுத்தி அது தவறு என்று தெரிந்தாலும் இன்னும் 'எனக்கு நெருங்கிய சொந்த மண்' என்று அவன் நினைத்துக் கொண்டான்.

லெப்டினன்ட் - கர்னல் பாஸ்கரன் தியாகோட்டை முனையில் செய்த அருஞ் செயல்களையெல்லாம் வீர காவியமாய் அவன் கம்பீரமான புகைப்படத்தோடு தினத்தாள்களிலும் மற்ற இதழ்களிலும் கண்டு மெய் சிலிர்த்தவர்கள்தான் இந்தக் கிராமத்துக்காரர்கள்.

அந்தத் தர்ம யுத்தத்திற்குப் பிறகு பாஸ்கர் இரண்டு மூன்று தடவை அவன் ஊருக்கு வந்திருக்கிறான்.

'வாடா பாஸ்கரா!' என்று உரிமையோடு அழைக்கும் குரல்கள் இப்போது குறைந்திருந்தன.

'பாஸ்கர் பெரிய அதிகாரியாகிவிட்டார்' என்று அவர்கள் நினைத்துக் கொண்டாலும் கூட, 'பாஸ்கரா' என்று அன்பொழுக உரிமையோடு கூப்பிடவில்லையே என்ற ஏக்கந்தான் அவனுள் எழுந்தது.

''வாய்ப்பு வசதிகள் பெருகப் பெருக அன்பின் இறுக்கம் தளர்வது போல் - பதவியைப் பெரிதாக நினைத்து இவர்கள் அன்பைக் குறைவாக நினைப்பேன் என்று நினைத்துக் கொண்டார்களோ பாவம்!'' என்று எண்ணிக்கொண்டான் பாஸ்கர்.

கட்டிப் பிடித்து, தரைப்படை, விமானப்படை, கப்பல்படை என்று கேள்விக்கு மேல் கேட்டுத் துளைக்கின்றவரெல்லாம் ஏனோ ஒதுங்கி நின்றார்கள்.

பாஸ்கரனே ஓடிஓடிக் குப்புசாமியையும் முருகேசனையும் வேலுவையும் கொல்லைக் காட்டிலிருந்து பிடித்து வர வேண்டியதாயிருந்தது.

சேவைக்குப் பிரக்யாதி பெற்ற மண் பாஸ்கரனுடைய ஊர் மண். கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாய் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு வெளி உலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், வாழ்க்கையை அனுபவிப்பதாக நினைத்துக் கொண்டு 'செக்கு மாடுகள்' போல எல்லோரையும் போலவே இலட்சியமில்லாமல் உழன்று கொண்டிருப்பதை விட்டு இராணுவத்திற்குப் போன வெகு

ஆட்கள் பிறந்தது இந்த மண்ணில் தான்.

போகும்போது என்ன விருப்பு வெறுப்புக்களால் போனலும் கூட, நாட்கள் ஆக ஆக மனவளர்ச்சி ஏற்பட்ட பின் பரந்த நோக்கோடு பிறந்த மண்ணைக் காப்பது தங்கள் உயிர்க்கடமை என்று எண்ணிப் பெரு மிதப்பட்டார்கள். அவர்கள் நீலவில், நெடியுயர்ந்த தென்னைமரங்கள் -நீர்சுழித்தோடும் மதகு - 'அக்கா குருவி'யின் ஓசை - பச்சைப்பசேல் வயல்கள் இவையெல்லாம் அத்தை மகனைப் போல வந்து அடிக்கடி கண் சிமிட்டும். சின்னஞ்சிறிய வயதில் புழுதியோடு புழுதியாய்த் தெருவிளையாட்டு விளையாடிய அந்தச் சொந்த ஊர் நினைவுகளும் கூடவே வரும்.

அந்த ஊரை - மீண்டும் மீண்டும் பார்க்கப் பார்க்க, நினைக்க நினைக்கச் சலிக்காத ஊரைவிட்டு விடுமுறை முடிந்துவிடவே பாஸ்கரன் புறப்படுகிறான்.

அவன் அம்மா லட்சுமிக்குக் கூடச் சற்று வருத்தம்தான்.

வயது இருபத்தெட்டுக்கு மேல் ஆகியும் அவன் இன்னும் திருமணத்திற்குச் சம்மதிக்காமல் இருப்பதால் அவளுள் ஏற்பட்ட வருத்தம்—

''இலட்சியவாதிகள் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது தானம்மா ரொம்பவும் நல்லது; எல்லோரும்தான் கல்யாணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சராசரி மனிதனுக்கும் எனக்கும் என்னம்மா வித்தியாசம்?'' என்று அவன் கேட்பது அவளுக்கு விளங்காமல் இருக்கும் கேள்வி.

'எல்லாம் போகட்டும்; வந்த பிள்ளை இன்னும் பத்து நாளைக்கு இருந்துவிட்டுப் போகலாம். அதுவும் முடியாதாமே...!'

லட்சுமியின் மிகப்பெரிய வருத்தம் இது. ''எனக்கு விருப்பம்தானம்மா... புதுடில்லியிலிருந்து உடனே திரும்பி வரச் சொல்லிக் கடிதம் வந்திருக்கிறதே...!''

இது பாஸ்கரனின் சமாதானம். 'என் மகன் மிலிடரியிலே லெப்டினன்ட் கர்னலாமய்யா... என்ன தெரியும் உமக்கு அவன் பெருமை?' என்று உசத்தியாகச் சொல்லிக் கொண்டு தன் பெரிய மீசையைத் தடவி விட்டுக் கொள்ளும் பாஸ்கரனின் தந்தை அவனுக்கருகிலேயே இருந்தார்.

எதற்கும் கவலைப்படாத - ஆழமாக வருத்தந்தோயாத தந்தை மனம்.

''லீவு தான் இல்லேங்கிறனே லட்சுமி... பாஸ்கரன் போகட்டும், நல்லபடியா போய்வரச் சொல்லி அனுப்பு...'' என்றார் அவர்.

கமலத்திற்கும் ரவிக்கும் மிகவும் மனம் துன்பம் அடைந்தது. அவர்கள் இருவரும் பாஸ்கரனின் தங்கை தம்பிகள்.

உலக அனுபவங்களால் கூராக்கப் படாத இதயங்கள். யாரையும் சொல் அம்புகளால் தைக்காத சிறு உயிர்கள். பாஸ்கர அண்ணனின் பிரிவு அவர்களை வழக்கம்போல் கண்ணீர்விட வைத்தது.

'ஆடிக்கும் அமாவாசைக்கும் வருகிறான் அண்ணன். மறுபடி டெல்லி, பூனு, பஞ்சாப் எல்லே, பாகிஸ்தான் எல்லேயருகே இந்திய முகாம் இப்படி ஓடிக்கொண்டிருக்கிறனே...! என்ற நினைவு அவர்கள் இதயத்தில் சுமையாகிக் கண்ணீரை வரவழைத்தது.

உடை - கம்பீரமான வெள்ளை உடை - பெட்டி படுக்கைகளை வேலு எடுத்துக் கொண்டான்.

''வேலு என்னிடம் ஒரு பெட்டியைக் கொடு... உனக்கு ரொம்பவும் சிரமம் தரக்கூடாது பார்'' என்று சிரித்துக்கொண்டே ஒரு பெட்டியைக் கையில் வாங்கிக் கொண்டான் பாஸ்கர்.

அப்பா, அம்மா காதில் என்னவோ சொன்னார்.

வீட்டைவிட்டுப் புறப்படும்போது யார் வீதியில் எதிரே வருகிறார்கள் என்று பார்க்கவேண்டாமா?

''கமலம் வெளியே போய்ப் பார்...''

கமலம் வெளியே போய் வீதியை பார்த்து விட்டு வந்தாள்.

''யாரும், இல்லேம்மா...''

''பாஸ்கரா புறப்படு... வீதியிலே துர்ச்சகுனமா யாரும் வரலே... இது தான் நல்லவேளே...''

பாஸ்கரனுக்கு இந்தச் சகுனம் பற்றிய வார்த்தையே ஒரு மாதிரி வருத்தத்தைத் தந்தது.

திண்ணையைத் தாண்டி வாயிற்படிக்கு வந்துவிட்டான் பாஸ்கர்.

யாரோ வீதியில் அவனுக்கெதிரே அவசர அவசரமாக வந்தார்கள்.

லட்சுமி அந்த உருவத்தைப் பார்த்துவிட்டாள்; நெற்றித் திலகமில்லாமல் - கழுத்தில் தாலியில்லாமல் - உடலோப் போர்த்திக் கொண்டு ஓடிசலாய் - சோக உருவாய் இருந்தாள் அந்தப் பெண்மணி.

லட்சுமிக்கு முகம் சுணங்கிவிட்டது. ''டேய் பாஸ்கரா கீக்கிரம் உள்ளே போடா; அந்த அஞ்சலே - மாங்கல்யம் இழந்து, மஞ்சள் குங்குமம் போனவ வந்துட்டா; புறப்படும் போதே சகுனத்தடை. அவ அந்தப் பக்கம் போனதுக்கப்புறம் போகலாம்...''

இந்தச் சொற்கள் இதயத்தை ஈட்டி கொண்டு பாய்ச்சியது போலிருந்தது அவனுக்கு.

அஞ்சலே!

அவள் முகத்திலா அவன் விழிக்கக் கூடாது?

உந்திவந்த நினைவலைகள் மறுபடியும் அவன் நெஞ்சைச் சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. கொதித்தெழுந்த அவன் நெஞ்சு லட்சுமி பக்கம் திரும்பியது.

''அம்மா யாரைப் பார்த்து இந்த வார்த்தைகளைச் சொன்னாய்?'' சடங்குகள், சம்பிரதாயங்கள் என்று மனிதத்தன்மையில்லாமல் வாழும் இந்த வாழ்க்கை பிடிக்காததனால் தானே நான் திருமணமே செய்து கொள்ளாமல் காலத்தைக் கடத்துகிறேன்.

அஞ்சலேயம்மாளை உனக்குத் தெரியாதா? ஏழை என்பதற்காக அவள் தியாகத்தையும் மறந்து விடுவது தான் மேட்டுக்குடியின் பண்பாடா? அந்தம்மா கணவனே இழந்துவிட்டால் நீயும் இந்த ஊரும் அவளுக்கு கம்மனுட்டி - அறுத்தவள் என்று பட்டம் கட்டிவிடலாம். ஆனால் இந்த நாடு அவளுக்கு வீரத்தாய் என்று பட்டம் சூட்டியிருக்கிறது. அதை மறந்துவிட்டாயே அம்மா.

இத்தனை வயதாகியும் மனிதப் பண்புகளை - மனிதாபிமான உணர்வுகளை நீங்கள் வளர்த்துக் கொள்ளாமல் இன்னும் வேறுபாடு காண்பதிலேயே சுகம் காண்கிறீர்களே! இது நல்ல அறிகுறி அல்ல அப்பா...''

பாஸ்கரனுடைய தந்தை தலையைக் குனிந்து கொண்டார்.

சாதியின் பெயராலும் தாலி அறுத்தவள் என்ற பட்டத்தாலும் மேலோட்டமாக அஞ்சலேயை நினைத்து வெறுத்து ஒதுக்கத்தான் இந்தப் பாழும் மனம் சம்மதித்ததே தவிர அவளுக்குப் பின்னுல் மறைந்திருந்த தியாக வாழ்க்கையை மருந்துக்குக் கூட அது நினைக்கவில்லே.

பாஸ்கரனின் தந்தைக்கும் தாய்க்கும் அஞ்சலேயைப் பற்றிய உயரிய நினைவுகள் இப்போதுதான் மெள்ளத் தலேயெடுத்தன.

பாஸ்கரன் ஓயவில்லே.

'சியால்கோட் முனேயிலே அப்போது நடந்த தர்மயுத்தத்தில் என்னுடைய தலேமையில் பாகிஸ்தானியர்களோடு போராடி வீர மரணம் எய்தியவர் இவளுடைய கணவர். அதற்காக இவளுக்கு வீரப் பதக்கத்தை இந்திய அரசு வழங்கியிருக்கிறது.

அம்மா அது போகட்டும் - அஞ்சலே யுடைய கணவன் போதாதென்று மகனேயும் யுத்த களத்திற்கு - ராணுவத்திற்கு அனுப்பியிருக்கிறாளே - கணேசன் அவனே உனக்குத் தெரியாது?''

விக்கித்துப் போய் நின்றாள் லட்சுமி.

'இந்திய மண்ணின் தியாக வரலாற்றிலே இப்படி ஒன்றி நிற்கிற — சம்பந்தப்பட்டு வாழ்கிற அஞ்சலேயின் முகத்தில் விழிக்காமல் பின் நான் யார் முகத்தில் விழிப்பது? காலேயில் எழுந்ததும் நல்ல நல்ல மலர்களே - வாழவைக்கும் பச்சை வயல்களே - உயர்ந்த கோபுரங்களைப்

பார்ப்பதுபோல் அஞ்சலையைப் போன்ற தியாக முகங்களைப் பார்ப்பதையும் பெருமையாக நினைக்கிறேன். அம்மா இந்த மண் உயிர்ப்புள்ள மண் - உணர்ச்சியுள்ள மண் - தியாகத் திருநாடு என்பதைக் காட்டுவதே இத்தகைய வடிவங்கள் தானே.'

பாஸ்கரன் உணர்ச்சியோடு - லட்சுமிக்குப் புரிகிறதோ இல்லியோ புரியவேண்டும் என்ற நோக்கத்தோடு பேசிக் கொண்டிருந்தான்.

லட்சுமி தன்னுடைய வார்த்தைகளுக்கு

போது அஞ்சலை தியாக வடிவாய் - தெய்வமாய்க் காட்சி அளித்தாள்.

''அஞ்சலையின் முகத்தில் விழித்தாலும் புண்ணியமுண்டு, இந்தச் சாதாரண மனிதர்கள் கிழங்கட்டைகள் முகத்தில் விழிப்பதைக் காட்டிலும்...'' என்று எண்ணினார்கள் ரவியும் கமலமும்.

''காலேயிலேயே வந்து தன் அருமை மகன் கணேசனுக்கு ஏதாவது தின்



வருத்தம் தெரிவிப்பவளைப்போலக் கண்ணீரைச் சிந்திக் கொண்டிருந்தாள்.

'அம்மா ஏன்தான் இப்படிச் சொன்னளோ' என்று கமலமும் ரவியும் நினைத்துக் கொண்டார்கள். தாய், தந்தை கூறிய சொற்களை வைத்து அஞ்சலையைச் சகுனத்தடையாக - கும்மனட்டியாகவே நினைவில் கொண்டிருந்த அவர்களுக்கு இப்

பண்டங்களும் செய்தியும் என் மூலமாக அனுப்ப நினைத்தவள் முடியாமல், நான் புறப்படும் நேரத்தில் அடித்த தெருக்கோடியிலிருந்து வேக வேகமாக வந்திருக்கிறாள். அதை உணர்ந்து கொள்ளச் சக்தியில்லாமல்...''

''பாஸ்கரா, எனக்கு வயசாயிடுச்சே தவிர உண்மை எதுன்னு புரியாம கண்மூடித்தனமா சம்பிர

தாயப்பாட்டையிலேயே போய்ட் டேம்ப்பா...''

பெரிய மனிதரான தன் தந்தையே உண்மையை ஒத்துக்கொண்டு மனம் வருந்தியது பாஸ்கரனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

''அம்மா நீங்க பட்டம் சூட்டிச் சூட்டிப் பயந்துபோன அந்த அம்மா எனக்குச் சகுனத்தடை ஆகக் கூடாதுன்னு மூணுவது வீட்டிலே நுழைஞ்சிட்டாங்க. அவங்களேப் போய்க் கூட்டிவா...''

லட்சுமி யுகசாந்திக்குப் போவது போல் அடிமேல் அடியெடுத்துப் போனாள்.

'இன்னும் தீண்டத்தகாதவங்க... மேல்சாதி கீழ்சாதி வேறுபாடு தேவை தானு... இவ்வளவுக்குப் பிறகும் அம்மா இப்படி நடுங்குகிறாளே அந்த அஞ்சலையைக் கூட்டி வர...'

இந்த எண்ணங்களும் அவனுள் இழையோடின.

லட்சுமி அஞ்சலையை அரவணைத்துக் கூட்டி வந்தாள்.

ஊர் உலகம் கூடிக்கூடி அவளுக்குச் சூட்டிய பிரதேசப் பட்டத்தால் சோகம் கப்பிப்போய்க் கிடந்த அந்த முகத்தில் - நாடு சூட்டிய பட்டத்தால் ஒரு பெருமித ஒளியும் பொங்கிப் பரவியிருந்தது.

அது பாஸ்கரனுக்குத்தான் தெரியும். வாடிப்போயிருந்த அந்த உருவத்தின் கைகளில் மகன் கணேசனுக்காக சிறு டின் ஒன்றும் இருந்தது.

'வாங்கம்மா, உட்காருங்க! என்று அன்பொழுகக் கூறி நாற்காலியைக் காட்டினான் பாஸ்கர்.

பெரியவர் - லட்சுமி - ராணுவ அதிகாரி! கூச்சமாக இருந்தது அந்தத் தியாகத் தாய்க்கு...

''சும்மா உட்காருங்கம்மா...'' என்று எல்லோரும் ஒருசேரக் குரல் கொடுத்தார்கள்.

அஞ்சலை நெஞ்சு படபடக்க - பெருமிதம் பரவிவர அந்த நாற்காலியில் அமர்ந்தாள். அந்த முகத்தைத் தெய்வ தரிசனம் போல எல்லோரும் ஒரு தடவை பார்த்தார்கள்.

'நல்ல நல்ல மலர்கள், வாழவைக்கும் பச்சை வயல்கள், உயர்ந்த கோபுரங்கள்' அஞ்சலையைப் பார்த்தும் அவர்கள் நினைவில் பளிச்சிட்டன.

''அஞ்சுமணி வண்டி போற சத்தம் கேட்குது பாஸ்கரா...'' என்றான் வேலு.

''போனால் போகட்டும். அடுத்த வண்டி எட்டு மணிக்கு. அதில் போகிறேனே அம்மா!''

பாஸ்கரனின் குரலில் பெருமிதத்தோடு கூடிய கம்பீரம் தொனித்தது.

உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குயிராய் இன்பமாகிடும்
உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா!
ஊது கொம்புகள்! ஆடுகளி கொண்டே!

— பாரதியார்



உறுப்பினர்கள்

1.	முத்தையன்	—	ஊராட்சித் தண்டலர்
2.	பாலசுந்தரம்	—	தெளிவற்ற முரடன்
3.	சித்தலிங்கம்	—	தன்னலம் மிகுந்த செல்வர்
4.	பொன்னன்	—	சித்தலிங்கத்தின் பணியாள்
5.	மணிமாலை	—	முத்தையனின் நல்ல மனைவி
6.	கோமதி	—	பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7.	பொற்கொடி	—	சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 7

இடம் : முத்தையன் வீடு] [காலம் : மாலை

(மணிமாலையும், பொற்கொடியும் கூடத்திற்கு வருகின்றனர்.)

மணி : பொற்கொடி!

பொற் : ஏம்மா?

மணி : சிறு சேமிப்புக்கும், குடும்ப நலத்துக்குமா நான் ஒரு புதுப் பாட்டு எழுதியிருக்கிறேன். அதைக் கொண்டு போயி ஒங்க வாத்தியாரம்மாகிட்டே காட்டியா கண்ணு?

பொற் : மாட்டேம்மா.

மணி : ஏம்மா மாட்டேங்கறே?

பொற் : பாட்டைச் சும்மா காட்ட மாட்டேம்மா. பாடித்தான் காட்டுவேன்.

மணி : பாட்டுத் தெரியாது. பாட்டோட மெட்டுந் தெரியாது, எப்படியடி பாடிக்காட்டுவே?

பொற் : நீங்க எனக்குப் பாடிக் காட்டுவீங்களாம். நான் பாடம் பண்ணிகிட்டுப் போயி, அவங்க கிட்டே பாடிக்காட்டுவேனும், முடியாதாம்மா?

மணி : (மகிழ்ந்து)சின்னப்பொண்ணு சிங்காரி! ஒன்னாலே முடியாதது என்னம்மா இருக்குது? பாடிமட்டு



மல்ல, இப்படி ஆடியும் காட்டலாம்.

[பாடிக்கொண்டு ஆடுகிறாள் மணிமாலை. சிறுமியும் அவ்வாறே செய்கிறாள்.]

சிறுதுளிகள்சேர்ந் துமழை
வெள்ளம் பெருகுதே – அதுபோல்
சேமித்திடும் குடும்பத்திலே
இன்பம் பெருகுதே—வருகின்ற
துன்பம் மறையுதே!
வறுமைவரும் சிறுமைவரும்
வாழ்ந்து பாரடா—தம்பிடோய்
வரம்பிலாத செலவுகளால்
தாழ்ந்து போகுமே—குடும்பம்
வீழ்ந்து போகுமே! (சிறு)

ஊர்க்குருவி நாரெடுத்துக்
கூடு கட்டுதே—தரையில்
ஊர்ந்துவாழும் சிற்றெறும்பும்
உணவைச் சேர்க்குதே—தமது
உயிரைக் காக்குதே!
பூக்களிலே ஈக்களதுமே
தேனைத் திரட்டுதே—இவற்றைப்
புத்தியிலே வைத்துநிதம்
வாழ்வை நடத்தடா—தம்பிடோய்
தாழ்வை யகற்றடா! (சிறு)

படிப்பதற்குப் புத்தகங்கள்
வாங்கிட வேண்டும்—பள்ளிக்கு
பாங்குடனே போவதற்குத்
துணிகளும் வேண்டும்—சுத்தமாய்
அணியவும் வேண்டும்.
பிடித்தமான ஊர்களுக்கு
உல்லாசப் பயணம்—தம்பிடோய்
பெருமையோடு போவதற்கும்
சேமிக்கவேண்டும்—அதிலே
சிறக்கவும் வேண்டும். (சிறு)

இருகுழந்தைக ளிருக்கும்போது
இன்பம் தேடலாம்—வறுமை
இடறில்லாத வாழ்க்கையிலே
இணைந்து பாடலாம்—தம்பிடோய்
வளைந்து ஆடலாம்.
பெருகிவிடும் குடும்பமென்றால்
பெரிய திண்டாட்டம்—அந்தப்
பேதமையில் நோய்நொடிக்கு
மிகவும் கொண்டாட்டம் — திட்ட
[மென்றால்
எடுக்குமாம் ஓட்டம்! (சிறு)

[கவர்ச்சி உடையில் கோமதியும், கனவான் உடையில் பாலசுந்தரமும் வந்து நிற்கின்றனர். அவள் கையிலே ஒரு சிவேட்டு, ஆடல் பாடல் முடிகிறது.]

கோமதி : அடியே, அகம்பாவக்காரி! அழிந்து போறவளே! இப்படிச் செய்யலாமா நீ? ஒன்னோட அநியாயமும் அக்கிரமமும் எத்தனை நாளைக்கடி கொடிகட்டிப் பறக்கும்? இல்லே, எத்தனை நாளைக்குப் பறக்கும்னேன்?

மணி : (திகைத்து) அக்கா! என்னக்கா நடந்தது? வார்த்தைகளே ஏனக்கா இப்படி நெருப்பா அள்ளிக் கொட்டறீங்க? நான் அப்படி என்னக்கா தப்புப் பண்ணிட்டேன்?

கோமதி : பாசாங்குக் கள்ளி! பாரடி இந்தச் சிலேட்டுப் பலகையை (நீட்டுகிறாள்).

பொற் : இது குப்புசாமி அண்ணனுடை சிலேட்டம்மா. வாத்தியாரம்மா இதிலே என்னமோ எழுதிக் குடுத்தாங்க.

கோமதி : ஆமாண்டி. எம்மகனுடை சிலேட்டுலே வாத்தியாரம்மா எதை எழுதலாம், எதை எழுதக் கூடாதுன்னு இல்லியா? எழுதிக் கொடுத்திருக்கரு பாருடி குருடி.

[சிலேட்டைக் கொடுக்க வாங்கிப் படிக்கிறாள், மணி மாலே.]

இரண்டு குழந்தைகள் இருந்தால் பாடுகிறோம்—மகிழ்ந்தாடுகிறோம். இரண்டுக்குமேல் பிறந்துவிட்டால் வாடுகிறோம்— திண்டாடுகிறோம்.


கோமதி : இப்படிச் சொல்லிக் கொடுத்து, எழுதவச்சு எங்களைக் கேவலப்படுத்தணும்னு எத்தனை நாளாடி காத்துக்கிட்டிருந்தே?

மணி : ஐயோ, அக்கா! இதென்ன அபாண்டம்? நான் சொல்லி எழுத வச்சேனு?

கோமதி : நீ சொல்லாமெ பின்னே எந்த மூளியடி இதைச் சொல்லியிருப்பா? கெண்டை யாட்டம் ரெண்டைப் பெத்து வச்சுகிட்டு நீதான் ஆடறே! பாடறே! கொண்டாட்டம் போடறே! நீ சந்தோஷமா இரு. சந்தனத்திலேதான் பொரஞ்! அதுக்காக அதிகமா பெத்துக்கிட்டவங்களே அவமானப் படுத்தலாமா? பெத்தவங்க மனசைப் பத்தி எரிய வைக்கலாமா? மத்தவங்களே மட்டந்தட்டச் சொல்லலாமா? என்னடி திமிருடி ஒனக்கு? என்னடி ஆணவமடி ஒனக்கு?

மணி : வீணான பழி வேணாமக்கா? வாத்தியாரம்மாகிட்டே நான் ஒண்ணும்சொல்லவே இல்லேக்கா! எனக்கு இது தெரியவே தெரியாதக்கா!

கோமதி : இப்பப் பாடினியேடி! ''இரு குழந்தைகளிருக்கும்போது இன்பம் தேடலாம். வறுமை, இடர் இல்லாத வாழ்க்கையிலே இணைந்து பாடலாம்'' னு இதைத்தாண்டி



அந்த வாத்தியாரம்மா இப்படி எழுதியிருக்கரு? இதைக் காட்டிலும் வேறே என்னடி ருசு வேணும்?

மணி : இதை நான் மட்டுமோ,

வாத்தியாரம்மா மட்டுமே, சொல்லலே; எழுதலே! இந்த நாட்டுக் குழந்தைகளோடே எதிர் கால வாழ்க்கை வளமாக இருக்கணும்னு நெனைக்கற ஒவ்வொருத்தரும் இதைத்தான் சொல்றுங்க அக்கா. இது நல்ல துன்னு பட்டா ஒத்துக்குங்க. இல்லேன்னு இன்னமும் நாலு பெத்துக்குங்களே! நான் வேணும்கிறேன்?

கோமதி: ஐயோ! பாருங்களேன் இவளோட பரிகாசத்தை! ஏழுக்கு மேலே பெத்துக்கிட்டதாலே எகத்தாளம் பேசறுளே! பாத்துக்கிட்டே நிக்கறீங்களே! ஒங்க காதென்ன அடைபட்டா போச்சு? ஒங்க வாயென்ன பூட்டையா மாட்டி கிட்டுது?

பால: இந்தப் பொம்பளே சண்டையிலே நான் என்னடி பண்றது? குடும்பநலத் திட்டம் நல்லதுன்னு ஒத்துக்குங்க; இல்லேன்னு பெத்துக்குங்கன்னு படிச்சவங்க, அறிவு படைச்சவங்க சொல்றுங்க. நாம்ப படிக்காத முட்டாளுங்க; ஒத்துக்கத்தானே வேணும்? இல்லேன்னு பெத்துக்குவோம்.

மணி: (பிணங்கி) நாங்க ஒண்ணும் படிச்சவங்க இல்லே; அறிவு படைச்சவங்க இல்லே; எங்களுக்கு இருக்கறது எல்லாருக்குந்தான் இருக்குது: வாடி போகலாம்!

[வெடுக்கென்று மகளைப் பிடித்து அழைத்துக்கொண்டு போகிறுள், உள்ளே.]

பால: அவ சொன்னதைக் கேட்டியா, கோமதி? அவங்களுக்கு இருக்கிறது எல்லாருக்குந்தான் இருக்குதாம்! அதாவது, நம்பளுக்கும் எல்லாம் இருக்குதுன்னு சொல்லாமெ சொல்லறு மணிமாலே! மதிச்சுப் பேசறு இப்போ!

கோமதி: ஏஞ் சொல்லமாட்டா? ஏஞ் சொல்லமாட்டாங்கறேன்? சித்தலிங்கப் பிரபுதயவிலே நமக்கு எல்லாந்தான் வந்திருக்குது - டீக்கடை, காபி பலகாரக் கடையா மாறிடிச்சி. இப்ப நாலு பேரு நம்பளே மதிக்கிறுங்க! மதிச்சுத்தானே ஆகணும்!

பால: அப்படின்னு, காக்கையும் கத்தட்டும், ஏத்தமும் எறைப்போம்! இவளேப்பத்தியோ, எந்தம்பியைப் பத்தியோ கவலேப்படாதே! இன்னங் கொஞ்ச நாள் போவுட்டும் பாரு; நான் பாடினதெல்லாம் தப்பு, பேசினதெல்லாம் தப்புன்னு மணிமாலே ஒங்கிட்டே வந்து மன்னிப்புக் கேக்கப்போறு.

கோமதி: ஆமாமா, அந்தக் காலம் வரத்தான் போவுது; எங்கண்ணுலே பாக்கத்தான் போறென். பணம் பத்தும் பண்ணுமில்லே? ஆனு ஒண்ணு.

பால: ஒண்ணு? பதினெண்ணு?

கோமதி: இல்லே, பனிரெண்டு.

பால: பனிரெண்டா? அதென்னடி?

கோமதி: நாம்ப கடை வச்சு நாலு மாசமாச்சு. காபியும், பலகாரமும் ருசியா இருக்கறதாகத்தான் சொல்றுங்க. இருந்தும் வியாபாரம் பிடிக்கலே; கூட்டம் ஏறலே. ஆனு இந்த வேதாளம் முருங்கை மரம் ஏறத் தொடங்கிடுச்சே! சாயுங்காலம் மூணு மணிக்கு வெளியே போனு இராத்திரி பன்னெண்டுக்குத்தானே வீட்டுக்கு வர்றீங்க! அந்தப் பன்னெண்டை ஒழிக்கணும்!

பால: ஏண்டி எனக்குப் புத்தி சொல்றியா?

கோமதி: வியாபாரத்தோட நெலேமையைச் சொல்றேன். ரெண்டு பேருமாச் சேந்து பாடுபட்டாத்தானே பலன் கெடைக்கும்? கடனே யுங் கட்டலாம்?

பால: ரெண்டு பேருமா சேந்து பாடுபட்டுப் பெத்து வச்சிருக்கறதே போதுமடி. நீ ஒருத்தியே பாடுபடு. பக்கத்துக் கிராமத்திலே ஒரு ரிக்கார்டு டான்ஸ். நண்பர்களோட நான் போறேன். நாளேக்குத்தான் திரும்புவேன். கடை வியாபாரத்தைக் கச்சிதமா பாக்கல்லே, ஒதை தாங்கமாட்டே! இடுப்பை ஒடிச்சுபோடுவேன், பாத்துக்க!

[மிரட்டிவிட்டுச் செல்லுகிறுன் பாலசுந்தரம். மலேத்து நிற்கிறுள் கோமதி.]



'திரு'வுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தலையாய தொடர்புதமிழ் இலக்கியப் பரப்புள் 'திரு' என்னும் ஓர் அடை - பேர் அடை - பெற்று விளங்கும் ஒரு நூல் திருக்குறளே ஆகும். இவ்வுண்மையை எண்ணும்போது குறுக்கிடுவதுபோல் தோன்றுவது குமரன் வேல்! - திரு முருகாற்றுப்படை! ஆனல் நடுநிலை யோடு நண்ணும்போது குமரன் வேலும் சீற்றத்தால் குறுக்கிடவில்லை; ஏற்றத்தின் நீனவால் குறுகியது - என்பது விளங்கும். பழந்தமிழ் நூல்கள் பலவும் 'பாட்டும் தொகையும்' எனப்பெறும். பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமே 'பாட்டும் தொகையும்' என்று சுருக்கமாகக் குறிக்கப்பெறும். 'பாட்டும் தொகையும்' மேற்கணக்கு நூல்கள். இவை பதினெட்டு ஆதல் போலவே கீழ்க் கணக்கு நூல்களும் பதினெட்டாம். இவற்றுள் - மேற்கணக்கு நூல்களுள் ளும் கீழ்க்கணக்கு நூல்களுள்ளும் - திருவென்னும் அடைபெற்ற நூல்கள் இரண்டே. அவை திருமுருகாற்றுப் படையும் திருக்குறளுமே ஆகும். இதிலும் ஒரு பொருத்தம் இருப்பது இன்பம் தருவது. பதினெண் மேற் கணக்கு நூல்களுள் வரிசையால் முதலாவது திருமுருகாற்றுப்படை; பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் வரிகளால் முதலாவது திருக்குறள். எனவே, சங்கத் தமிழுக்கு முதலா வது 'திரு' எனலாம். என்னே திரு வின் பெருமை!

திருமுருகாற்றுப்படை–திருக்குறள்! குமரன் - குறள்! தெய்வம் - குமரன்; தெய்வநூல் - குறள்! பழந்தமிழ்த் தெய்வம் - பலர் புகழ் தெய்வம் குமரன்! பழந்தமிழ் மறை - பலர் புகழ் பொதுமறை குறள்! குமரன் - சமயங் கடந்த தெய்வம்; குறள் - சமயங் கடந்த தெய்வநூல். திரு முருகாற்றுப்படை - திருக்குறள் இரண்டுள் எது அளவால் பெரியது? புகழால் பெரியது? திருக்குறளே! உள்ளத்துக்குத் திருமருகாற்றுப் படை; உலகத்துக்குத் திருக்குறள்!

இன்னொரு வேறுபாடும் - வீறு பாடும் - பகுத்தறியத் தக்கது. திரு முருகாற்றுப்படையுள் வரும் திரு தெய்வத்தால் பெற்ற பேறு. திருக் குறளுள் வரும் திரு தெய்வத் தமிழால் பெற்றபேறு - வீறு! வெளிப் படையாகத் தனியொரு சமயச் சார்பற்ற தமிழ்நூல் - சங்கநூல்-திரு வென்னும் அடைபெற்றிருப்பது திருக்குறளிலேயே ஆகும். அந்த வகையில் தமிழ் நூல் கடல் பரப்புள் 'திரு' என்னும் அடைபெற்ற நூல் களுள் முதல் நூல் - முதன்மையான நூல் - திருக்குறள் எனலாம்.

இனி, திருக்குறளுள் 'திரு'வருமிடங் களைத் திறனுய்வு செய்ய முயல் வோம். முதலாவதாக அவ்விடங்களை வகுத்தும் தொகுத்தும் காண்போம். அ. செல்வம் என்னும் பொருளில்- (7)

அறம் : அழுக்காறுமை

1. அழுக்கா றெனவொரு பாவி
திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும் (168)

அறம் : ஒப்புரவறிதல்

2. ஊருணி நீர்நிறைந் தற்றே
உலகவாம்
பேரறி வாளன் திரு (215)

அறம் : ஊழ்

3. இருவே றுலகத் தியற்கை
திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (374)

பொருள் : கல்லாமை

4. நல்லார்கண் பட்ட வறுமையி
னின்னுதே
கல்லார்கண் பட்ட திரு (408)

பொருள் : காலமறிதல்

5. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்கும் கயிறு (482

பொருள்: வெருவந்த செய்யாமை

6. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு (568)

பொருள்: ஆள்வினையுடைமை

7. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் (616)

ஆ. நன்மை என்னும் பொருளில் (1)

பொருள் : கயமை

8. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர் (1072)

இ. அழகு என்னும் பொருளில்- (1)

பொருள் : நாணுடைமை

9. கருமத்தா ஞணுத ணுணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற (1011)

இன்பம் : காதற்சிறப்புரைத்தல்

10. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை இடம் (1123)

ஈ. திருமகள் என்னும் பொருளில் (3)

பொருள் : வெஃகாமை

11. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு (179)

பொருள் : தெரிந்து வினையாடல்

12. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ருக
நினைப்பானை நீங்கும் திரு (519)

பொருள் : வரைவின் மகளிர்

13. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு (920)

மேற்கண்ட வகைதொகையால் விளங்கும் உண்மைகளுள் சில வருமாறு :

1. முப்பாலுள் முப்பாலுள்ளுள்ளும் திரு இடம் பெற்றுள்ளது.

2. அறத்துப் பாலுள் நான்கு (4) இடங்களிலும், பொருட்பாலுள் எட்டு (8) இடங்களிலும், இன்பப் பாலில் ஓர் (1) இடத்திலும் திரு திகழ்கிறது.

3. முப்பாலுள் திருவாம் பொருள் பற்றிய பாலுள்ளேயே அறத்துப் பாவினும் (இருமடங்கு) நான்கு அதிகமாகவும், காமத்துப் பாவினும் (எண் மடங்கு) ஏழு இடங்களில் அதிகமாகவும் திரு அமைந்துள்ளது.

4. செல்வம் என்னும் பொருளில் ஏழு (7) இடங்களிலும், திருமகள் என்னும் பொருளில் மூன்று (3) இடங்களிலும், அழகு என்னும் பொருளில் இரண்டு (2) இடங்களிலும், நன்மை என்ற பொருளில் ஓரிடத்திலும் (1) திருக்குறளில் திரு வருகிறது.

5. மொத்தம் பதின்மூன்று (13) இடங்களில் முப்பாலில் வரும் திரு, செல்வம் என்ற பொருளிலேயே திருமகள் என்ற பொருளினும் நான்கு (4) இடங்கள் அதிகமாகவும், அழகு என்ற பொருளினும் ஐந்து (5) இடங்கள் அதிகமாகவும், நன்மை என்ற பொருளினும் ஆறு (6) இடங்களில் அதிகமாகவும் வருகின்றன.

6. திருக்குறளிலேயே திரு என்னும் சொல்லுக்கு (அ) செல்வம் (ஆ) திருமகள் (இ) அழகு (ஈ) நன்மை என்னும் நான்கு பொருள்களும் அமைந்திருக்கின்றன.

7. மேற்கண்ட நான்கு பொருள்களுள்ளும் செல்வம் என்ற பொருளே சிறந்திருப்பது.

8. திருவுக்குச் செல்வம் என்ற பொருள் அமைந்திருந்ததை ஒட்டியே திருமகளும் திருவாய் எழுந்தருளியிருக்கவேண்டும்.

9. திருவுக்கு அழகு, நன்மை என்ற பொருள்களும் உண்டு.

10. திரு என்னும் ஒரு சொல், செல்வம், அழகு, நன்மை ஆகிய மூன்று பொருள்களையும் குறிப்பது இன்பம் பொறிப்பது ஆகும்.

11. திருக்குறளுள் வரும் திரு, வேறு வேறு அதிகாரங்களில் வருகின்றன. அவையாவன :

(அ) அழுக்காறுமை (168)
(ஆ) வெஃகாமை (179)
(இ) ஒப்புரவறிதல் (215)
(ஈ) ஊழ் (374)
(உ) கல்லாமை (408)
(ஊ) காலமறிதல் (482)
(எ) தெரிந்து வினையாடல் (519)
(ஏ) வெருவந்த செய்யாமை (568)
(ஐ) ஆள்வினையுடைமை (616)
(ஒ) வரைவின் மகளிர் (920)
(ஓ) நாணுடைமை (1011)
(ஔ) கயமை (1072)
(ஃ) காதற் சிறப்புரைத்தல் (1123

திரு வரும் திருக்குறள்களுக்கு பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கள் தெளிவுரை வருமாறு :

1. அழுக்காறு எனஒரு பாவி
திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். (168)

பொறுமை என்று கூறப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வத்தையும் கெடுத்துத் தீய வழியில் அவனைச் செலுத்திவிடும்.

2. அறனறிந்து வெஃகா அறிவு
டையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு (179

அறம் இஃது என்று அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் சேரும் திறன் அறிந்து அதற்கு ஏற்றவாறு சேர்வாள்.

3. ஊருணி நீர்நிறைந் தற்றே
உலகவாம்
பேரறி வாளன் திரு. (215)

ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம், நீரால் நிறைந்தாற் போன்றது.

4. இருவேறு உலகத்து இயற்கை
திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (374)

உலகத்தின் இயற்கை, ஊழின் காரணமாக இருவேறு வகைப்படும்; செல்வம் உடையவராதலும் வேறு, அறிவு உடையவராதலும் வேறு.

5. நல்லார்கண் பட்ட வறுமையின்
இன்னதே
கல்லார்கண் பட்ட திரு (408)

கல்லாதவரிடம் சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிக்க துன்பம் செய்வதாகும்.

6. பகுவத்தோடு ஒட்ட ஒழுகல்
திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு (482)

காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல், நில்லாத இயல்பு உடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

7. வினைக்கண் வினையுடையான்
கேண்மைவே ரூக
நினைப்பானை நீங்கும் திரு (519)

மேற்கொண்ட தொழிலில் எப்போதும் முயற்சி உடையவனின் உறவைத் தவறுக நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கும்.

9. இனத்தாற்றி எண்ணுத
வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு (568)

அமைச்சர் முதலான தன் இனத்தாரிடம்கலந்து எண்ணுத அரசன், சினத்தின் வழியில் சென்று சீறி நிற்பானாயின் அவனுடைய செல்வம் சுருங்கும்.

9. முயற்சி திருவினை யாக்கும்
முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் (616)

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

10. இருமனப் பெண்டிரும் கள்ளும்
சுவரும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு (920)

இருவகைப்பட்ட மனம் உடைய பொதுமகளிரும் கள்ளும் சூதுமாகிய இம் மூவகையும் திருமகளால் நீக்கப் பட்டவரின் உறவாகும்.

11. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்

நல்லவர் நாணுப் பிற (1011)

தகாத செயல் காரணமாக நாணுவதே நாணமாகும்; பெண்களுக்கு இயல்பான மற்ற நாணங்கள் வேறு வகையானவை.

12. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்

நெஞ்சத்து அவலம் இலர் 1072

நன்மை அறிந்தவரைவிடக் கயவர் தம் நெஞ்சில் எதைப்பற்றியும் கவலை இல்லாதவர்.

13. கருமணியிற் பாவாய்நீ போதா யாம் வீழும் திருநுதற்கு இல்லை இடம் 1123

என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே! நீ போய்விடு! யாம் விரும்புகின்ற இவளுக்கு என் கண்ணில் இருக்க இடம் இல்லையே!

சங்கப் புலவர்களுள்ளேயே திரு என்னும் அடைபெற்றார் இருவரே. ஒருவர் திருத்தாமனார் - ஒரே ஒரு புறப்பாடல் பாடியவர். மற்றொருவர் திருவள்ளுவர் - உலகப் புகழ்பெற்ற பொதுமறை பாடியவர்.

செல்வமும் நன்மையும் அழகும் செறிந்த - திருமலிந்த திருக்குறள் - திருவள்ளுவர் வாழ்க! வெல்க!

The following particulars regarding the ownership of 'SEERANI', the monthly newspaper are published, as called for, by rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956 :

FORM IV

(See rule 8)

1.	Place of publication	...	N. C. C. Buildings, Fort St. George, Madras-9.
2.	Periodicity of publication	...	Monthly.
3.	Printer's name	...	Thiru G. Ranga Rao, I.A.S., Director of Stationery and Printing.
	Nationality	...	Indian.
	Address	...	Government Press, Madras-1
4.	Publisher's name	...	Thiru E.C.P. Prabakar, I.A.S., Secretary, R.D.L.A.
	Nationality	...	Indian.
	Address	...	N.C.C. Bulidings, Fort St. George, Madras-9.
5.	Editor's name	...	Thiru S. Chellappan, M.A., B.T., Editor, R.D.L.A. Dept.
	Nationality	...	Indian.
	Address	...	N.C.C. Buildings, Fort St. George, Madras-9.
6.	Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent. of the total capital.	...	Government of Tamil Nadu, Fort St. George, Madras-9.

I, E.C.P. Prabakar, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.


(Signed) E.C.P. Prabakar

Publisher

Dated 10th February 1970




சென்னை மாநகர மக்கள் சார்பில் எல்லீக் காந்தி கான் அப்துல் கபார்கானுக்கு 30-12-1969 அன்று வரவேற் பளிக்கப்பட்டது.



சென்னையில் சீரணியினரால் கட்டப்படவிருக்கும் சீரணி புரம் வீடுகள் கட்டும் வேலையை எல்லீக் காந்தி தொடங்கி வைத்தார்.




தமிழிசைச் சங்க 27-ஆவது ஆண்டு விழா 22-12-1969 அன்று இராசா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற பொழுது, நிதியமைச்சர் மாண்புமிகு கே.ஏ. மதியழகன் அவர்கள் செம்மங்குடி சீனிவாச ஐயருக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டத்தை வழங்கினர்.



சென்னை தாடண்டர் நகரில் 'கலைஞர் கருணாநிதி சமூகக் கூடத்'தைப் பொதுப் பணித்துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் 14-1-1970 அன்று திறந்து வைத்தார்கள்.


சென்னை இராசாசி மண்டபத்தில் 28-12-1969 அன்று நடைபெற்ற முதியோர் கல்வி, முதலாவது மாநில மாநாட்டில் யுனெஸ்கோ நிறுவனத் தூணை இயக்குநர் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையா கலந்து கொண்டார்.





மலேசிய நாட்டின் பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு வி. டி. சம்பந்தம் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் சட்ட அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் வரவேற்றார்.

உணவு அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் வேலூரில் நடைபெற்ற வேளாண்மைத் தொடர்புடைய கூட்டத்தில் 'விசைக் கலப்பை'யைப் பார்வையிட்டார்.





பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் மாண்புமிகு என்.வி. நடராசன் அவர்கள் மதுரையில் 21-12-'69 அன்று நடைபெற்ற மாவட்ட ஆவணக் களரி பதிவாளர்கள் மாநாட்டைத் தொடக்கிவைத்தார்.

அவர்கள் சோகமுறுகிறார்கள்.''

[— சிரணிக்குச் செல்வி வகிதா ரஹ்மான் அளித்த செய்தி.]

திரையுலகிற்குத் தமிழகம் தந்துள்ள தாரகைகள் பலர் - அவருள் ஒருவர் செல்வி வகிதா ரஹ்மான். 'ரோஜுலு மாராயி' (தெலுங்கு— தமிழில் 'காலம் மாறிப் போச்சு') 'ஜெயசிம்ஹன்' (தெலுங்கு) சி.ஐ.டி. (இந்தி) போன்ற படங்களின் வாயிலாகத் திரையுலகிற்கு அறிமுகமாகி, எண்ணற்ற இந்திப் படங்களில் நடித்து, இந்தித் திரையுலகின் முடியணியா இராணியாகத் திகழும் செல்வி வகிதா ரஹ்மான், வேளாண்மையிலும் ஒரு தனிப் பாதையை அமைத்துக்கொண்டு நெல், கம்பு, வேர்க்கடலை, கத்தரி போன்ற பற்பல பயிர்களையும் நவீன முறையில் பயிரிட்டு, பெருமளவில் தானியங்களையும் காய்கறிகளையும் குவித்தவண்ணமுள்ளார்.

பம்பாய்க்கருகிலும், சென்னையடுத்துச் சோழவரம் ஒன்றியத்தைத் தழுவியுள்ள ஆத்தூர் என்னுமிடத்திலும் இரண்டு பெரிய பண்ணைகள் இந்நடிகைக்கு உள்ளன.

ஆத்தூரிலுள்ள இவருடைய 55 ஏக்கர் பண்ணையில், ஐ.ஆர். 8, ஐ.ஆர்.5 நெல், எச்.பி. 3 கம்பு, வேர்க்கடலை, கத்தரி போன்றவை நன்முறையில் பயிரிடப்படுகின்றன.

ஆளுநரின் பாராட்டு

பம்பாய் நகரிலேயே பெரும்பாலும் வசிக்கும் இத்திரை நடிகை பம்பாய்ப் பண்ணைக்கு அவ்வப்போது நேரிற் சென்றும், ஆத்தூர் பண்ணைக்கு இரண்டு திங்கட்கு ஒருமுறை வருகை தந்தும் பண்ணையைத் திறம்பட





''எனக்கும் உழவர்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

மேடை நடனத்தின்போது பற்பல வண்ண விளக்குகளைக் கொண்டு, நடனப் பெண்ணை விதவிதமான தோற்றத்தில் விளங்கச் செய்கின்றனர்; இவற்றுள் மங்கையின் உருவம் அடிக்கடி மாறுபட்டு, நடனம், ஒளிக்கேற்ப சில சமயம் மகிழ்ச்சியாகவும், சில வேளை சோகமாகவும்தோன்றுகிறதல்லவா? அதே போன்றுதான் உழவரும். பெய்யெனப் பெய்த மழை, நல்ல கால நிலை, சிறந்த விளைச்சலைக் காண்கையில் அவர்கள் பெருமகிழ்வடைகின்றனர். மழையின்றிப், பயிர் வாடின்



நிர்வகிக்கிறார். ஆத்தூர் பண்ணையின் மேலாளர் திரு. கே.ஏ.சி. மலிக் என்பவர்.

இவருடைய பண்ணையில் நடை பெற்ற 'வயல் நாள்' விழாவில், தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் அண்மையில் பங்குபெற்று இவருடைய உழவுத் திறனை வெகுவாகப் பாராட்டியுள்ளது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். இவர் பயிரிட்ட எச்.பி. 3 கம்பு இனம் மேதகு ஆளுநரின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

'சிரணி'ச் செய்தியாளர் இவருடைய பண்ணைக்குச் சென்றபோது, செழித்து வளர்ந்திருந்த, ஆறு திங்கள் பருவமான கத்தரிச் செடிகள் அவருடைய கவனத்தை ஈர்த்தன.

முன்னணி உழவர்

''ஆத்தூரிலேயே ஏனைய உழவர் களெல்லோரும் கத்தரியைப் பயிரிடுதற்குத் தயக்கமுற்றிருந்த வேளையில், ஒன்றிய அலுவலர்களின் யோசனையை ஏற்று, அதை வீணாக்க நடிகை முன்வந்தார். இவருடைய ஆர்வம் போற்றுதற்குரியது'' எனக் கூறுகிறார், சோழவரம் ஒன்றிய ஆணையர் திரு. டி. சுப்ரமணியம்.


இன்றளவில் இவருடைய கத்தரிப் பயிர்களின் செழிப்பைக் கண்ணுற்ற மூவர், தற்போது 7 ஏக்கர்களில் கத்தரி பயிரிட்டுள்ளனர்.

வருவாய் பெருக்கும் கத்தரி

முறையாகக் கத்தரியைப் பயிரிடின் ஓர் ஏக்கரில் ஆண்டொன்றிற்கு 60 கிலோ எடையுள்ள 750 மூட்டைகள் விளைச்சல் கிடைக்கும். அஃதாவது ஏக்கருக்கு 45,000 கிலோக்களாகும். இதிலிருந்து கிடைக்கும் வருவாய் ரூ. 11,000. செலவுத் தொகை ரூ. 3,000 கழித்தது போக எஞ்சிய ஆதாயம் ரூ. 8,000 ஆகும்.

இத்தொகை ஒரு சராசரி வருவாயே. செல்வி வகிதா ரஹ்மானுக்கு இவ்வருவாய் கிடைத்துள்ளது. ஆனால் ஆண்டு வருவாய் ஏக்கருக்கு ரூ. 17,000 வரை கிடைப்பது உறுதி. இதை இவ்வொன்றியத்தில் ஏற்கனவே பெருவர் பெற்றுள்ளார்'' எனக் கூறுகிறார் வேளாண்மை வளர்ச்சி அலுவலர், திரு. எஸ். சௌந்தரபாண்டியன்.

செல்வி வகிதா ரஹ்மான் பண்ணையில் கத்தரி பயிரிடப்படும் முறைகளை இனிக் காண்போம்.



கத்தரி ஓராண்டுப் பயிராகும். ஏப்ரல் இறுதி வாரத்தில் விதைத்து மே முடிவில் நடவுசெய்யின், ஜூன், ஜூலைத் திங்களில் செழிப்பாக வளர்ந்து, ஆகஸ்ட் தொடக்கம் மார்ச் வரை இடையருது விளைச்சலைத் தருகிறது.

ஏக்கருக்கு 15 கிராம் விதைகளே போதுமானதாகும். விதைவிட்ட 15 நாட்களுக்குப் பின்னர், 25 கிலோ சலித்த மக்கு உரத்தை மேலுரமாகத் தரவேண்டும். 50 கிலோ கால்சியம், அம்மோனியம் நைரேட் மற்றும் 8 டன் கலவையுரத்தை அடியுரமாக இட்டு வயலைத் தயார் செய்து நடவு செய்தல் வேண்டும்.

ஓராண்டுப் பயிரான கத்தரிச் செடிகளுக்கு ஐந்து நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்து கொண்டேயிருத்தல் வேண்டும்.

செடி மூன்று திங்கள் பருவத்தை எய்தியபோது, ஒருதிங்கள் இடைவெளியில் இரண்டு முறைகள் 40:30:30 என்றளவில் மேலுரம் தரவேண்டும்.

கத்தரிப் பயிருக்குப் பயிர்ப் பாதுகாப்பே மிகவும் அவசியமானது. கைகளால் இயங்கும் தெளிப்பானைக் கொண்டு 'ரோகர்' திரவத்தை நடவு செய்த 15 ஆம் நாளன்று தெளியுங்கள். தவிர 50 சதவீத செவினுடன் தியோவிட் கலந்து 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கத் தவறுதீர்கள்.

செல்வி வகிதா ரஹ்மானுடைய கத்தரிப்பயிரில் செய்யப்பட்ட பயிர்ப் பாதுகாப்புபற்றிய மேலும் சில விவரங்கள்பற்றி வேளாண்மை வளர்ச்சி அலுவலர் என்ன கூறியிருக்


கிறார் என்பதனையறிவோம்! ''காய் களைத் தாக்கும் சொத்தைகளைத் தடுக்க 50 சதவீத செவின் ஒரு கிலோவும் இலைகளிலுள்ள இலைப் பேன் வியாதியை முறியடிக்க 40 காலன் நீருடன் 3/4 கிலோ 'தியோ விட்' கலந்து தெளிக்கலாம். இவை யன்றிக் கத்தரிப் பயிரில் நாகதாளிப் பூச்சிகள் தென்பட்டால், 'நெவின்' மட்டுமே கையாண்டால் போது மானது.

பயிர்களைத் தாக்கும் இன்னொரு கொடியநோய் நச்சுக் கிருமிகளால் ஏற்படும் சிறு இலை நோயாகும். நோயால் தாக்குண்ட ஓர் இலை மற்ற இலைகளுடன் உரசினாலே பரவக் கூடிய இந்நோய் பயிர்களை விரைவில் முழுவதுமாக அழிக்கவல்லது. இந் நோய் கண்ட செடியை உடனே பிடுங்கியெறிந்து விடவேண்டும். பின்னர், கரங்களை நன்கு கழுவிய பிறகே மற்றச் செடிகளைத் தொட வேண்டும். இந்நோய்க்கு மருந்தில்லை.

முதல், இரண்டாம் திங்கள்களில் இரண்டு முறைகளும், 75ஆம் நாள் இறுதியாக ஒருமுறையும் களைகளை டுத்தால் போதுமானது.

கத்தரி பயிரிடுவீர்!

கணிசமான வருவாய் பெறுவீர்!



கத்தரியைத் தாக்கும் சிறு இலை நோயைப்பற்றி
வேளாண்மை வளர்ச்சி அலுவலர் விளக்குகிறார்.

பருவத்தே பயிர் செய்!


காய்கறி வகைகளைத் தக்க பருவத்தில் பயிர் செய்வதன்மூலம் மிகுந்த இலாபம் பெற வாய்ப்பிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பூச்சி பூஞ்சாளம் தாக்குவதும் ஓரளவு குறையும்.

பூசனி : ஜூன் - ஜூலை.

கீரை : செப்டம்பர், அக்டோபர்.

வெண்டை : மார்ச்சு முதல் மே வரை.

பறங்கிக்காய் : ஜூலை - ஆகஸ்டு.


கடிதங்களை
சீக்கிரமே
தபால் பெட்டியில்
போடுங்கள்
தபால் நிலையங்களில்
கடைசி நிமிடத்தில் நிறைய
எண்ணிக்கையில் கடிதங்கள்
வந்து குவிகின்றன. இதனால்
சங்கடமும் தாமதமும் ஏற்படுகிறது.
கடிதத்தை சீக்கிரமே தபாலில்
சேர்த்தால், அது அன்றைய
தினமே அனுப்பி வைக்கப்படும்;
விலாசத்தாருக்குத் தாமதமின்றி
போய்ச் சேரும்.
கடிதத்தை இப்போதே தபாலில் சேர்ப்பியுங்கள்.
மாலைவரை காத்திருக்க வேண்டுமா?
இந்திய தபால்-தந்தி இலாகா

ஐயம் அகற்றுவோம்!

ஆர். மகாதேவன்
(ஓலிபரப்பு அலுவலர், குடும்பநலத்துறை)

தேசிய குடும்பநலத் திட்டத்தைப் பற்றி இன்று சிலர் எழுப்பும் எண்ணற்ற கேள்விகளுள் இரண்டு எனக்கு மிகவும் முக்கியமாகப் படுகின்றன.

முதற்கேள்வி பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை பற்றியது. குடும்பநலத் திட்டமுறைகளே தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுஉள் அதன் விளைவாக எதிர்காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்பட்டு விடும் என்றும் மக்கள் தொகை அடிப்படையில் வரையறுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் தொகை அதனால் பாதிக்கப்பட்டுக் குறைந்து விடும் என்றும் சிலர் கூறுகிறார்கள். அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது இதைத்தான்; தமிழகக் குடும்பநலத்துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இதுபற்றிப் பொதுமேடைகளில் குறிப்பிடும் கருத்தே அது. பாராளுமன்ற உறுப்பினர் தொகை அதிகரிப்பில் ஓரிரு இடங்களே இழக்கும் அளவிற்கு மக்கள் தொகை கட்டுப்படுமேயானால், அந்த இழப்பைத் தவிர நாம் பெறும் வேறு பல நன்மைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். முதற்கண் தமிழக மக்கள் அனைவருக்கும் வயிறார உண்ண உணவு கிடைக்கும். உடுக்கத் தேவைக்கும் அதிகமாகவே துணி வகைகள் குறைவான விலையில் இருக்கும். வீலைவாசிகள் அனைத்துமே பொதுவாகக் குறைந்துவிடும். வேலை வாய்ப்புக்கள் பலப் பல மடங்கு பெருகி ஒவ்வொரு குடிமகனும் தனக்கு ஏற்றதொரு வேலையைத் தேர்ந்தெடுக்கும்சூழ்நிலை உருவாகும். ஒவ்வொரு வீடும் நலத்துடன் திகழும். ஒவ்வொரு தாயும் ஒவ்வொரு சேயும் நலமுடன் காணப்படுவர். தமிழகமே தலைநிமிர்ந்து நின்றிடும். பலவகைகளில் சுறுசுறுப்பான ஜப்பான் நாட்டைப் போலத் தமிழகம் திகழும். இந்த நன்மைகளையெல்லாம் நோக்குமிடத்து பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் ஒன்றிரண்டு குறைவதை ஓர் இழப்பென்றே கொள்ள முடியாது. இவ்வுண்மைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் மேற்குறிப்பிட்ட கேள்வியை எழுப்புவோருக்கு (உண்மையிலேயே அவர்கள் விளங்காத காரணத்தினால் கேட்பவர்களாக இருந்தால்) மன நிறைவு ஏற்படும் வகையில் மறுமொழி அளித்திட முடியும். இங்கு மற்றொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போபாலில் அண்மையில் நடந்த குடும்ப நலத்திட்டக்குழுவின் தீர்மானங்களில் இதுபற்றி அரசினர் தீவிரமாகப் பரிசீலித்து, குடும்ப நலத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தும் மாநிலங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் தொகை எண்ணிக்கையில் இழப்பு ஏதும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அடுத்த கேள்வி சிறுபான்மை யிரான சில மதத்தவர் தம் எண்ணிக்கையைப் பெருக்கும் நோக்குடன் குடும்ப நலத்திட்ட முறைகளை ஏற்காத நிலையில், பெரும்பான்மை மதத்தினர் மட்டும் இதை ஏற்றுச் செயல் படுத்தினால் காலப்போக்கில் பெரும்பான்மையினர் சிறுபான்மை யினராக மாறிவிடும் சூழ்நிலை ஏற்படாதா என்பது. இதற்கு விடை யளிக்கும்முன் ஒரு புள்ளி விவர

உண்மையை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். 1961-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்குப்படித் தமிழ் நாட்டில் இந்துக்கள் 90% என்றும் மற்றவர் 10 சதவீதம் என்றும் குறித்துள்ளார்கள். இது விருந்து பெரும்பான்மை சிறு பான்மை என்று பேசுவதைவிட மிக மிகமிகப் பெரும்பான்மை என்றும், மிக மிகச் சிறுபான்மை என்றும் பேசுவதே சாலப் பொருந்துவ தாகும். அடுத்து வரும் 30 ஆண்களில் இந்த மிகமிகப் பெரும் பான்மையினர் மட்டுமே குடும்ப நலத்திட்ட முறைகளை ஏற்றுச் செயல் பட்டு மிக மிகச் சிறு பான்மையினரில் ஒருவர் கூட ஏற்காமல் இருந்தால்கூட பெரும்பான்மை யினர் சிறுபான்மையிராக மாறும் சூழ்நிலை ஏற்படவே ஏறபடாது. 90, 10 என்று இருப்பது 80, 20 என்று ஒருவேளை மாறினுலும் மாறலாம். இதனுல் எந்தவகையிலும் பெரும் பான்மை, சிறுபான்மை என்ற நிலை மாறவிடப் போவதில்லை.

அடுத்து, சிறுபான்மையினர் குடும்பநலத்திட்ட முறைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் மிகத் தவருன பொய்ப் பிரசாரம் என் பதையும் எடுத்துக் காட்டவேண்டும். மேற்குறிப்பிட்ட விகிதாசாரத்தை மனத்தில் இருத்திக் கொண்டு பார்ப் போமேயானுல் 9 இந்துக்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ள முன்வந் தால் அங்கு ஒருவர்மட்டுமே மற்ற மதத்தினர் வர முடியும் என்பது தெளிவாகும். எனவே, இந்துக்கள் 9 பேர் வந்திருக்கிறார்கள்; மற்றவர் களில் ஒருவரே வந்துள்ளார் என் றெல்லாம் பேசுவது மக்கள் தொகை விகிதாசாரத்தை அறியாதவர் கூற் றெனத் தள்ளத்தக்கதாகும்.

முந்திரிச் சாகுபடியும் அயல்நாட்டு வாணிபமும்

இந்தியாவின் வெளிநாட்டு வாணிபத்தில் டாலர் வருமானம் தரக்கூடிய முக்கிய வீளைபொருள்களுள் முந்திரியும் ஒன்று. ஆண்டு தோறும், முந்திரிப் பருப்பு, முந்திரி எண்ணெய் ஆகியவை மூலம், நம் நாட்டிற்கு ஏறக்குறைய 30 கோடி ரூபாய் வருமானம் கிடைக் கிறது. 1966-67-ஆம் ஆண்டுமட்டும் 30,800டன் முந்திரிப் பருப் பும், 11,300டன் முந்திரி எண்ணெயும் ஏற்றுமதி செய்ததன் மூலமாக 44·8 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

நம்நாட்டில் முந்திரி 11½ லட்சம் ஏக்கராவில் பயிரிடப்பட் டுள்ளது. வருடத்திற்கு 1½ லட்சம் டன் முந்திரிக் கொட்டை உற்பத்தி செய்யப் படுகிறது. ஆனுல் இங்குள்ள முந்திரித் தொழிற் சாலைகளைச் சரிவர நடத்துவதற்கு, 50,000 டனுக்கு மேற்பட்ட முந்திரிக் கொட்டைகளை, கிழக்கு ஆப்பிரிக்கா போன்ற வெளி நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறோம். இதனுல் பாதிக்கப் படும் நமது அந்நியச் செலாவணியின் மதிப்பு ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ 17 கோடியாகும். கிழக்கு ஆப்பிரிக்காவில் விளையும் முந்திரிக் கொட்டைகளை, அங்கேயே உபயோகித்து முந்திரிப் பருப்புத் தயாரிக்கும் திட்டம் உருவாகியுள்ளது. நமக்குத் தேவையான முந்திரிக் கொட்டைகளை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளாவிட்டால், வெளிநாடுகளில் நம் வாணிபத்தை இழந்து போவதுடன், நம்நாட்டிலுள்ள முந்திரி ஆலைத்தொழில் நசித்துவிடும். ஆகவே நான்காவது திட்டக்காலத்தில் இந்தியா முழுதும் 6 லட்சம் ஏக்காவிலும், தமிழ் நாட்டில் 26,000 ஏக்கரா விலும் முந்திரி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடமாடும் விவசாயக் கிடங்கு

திரு நா. அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்.,
(விவசாயத்துறை இயக்குநர்)

வளரும் தமிழகம்

பழையன கழிதலும், புதியன புகுதலும் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும். உயர் விளைச்சல் ரகத் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்பு செயற்படுத்தப்பட்டபோது குட்டையான அயல்நாட்டு ரகங்களும், ஒட்டு ரகங்களும் எப்படி அமோக விளைச்சல் தரமுடியும் என்று எண்ணிய விவசாயிகள் பலர். ஆனால் ஐ.ஆர். 8 நெல், சி.எஸ்.எச். 1 சோளம், எச்.பி. 1 கம்பு போன்ற குட்டையான ரகங்கள் நாட்டு ரகங்களைவிட அதிக உர மேற்று அமோக விளைச்சல் கொடுக்க முடியுமென நம் தமிழ்நாட்டு விவசாயிகள் தங்கள் வயல்களிலேயே பயிரிட்டு அனுபவம்மூலம் அறிந்து தற்போது பெருமளவில் பயிரிடவும் முன் வந்திருக்கிறார்கள் என்பது வேளாண்மையில் பசுமைப் புரட்சி நடைபெறுகிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

வேளாண்மையில் ஏக்கர் மகசூல் அதிகரிக்க உயர்விளைச்சல் ரகங்கள் புகுத்தப்பட்டபின் ஒரு புதிய சகாப்தமே உருவாகியிருக்கிறது. உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டால் உணவுப் பற்றாக்குறை ஒழிந்து விடும்.

அமோக விளைச்சலுக்கு ஆடுதுறை-27 நெல்.

களம் கொழிக்க கண்டுமுதல் காண அதிசய நெல் ஐ.ஆர். 8.

வியக்கத்தக்க விளைச்சலுக்கு வீரிய ஒட்டுச் சோளம்.

எண்ணது நாளில் மகசூல் தருவது எச்.பி. 1 கம்பு.

தமிழகமெங்கும் பயிரிடச் சிறந்தது தக்காண மக்காச்சோளம்.

கொள்ளே மகசூலுக்கு கோ. 7 ராகி.

என்றெல்லாம் உயர் விளைச்சல் ரகங்களைப்பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். அத்துணைச் சிறப்பு வாய்ந்தவை. அதுமட்டுமல்ல; தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதோடல்லாமல், அண்டை மாநிலங்களுக்கு அனுப்பும் அளவுக்கு உபரி மாநிலமாகத் திகழ உறுதுணையாக இருக்கும் இந்த உயர் விளைச்சல் நெல் ரகங்கள்.

1969-70ஆம் ஆண்டில் உயர் விளைச்சல் நெல் ரகங்களை 23·00 இலட்சம் ஏக்கரில் பயிரிடவும் 1·75 இலட்சம் ஏக்கரில் வீரிய ஒட்டுச் சிறு தானிய ரகங்களைப் பயிரிடவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

மற்றும் ஒரு போகம் பயிர் செய்து வந்த நிலங்களில் இரண்டு பயிரும், இருபோகம் சாகுபடி செய்த இடங்களில் பாசன வசதியைக் கொண்டு மூன்று போகமும் பயிர் செய்தால் உணவு உற்பத்தியை வெகு வேகமாக அதிகரிக்க முடியும். எனவே ''பல பயிர்ச் சாகுபடித் திட்டம்'' உருவாக்கப்பட்டு இவ்வாண்டில் 10 இலட்சம் ஏக்கர் பரப்பில் செயற்படவிருக்கிறது. இத்திட்டம் சரிவர நிறை வேறத் தஞ்சை மாவட்டத்தில்தான் அதிக சாத்தியக் கூறுகள் உள்ளன. நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி உள்பட சுமார் 5 இலட்சம் ஏக்கரில் இரு போகச் சாகுபடித் திட்டம் நிறை வேற்றப்படும் எனக் கணக்கிடப் படுகிறது.

அடுத்தபடியாக வீரிய வித்துக்களே விளைச்சலுக்கு அடிப்படை என்பது

வெள்ளிடைமலையாகும். தரமான விதைகளைத் தயாரித்து விவசாயி களுக்கு வினியோகிக்கத் தமிழ்நாட் டில் வேளாண்மைத் துறையினர் தற் போது 162 விதைப் பண்ணைகளை நிறுவிச் செயற்படுத்தி வருகின்றனர். இது தவிர திருச்சி மாவட்டம் குடுமியாண்மலையில் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒரு மாநில விதைப் பண்ணையும் அமைக்கப்பட்டுள்ளது. 1968-69ஆம் ஆண்டில் 2855 டன்கள் நெல் விதைகளும் 181 டன்கள் சிறுதானிய விதைகளும் அரசினர் விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 3000 டன்கள் பொறுக்கு ரக நெல் விதைகளும், 360 டன்கள் சிறுதானிய விதைகளும் விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும். மற்றும் திருச்சி மாவட்டத்தில் மணக்கத்தி கிராமத்தில் 400 ஏக்கரும் கோவை மாவட்டம் பவானிப் பகுதியில் 100 ஏக்கர் நிலமும் விதைப் பெருக்கத் திற்காகப் பயன்படுத்தப்படவிருக் கின்றன. அரசினர் விதைப்பண்ணை களில் உற்பத்தியாகும் பொறுக்கு விதைகளின் தரத்தை உயர்த்த விதை பதனப்படுத்தும் சாதனம் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 'நல்லக்' அரசினர் விதைப்பண்ணை யில் நிறுவப்பட்டுள்ளது. இதுபோல் மற்றும் இரண்டு விதை பதனப்படுத் தும் சாதனங்கள் தஞ்சை மாவட்டத் தில் சாக்கோட்டை விதைப் பண்ணை யிலும், குடுமியாண்மலை மாநில விவசாயப் பண்ணையிலும் அமைக்கப் படவிருக்கின்றன.

பன்மடங்கு மகசூல் பெறப் பயிர் களுக்கு இரசாயன உரங்களை வேளாண்மைத் துறையினர் சிபாரிசு செய்யும் அளவு இடவேண்டும் என் பதை நான் உங்களுக்கு வலியுறுத்தத் தேவையில்லை. ''ஏரு மணமில்லாத பயிர் நறுமணமில்லாப் பயிருக்குச் சமம்'', ''ஏரு செய்வதை இனத்தான் கூடச் செய்யமாட்டான்'' என்ற பழமொழிகள் உரமிடுவதின்முக்கியத் துவத்தை உணர்த்துகின்றன.

தீவிர உரமிடும் திட்டத்தின்மூலம் 2·95 கோடியும், கூட்டுறவுப் பயிர்க் கடன்மூலம் 14·70 கோடியும் இரசா யன உரங்கள்வாங்க முதலீடு செய்யப் பட்டுள்ளது. சிறிது காலமாக வறட்சி நிலை இருந்தபோதிலும் பயிருக்கு இரசாயன உரமிடும் அளவில் ஓரளவு முன்னேற்றமே கண்டுள்ளது என் பதை 1·09 இலட்சம் மெட்ரிக் டன் கள் தழைச்சத்து உரங்கள், 0·35 இலட்சம் டன்கள் மணிச் சத்து உரங்கள், 0·31 இலட்சம் டன்கள் சாம்பல் சத்து உரங்கள் கடந்த ஆண்டில் வினியோகிக்கப்பட்டுள்ளதி லிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இரசாயன உரமிடுவதில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய து பயிர் வளர்ச்சிக்கு முக்கியத் தேவை யாகிய தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்று சத்துப் பொருட்களைச் சிபாரிசு செய்யப்படும் அளவு இடுதலே ஆகும். உயர் வினைச்சல் ரகங்களிலிருந்து நாம் அமோக விளைச்சல் பெறவேண்டு மானால் சரிவிகித அளவில் உரமிட வேண்டும். தற்போது தமிழ்நாடெங் கும் பரவலாக மழை பெய்துள்ளது. வரும் நவரை மற்றும் கார்ப் பட்டங் களில் இரசாயன உரங்கள் பயன் படுத்தும் அளவும் அதிகரிக்கக்கூடும். உர உபயோகத்தில் நேரடி இரசா யன உரங்களை உபயோகிப்பதைவிட டை - அம்மோனியம் பாஸ்பேட், யூரியா போன்ற இரசாயன உரங்களை இடுவது இலாபகரமானது.

உணவுப் பயிர்களானாலும், பணப் பயிர்களானாலும் பாசன வசதி இருந் தால்தான் சிறந்த மகசூலை எதிர் பார்க்கமுடியும். காவிரியில் கல்லணை கட்டிய கரிகால் சோழன் நீர்ப்பாசன முறையை உலகுக்கு எடுத்துக் காட்டிய தமிழகத்தில் இப்போது பெரிய நீர்ப்பாசன அணைகள் கட்ட வாய்ப்பில்லை. எனவே சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களாகிய புதிய கிணறுகள் வெட்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல், குழாய்க் கிணறுகளையும் வடிமூனைக் குழாய்க் கிணறுகளையும் அமைத்தல் முதலியன வற்றுல்தான் பாசன வசதியைப் பெருக்க முடியும். எனவே விவசாயி களுக்குச் சிறிய நீர்ப்பாசனத் திட்டத் தின்கீழ் கடன் வசதியும் மானியமும் அளிக்கப்படுகின்றன. 1968-69இல் 2077 புதிய குழாய்க் கிணறுகளும், 639 கிணறுகளுக்குள் குழாய்க் கிணறும் இறக்கப்பட்டன. 850 கிணறுகள் வேளாண்மைத் துறையி

லுள்ள பாறை உடைக்கும் இயந்திரங்கள்மூலம் ஆழப்படுத்தப்பட்டுப் பாசன வசதி அதிகரிக்கப்பட்டது. ஆறுகளில் தண்ணீர் வருமுன் நாற்றங்கால் தயாரிப்பதற்கு வசதி ஏற்படுத்தச் சென்ற ஆண்டில் 2594 வடிமூனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. நடப்பாண்டில் 3600 வடிமூனைக் குழாய்க் கிணறுகளும், 2500 குழாய்க் கிணறுகள், 850 கிணறுகளை பாறை உடைக்கும் கருவியின்மூலம் ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நம் நாட்டில் விவசாயம் இயந்திரமயமாகி வருவது உங்களுக்கு வருக்கும் தெரிந்திருக்கும். முக்கிய மான பருவங்களில் ஆட்கள் விவசாய வேலைகளுக்குக் கிடைப்பது அரிதாகி விட்டது. மற்றும் மிகக் குறுகிய காலத்தில் பெருவாரியான நிலப் பரப்பில் தீவிரமாகச் சாகுபடி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கு டிராக்டர்கள் மிகவும் பயன்படுகின்றன. வேளாண்மைத்துறையிலுள்ள 138 கிராலர் டிராக்டர்களும், 69 சக்கரவகை டிராக்டர்களும் நிலத்தைப் பண்படுத்தவும், மற்றும் சமப்படுத்துவதற்கும் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1968-69ஆம் ஆண்டில் 21520 ஏக்கர் பரப்பளவில் டிராக்டர் உழவு செய்யப்பட்டது. 9618 ஏக்கரில் நிலம் சமப்படுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்கென மேலும் 9 டிராக்டர்கள் ரஷ்யாவிலிருந்தும் 30 டிராக்டர்கள் அமெரிக்காவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. பழுதடைந்த டிராக்டர்களைப் பராமரிக்கக் கோவையிலும், திருவாரூரிலுமாக தமிழ்நாட்டில் தற்போது 2 டிராக்டர் பராமரிக்கும் நிலையங்கள்தான் உள்ளன. நடப்பு ஆண்டில் திருச்சி, வேலூர், மதுரை ஆகிய மூன்று இடங்களிலும் டிராக்டர் பராமரிக்கும் நிலையங்கள் அமைக்கப்படும்.

காற்றினலும், மழை நீரினலும் வளமான மேல் மண் அரித்துக் கொண்டு போகப்பட்டு நிலத்தின் வளம் குன்றுதிருக்கவும், கிடைக்கும் மழை நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் நம் மாநிலமெங்கும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டதால் மானுவாரி சோள மகசூல் 37 சதமும், சும்பு வீளைச்சல் 27 சதமும், நீலகிரியில் உருளைக்கிழங்கு மகசூல் 22 சதமும் உயர்ந்துள்ளது என ஆராய்ச்சிகளின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் சமவெளியில் 2,67,000 ஏக்கர் நிலத்திலும், மலைச்சரிவுகளில் 6702 ஏக்கர்களிலும் மண்வளப் பாதுகாப்பு முறைகள் அமுல் செய்யப்பட்டுள்ளன.

உணவு உற்பத்திப் பெருக்கத்தில் உழவர் பெருமக்களாகிய உங்கள் அனுவரின் உழைப்பின் பயனை முழுமையாக அனுபவிக்க விடாமல் முட்டுக்கட்டை போடும் விரோதிகள் பயிர்களைத் தாக்கும் பூக்கிகளும் நோய்களும் ஆகும். இவற்றை ஒழிக்கப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

'ஏரினும் நன்னூல் எருவிடுதல்
கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

என்று இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் பயிர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன்பு பயிர்ப் பாதுகாப்புக்காக மருந்து தெளிப்பது மிகவும் குறைவாக இருந்தது. ஆனல் தற்போது நெல், நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்கள் சாகுபடியாகும் பெருவாரியான நிலங்களில் வெகு விரைவில் மருந்து தெளிக்க ஆகாய விமானம் பயன்படுத்துவது 'விண் வெளிப் பயணம்' போன்ற ஒரு சர்வ சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. நடப்பு ஆண்டில் (1968-69இல்) சுமார் 2,37,000 ஏக்கரில் நெற்பயிருக்கும், 43,000 ஏக்கரில் மணிலாப் பயிருக்கும் ஆகாய விமானம்மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் சுமார் 10 இலட்சம் ஏக்கர் பரப்பில் விமானம் மூலம் மருந்து தெளிக்க மாபெரும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. மேலும் 1970-71ஆம் ஆண்டில் 35 லட்சம் ரூபாய் செலவில் கோவை வேளாண்மைக் கல்லூரியில் வானவெளி மருந்து தெளிப்பு பற்றிய ஆராய்ச்சிகான

பள்ளிக்கூடம் ஒன்று நிறுவவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

கையால் இயங்கும் தெளிப்பான்களும், தூவான்களும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் விவசாயிகளுக்குச் சகாய விலையில் வழங்கப்படுகின்றன. 1968-69-ஆம் ஆண்டில் கையால் இயங்கும் 5040 தெளிப்பான்களும் 611 தூவான்களும் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 5000 கையால் இயங்கும் தெளிப்பான்கள் வினியோகிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதுபோலவே பணப் பயிர்களான நிலக்கடலை, பருத்தி, வாழை, முந்திரி, தென்னை போன்ற பயிர்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் கணிசமானது.

முடிக்கும் முன்பு உங்களுக்கு செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் நடப்பாண்டு நவரைப் பட்டத்திலிருந்தே சுமார் 5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடும் வேளாண்மைத் துறையின் ஒரு சிறப்புத் திட்டத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த வறட்சிக்குப் பின் வடகிழக்குப் பருவமழை நமக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்துள்ளது. இந்த மூன்று மாவட்டங்களிலுமுள்ள ஏரிகளிலும் நீர் நிரம்பி வழிகின்ற அளவிற்குப் பாசன வசதிபெருகியுள்ளது. வேளாண்மைத்துறையின் வரலாற்றிலேயே கண்டறியாத ஒரு புதிய முறையில் இந்தச் சிறப்புத் திட்டம் செயற்படும். நீங்கள் இதுவரை ''நடமாடும் நூல் நிலையம்,'' ''நடமாடும் தபால் நிலையம்'' போன்ற வற்றைத்தான் பார்த்திருப்பீர்கள். தற்போது ''நடமாடும் விவசாயக் கிடங்கு'' விவசாயிகளின் இல்லங்களைத் தேடி வருகிறது. இதன் மூலம் வீட்டு வாசலிலேயே ஐ.ஆர். 8 நெல் விதைகள், தேவையான இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் கிராமங்கள் தோறும் லாரிகளில் கொண்டு சென்று கிடைக்க வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளை அடிக்கடி சந்தித்து, அவர்களை ஊக்குவிக்க இம்மூன்று மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட விவசாய அலுவலர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உழவர் பெருமக்களின் ஒத்துழைப்பினாலும் வேளாண்மைத் துறையினரின் இடைவிடா முயற்சியினாலும் இந்த ஆண்டில் 28 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. சென்ற ஆண்டில் அரிசி உற்பத்தி 22·7 லட்சம் டன்களாகவே இருந்தது என்பதும் சென்ற 5 ஆண்டுகளில் சராசரி ஆண்டு உற்பத்தி 24·6 லட்சம் டன்களாகவே இருந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கனவாகும்.

அடுத்த 'சீரணி'


கூட்டுறவுச் சிறப்பிதழாக

அமையும்.

நிறைந்த மகசூல் பெற வீரியவிதைகள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்து ஆகிய நவீன முறைகளை ஏற்கனவே உபயோகித்து வருகிறீர்கள்.

இப்போது கிருஷி இயந்திரக்கலப்பை

உபயோகித்து விவசாயத்தை மேலும் லாபகரமானதாகச் செய்யுங்கள்



கிருஷி இயந்திரக் கலப்பை உபயோகிக்க இலகுவானது. கடின உழைப்புக்கு ஈடு கொடுக்கவல்லது. நீடித்து உழைக்கவல்லது. உயரிய நான்கு ஜதை எருதுகள் செய்யக்கூடிய வேலையை அதனினும் குறைவான செலவில், விரைவாகவும் ஆற்றவல்லது. 5HP டீசல் என்ஜினால் இயங்கும் நீர்ந்த இயந்திரகலப்பையை உபயோகித்து மூன்று மணி நேரத்திற்குள் ஒரு ஏக்கர் நிலத்தை உழுது பண்படுத்தலாம்.

பலவிதத்தில் பயனளிக்கவல்லது கிருஷி

கலபமாக இயங்கவல்ல கிருஷி டீசல் இயந்திரக்கலப்பை நஞ்சை, புஞ்சை, விவசாயத்திற்கு மிகவும் ஏற்றது. உங்கள் நிலத்தில் உபயோகிப்பது மட்டுமின்றி பிறருக்கும் வாடகைக்கு விடுவதன்மூலம் அதனை முழுமையாக பயன்படுத்தலாம்.

நிலத்தை உழுது பண்படுத்தும் வேலைக்கு மட்டுமின்றி, கிருஷி டீசல் இயந்திரத்திற்கு தகுந்த உபகரணங்களைப் பொருத்தி, விதை விடுதல், நீர் இறைத்தல், பூச்சிமருந்து தெளித்தல், உரமிடுதல், கதிர் அடித்தல், நெல்குத்துதல், போக்குவரத்து போன்ற பல விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

கிருஷி இயந்திரம் எவ்வளவு லாபகரமாக பணியாற்றவல்லது என்பதுபற்றி மேலும் விவரங்கள் அறிய எங்களுக்கு எழுதுங்கள்.

கிருஷி உங்கள் விவசாய உழைப்பு, நேரம், செலவு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கிறது

தயாரிப்போர் : **கிருஷி என்ஜின்ஸ் பிரைவேட் லிமிடெட்**
ஹைதராபாத்-18 (A.P.)
பூரண விற்பனையாளர்கள் : கிருஷி சேல்ஸ் & சர்வீஸ்.
ராஷ்டிரபதி ரோடு, செகந்திராபாத்-(A.P.)

Krishi

KEP-5243R

மகளிர் நலப் பணிகள்

டாக்டர். திருமதி ஜெயலட்சுமி. ஏ.ராவ்
(மாதர் நலத் துறை இயக்குநர்)

பாரதநாடு விடுதலை பெற்ற பின்னர், மகளிர் நலங்கருதி அதற்கெனத் தனித் துறை ஆரம்பிக்கப்பட்ட பெருமை தமிழகத்தையே சாரும். 1947ஆம் ஆண்டு இப்பணி தொடங்கியது. பல்வேறு கிளைகள் மாவட்டங்கள் தோறும் செயலாற்றத் தொடங்கின. இன்று 48 கிளைகள், சென்னை முதல் கன்னியாகுமரிவரையிலும் சிறந்தபணி ஆற்றி வருகின்றன. மாதர் நல அமைப்பாளர்கள், மாவட்ட மாதர் நல அதிகாரிகள் மேற்பார்வையில் குழந்தைகள் காப்பகங்களிலுள்ள பிள்ளைகளுக்குக் காலையில் கல்வி ஊட்டி வருகிறார்கள். தன்னம்பிக்கை, சமூகத்தோடு பழகும் தன்மை, தன்கையே தனக்கு உதவி என்ற பழமொழிக்கேற்ப இயன்றவரை தமக்கு வேண்டியவற்றைத் தாமே செய்துகொள்ளும் பண்பு ஆகியவற்றைக் குழந்தைகள் பெற இக் குழந்தைக் காப்பகம் உதவுகிறது. அன்றியும் சுகாதாரம், சுத்தம் முதலியவற்றின் முக்கியத்துவத்தை உணரவும் அமைப்பாளர், குழந்தைகளுக்கு உதவி செய்கிறார். சின்னஞ்சிறு கதைகள், செய்கைப் பாடல்கள், மற்றும் பல்வகை முறைகளால் அவர்களுடைய அறிவு வளர்க்கப்படுகிறது. மாலை நேரத்தில் அமைப்பாளர், இல்லங்களுக்குச் சென்று மாதர்களோடு அளவளாவி, அவர்களுக்கு வீட்டுத்தோட்டம் போடல், நோய்ப் பாதுகாப்பு, வீட்டுமருந்து, குடும்பக் கட்டுப்பாடு, குழந்தை வளர்ப்பு, ஓய்வுநேரப் பொழுதுபோக்கு, தொழில் வருவாய் தரும் சிறுதொழில்கள் இவை பற்றி அறிவுட்டுவதுடன், பயிற்சி மூலமாகவும், மகளிர்க்கு உதவி செய்து வருகிறார். இத்தகைய அமைப்பாளர்கள், மாவட்டங்கள் தோறும் பணியாற்றுவதால், இன்று கிராம மக்களிடையே புதுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஏற்பட்டு இருக்கின்றன. இவைதவிர தையல் துணிகளை வெட்டி இயந்திரத்தில் தைத்தல், பூவேலை செய்தல், பாய்முடைதல், பனைஓலை கயிறு ஆகியவை கொண்டு பல்வேறு பொருள்கள் ஆக்குதல், கயிறு திரித்தல், அப்பளம் இடுதல், இலை தைத்தல் முதலிய பல்வேறு சிறுதொழில்களை, பெண்கள் செய்யப் பொருளும் உதவியும் வழங்கப்படுகின்றன. வீட்டிலே முடங்கிக் கிடக்கும் பெண்கள் வெளியே வந்து ஒருவருக்கொருவர் பழகித் தத்தம் கருத்துக்களைப் பறிமாறிக் கொள்வதற்காகப் பிற்பகலில் கூட்டங்களும் அமைப்பாளரால் ஏற்படுத்தப்படுகின்றன. இதனால் மகளிர் கிணற்றுத்தவளைபோல் வாழாது, உலகியல் அறிந்து, காலநிலைக்கேற்ப முன்னேற்றமடைந்து வருகின்றனர். சிறு தொழில்கள் செய்து அதனால் மகளிர் ஊதியம் பெறுகின்றனர். இவ்வாண்டில் ரூ. 77821·57ஐ. தம் சிறுதொழில்கள் ஊதியமாக, மகளிர் பெற்றிருக்கின்றனர். இம்மகளிர் செய்த பொருள்கள் ரூ. 42148·72 விற்கப்பட்டிருக்கின்றன.

மகளிர் மன்றக் கூட்டங்கள்: ''சாதிச் சண்டை போச்சோ, உங்கள் சமயச் சண்டை போச்சோ, நீதி சொல்ல வந்தாய் என்முன் நிற்கொணுது போடா'' என்று விடுதலை கேட்ட இந்தியனே வெள்ளையன் விரட்டியடித்ததாகப் பாரதியார்

பாடுகிறார். பாரதநாடு அடிமைத் தளையினின்று அகன்ற பின்னர் சாதியும் சமயப்போரும் நாள்தோறும் மெல்லமெல்லமறைந்து வருகின்றன. மகளிரிடையே, குடிகொண்டுள்ள இன, சாதி, மத வேறுபாடுகள் போன்ற குறுகிய நோக்கங்கள் மறைவதற்குமகளிர் மாதாந்திரக் கூட்டங்கள் மிகவும் உதவுகின்றன. 'ஏழை என்றும், அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில் இழிவுபெற்ற மனித னென்பது இந்தியாவில் இல்லையே' என்ற தத்துவம் இன்று மக்களிடையே பரவ இந்த மகளிர் கூட்டங்கள் மிகவும் உதவுகின்றன.

மகளிர் நலத்துறைச் சங்கங்களிலே நாள்தோறும், எழுத்தறிவு ஊட்டும் பணிநடைபெறுவு வருகிறது. இத்தகைய வகுப்புகளுக்கு இவ்வாண்டு 508 பேர் வந்து பயன் பெற்றிருக்கின்றனர். படிக்கவும், எழுதவும் தெரியாதிருந்த பல பெண்கள் இதனால் பயன் அடைந்து இருக்கின்றனர்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' ஆதலால் சுத்தம், சுகாதாரம், தம் வீட்டுப்புறங்களையும், தெருக்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் ஆகியவைப்பற்றி அமைப்பாளர்கள் மகளிர்க்கு எடுத்துக் கூறுவதுடன், முதலுதவி, கை மருந்துகள் ஆகியவைப்பற்றியும் கூறி வருகின்றனர். அன்றியும் நோயுற்றவர்களை மருத்துவ நிலையத்தில் சேர்த்தல், காசநோய், தொழுநோய் விசாரணைகள் ஆகியனவும் நடைபெறுகின்றன. இவற்றுல், 14,214 பெண்கள் இவ்வாண்டிலே பயன் பெற்றுள்ளனர்.

சத்துணவும் செய்முறை காட்சிகளும்: சத்துப் போகாமல் உணவுகளைச் சமைப்பது, அரிசி அல்லாத கேழ்வரகு, கோதுமை, சோளம் முதலிய தானியங்களைக்கொண்டு சுவைமிக்க பல்வகைப் பண்டங்களைச் செய்தல் ஆகியவை பற்றியும் அமைப்பாளர்கள் பெண்களுக்குப் போதிப்பதோடு செய்தும் காட்டுகின்றனர். இதனால் நெருக்கடியான நேரத்திலே அரிசியல்லாத பல உணவுப்பொருள்களைச் செய்து, நாட்டிலே பஞ்சம், பரவாத வாறு தடுப்பதற்குப் பெண்கள் உதவிபுரிகின்றனர்.

வீட்டையன்றி, வெளியுலகம் தெரியாத பெண்கள் இன்னும் கிராமங்களில் இருந்துவருகின்றனர். அன்னவர்களை, உல்லாசப் பயணம் முதலியவற்றிற்கு அழைத்துச் சென்று பல்லோருடன் பழகிப் பயன் பெற அமைப்பாளர்கள் உதவுகின்றனர்.

இத்தகைய பணியாற்றும் சங்கங்கள் 48 உள்ளன. இவற்றிலே, செங்கை மாவட்டத்தில் பம்மலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அலீஸ் நகரும் மலேவாசிகளுக்காகத் தனிப்பட்ட முறையில் நடத்தப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

உற்பத்தி நிலேயங்கள்: மாதர் நலத்துறையினரால் 44 தொழில் நிலேயங்களும், 7 உற்பத்தி நிலேயங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுல் அரிசனங்களும், பிற்பட்ட வகுப்பினர்களும், மிகவும் பயன் பட்டு வருகின்றனர். இவற்றிலே தையல், சமுக்காளம் நெய்தல், பாய் முடைதல், பிரம்புவேலே, மூங்கில் பொருள் செய்தல், கயிற்றினுல் பல பொருட்கள் செய்தல், கம்பளி நெய்தல், துணிப் பொம்மைகள் செய்தல், மரப்பொம்மைகள் ஆக்குதல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பயிற்சி பெற்றோரில் பலர், உற்பத்தி நிலேயங்களில் வேலேக்கு அமர்த்தப்படுகின்றனர்.

வாஞெலி கேட்போர் சங்கங்கள்: இத்தகைய சங்கங்கள் 350 நடைபெறுகின்றன. இவற்றுல் மகளிரும், மற்றையோரும்பல்வேறு இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பெரும்பயன் அடைகின்றனர்.

சத்துணவுத் திட்டம்: யூனிசப் உதவியுடன் இது நடைபெறுகிறது. 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கும் வகையில், இது பணியாற்றி வருகிறது. ஆரணி முதல் சாத்தூர்வரை 12 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களிலே சத்துணவு வழங்கப்படுகின்றது.

குடும்பக் கட்டுப்பாடுக் கல்வி: 'அளவுடைய மக்கள், அனந்தமுள்ள குடும்பம்' என்று இப்போது எல்லோரும் உணர்ந்து வருகின்றனர். நாட்டிலே நல்வாழ்வு வளர, மக்கள் கட்டுப்

பாடு தேவையாய் இருக்கிறது. குடும்பக்கட்டுப்பாடு இல்லாமையால் ஏற்படும் துன்பங்களை நமக்கு எடுத்துக் காட்டவே ஆடவர்களிலே குசேலர் கதையும், மகளிரிலே நல்ல தங்காள் கதையும் நம் நாட்டிலே வழங்கிவருகின்றன. கதையைப் படித்தும் கல்வி பெறுதவர்களுக்கு அமைப்பாளர்கள், கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் ஆகியோர் நேரிலே சென்று மகளிர்க்குக் குடும்பக் கட்டுப்பாடு இல்லாமையால் ஏற்படும் துன்பங்களை விளக்கிக் கூறுகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்குரிய வழிகளை விளக்குகின்றனர். 12688 மகளிர் மன்றங்களிலும் இத்தகைய கல்வி போதிக்கப்படுகிறது. இதற்கென 2,985 உறுப்பினர்கள் பயிற்சி பெற்றனர். மதுரை, செங்கல்பட்டு மாவட்டங்களில் மட்டுமே முறையே 12,287;20,727 பெண்கள் இது பற்றிய அறிவு பெற்றுள்ளனர்.

5,977 மகளிர் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். 4,587 பேர் (I. U. C. D.) பொருத்தப்பட்டிருக்கின்றனர்.

பரிசுப் போட்டிகள்: மாவட்ட நிலையில் சிறந்த கிராம சேவிகையாகப் பல்லிப்பட்டியில் பணியாற்றிய செல்வி வசந்தகுமாரி நற்சான்றிதழும் பரிசும் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

சேவையில்லங்கள்: கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்டோர், அனுதைகள் ஆகியோர்க்கு அடைக்கலம் கொடுக்கவேண்டியது அரசினரின் கடமையெனத் தமிழகம் உணர்ந்தது. இதற்காக மகளிர் நலத்துறையினரின் வாயிலாகச் சென்னையில் தாம்பரத்திலும், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூரிலும், பின்னர் தஞ்சாவூரிலும் இத்தகைய சேவையில்லங்களை நடத்தி வருகின்றனர். வாழ்விலே ஏக்கமுற்று வருந்தி, துயருற்ற பல மகளிரும் அவர்தம் சிறு குழந்தைகளும் இச் சேவையில்லங்களால் பெரும் பயன் அடைகின்றனர். ஜாதி மத இன வேறுபாடற்ற சமரச நோக்கத்தோடு இத்தகைய மகளிர்க்காக நடத்தப்படும் இந்த இல்லங்களில், பலவகைத் தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவற்றிலே தேர்ந்தவர்கள் பின்னர் தாமாகவே தொழிலைத் தொடங்கி வாழ்க்கையைச் சிறப்புற நடத்தும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர். அன்றியும் குறுகிய காலக் கல்வித் திட்டத்தின் கீழ் எஸ். எஸ். எல்.சி. தேறி, மேற்படிப்புக்கும் ஆசிரியர் பயிற்சிக்கும் பலர் செல்கின்றனர். சேவை இல்லத்திலே தங்கிய 3 ஆண்டு காலத்திலே அவர்கள் செய்த பல்வகையான கைவினைப் பொருள்கள் பல இடங்களிலும் விற்பனையாவதுடன், ஆண்டுதோறும் பொருட் காட்சிச்சாலைகளிலும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஈட்டித் தருகின்றன. தாம்பரம் சேவை இல்லத்தில் மட்டுமே ரூ. 8,716 மதிப்புள்ள பொருள்கள் செய்யப்பட்டு, ரூ. 8,423க்கு விற்கப்பட்டிருக்கின்றன. தஞ்சைச் சேவை இல்லத்திலே ரூ. 778 மதிப்புள்ள பொருள்கள் செய்யப்பட்டு ரூ. 676க்கு விற்கப்பட்டிருக்கின்றன.

இவை தவிர, காய்கறித் தோட்டங்களின் வாயிலாகவும், கோழிப் பண்ணை மூலமாகவும், தேனீ வளர்ப்பு மூலமாகவும் இச்சேவை இல்லங்கள் பொருளை ஈட்டுகின்றன.

பணிபுரிவோர் தங்கும் இல்லம்: தத்தம் ஊரைவிட்டு நகரங்களுக்கு வந்து, பணியாற்றும் பல பெண்கள் தங்குவதற்குத் தக்க இடமின்றி வருந்துவதைத் தவிர்க்க மகளிர் நலத்துறையினரால் சென்னை எழும்பூரில் இதற்கெனத் தனித்தோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு, 1967ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இதனால் பல பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

போர்வீரர்கள் நிவாரணநிதி: இதற்கென மாதர் நலத்துறையின் சார்பிலே ரூ. 17,13,497 திரட்டப் பெற்று இது மாவட்டங்களிலே போர்வீரர்கள் குடும்ப நலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறுசேமிப்புத் திட்டம்: சிக்கனமும் சேமிப்பும் வாழ்வை சிறக்கவைக்கும் வழிகள். எனவே, மாதர்நல அமைப்பாளர்கள், முக்கிய சேவிகைகள், கிராமசேவிகைகள் ஆகியோர் மாவட்ட மகளிர் நல அதிகாரிகளின்

ஆதரவு கொண்டு, ஆங்காங்கே சிறு சேமிப்பின் இன்றியமையாமையை மகளிர்க்கும் மற்றையோர்க்கும் உணர்த்தி வருகின்றனர். இதில் சிறப்பாகப் பணியாற்றும் மகளிர் மன்றத்துக்குச் சுழற்கேடயம் ஒன்றையும் வழங்க அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது.

பொருட்காட்சி : ஆண்டுதோறும் தலைநகரிலும், மாவட்டங்களிலும் நடைபெறும் பொருட்காட்சிகளில் மாதர் நலத்துறை பங்கு எடுத்துக் கொள்கிறது. மாவட்டக் கிளைகள், சங்கங்கள், சேவை இல்லங்கள், ஊராட்சி நிலையங்கள், தொழில் நிலையங்கள் ஆகியவற்றிலே மகளிரால் செய்யப்பட்ட பல்வகைப் பொருள்கள் இங்குப் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. மகளிர் நலத்துறை ஆற்றும் பணிபற்றியும், அதனால் மக்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும் விளக்கப் படங்களும், புள்ளி விவரச் செய்திகளும் இங்கே காணப்படுகின்றன. இங்கு ஆண்டுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு மகளிர் நலத்துறை மன்றங்களால் பொருள்கள் செய்து விற்பனையாகின்றன.

பத்திரிகை: மாதர் நலத்துறை ஆற்றிவரும் பணிபற்றி மக்கள் அறிந்துகொள்ள பாக்கியலட்சுமி என்னும் பத்திரிகை இத்துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. சின்னஞ்சிறு கதைகள், கவிதைகள், அறிவூட்டும் கட்டுரைகள், உள்ளத்தை அள்ளும் மாசிலாக்கதைகள், விருந்து, மருந்து முதலியவற்றைப் பாக்கியலட்சுமியில் காணலாம். பல்லாயிரக்கணக்கான மக்கள் பாக்கியலட்சுமியைப் படித்துப் பயன்பெறுவதோடு, பாராட்டியும் எழுதிவருகிறார்கள்.

மாநாடுகள்: மகளிர் நலத்துறையினர் சுதந்திரத்தினம், குடியரசு தினம், காந்திஜெயந்தி, பொங்கல், தீபாவளி, சரசுவதி பூசை போன்ற விழாக்களைக் கொண்டாடுவதுடன் முக்கியமான மாநாடுகளிலும் அவ்வப்போது பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

சுருங்கக் கூறின், தமிழ்நாடு அரசின் கீழ் நடைபெற்றுவரும் பல்வகைத் துறைகளிலே, மாதர் நலத்துறை நேரடியாக,நிறப்பாக மகளிர்க்கும் குழந்தைகளுக்கும் பொதுவாக நாட்டு மக்கள் அனைவர்க்கும் சீரிய பணிஆற்றி வருகிறது என்று சொல்வது மிகையாகாது.


ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறையுடன்
'சீரணி' இதழ் இணைக்கப்படுகிறது

இதுநாள் வரை கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த மக்கள் தொடர்பு அலுவலர் பிரிவும், 'சீரணி' இதழ் பிரிவும் பிப்ரவரித் திங்கள்முதல் தலைமைச் செயலக ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறையுடன் (R.D. & L.A.) இணைக்கப்படுகிறது.

இனித் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :


மக்கள் தொடர்பு அலுவலர்
ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை
தலைமைச் செயலகம்
கோட்டை
சென்னை-9

ஆசிரியர்
சீரணி இதழ்
கோட்டை
சென்னை-9




இன்னொரு மகனை?
பொறும் ஐயா

மூணுக்குப் பிறகு
போறும் ஐயா



devp 69/470

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து



கேரளத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள் அனைவரும் வேலைகளை இழந்து, பசியால் வாடி நின்ற காலை, கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களின் துயர்களைத் துடைத்து, வாழ்வில் வருவாயையும் அமைதியையும் தேடித் தந்தன. அந்த இன்னல் மிகுந்த நாட்களில், கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு சிறப்பான முறையில் பணியாற்றினவென்பதை இங்குக் காண்போம்.

பல்லாண்டுகளாகப் பீடிகளைத் தயாரித்து விற்பனை செய்த பெரும் வணிகர்கள், திடீரென்று உற்பத்தி நிலையங்களை மூடிவிட்டனர். இதனால் பன்னிரண்டாயிரம் பீடித் தொழிலாளர்கள், சென்ற ஆண்டின் அக்டோபர் நவம்பர் திங்கள்களில் வேலை இழந்து பெரும் அவதிக்காளாயினர். தொடக்கத்தில் இது தொழில் தகராறு போன்றே தெரிந்ததால், இப் பிரச்னையில் எவரும் அதிகக் கவனம் செலுத்தாதிருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல இது ஒரு 'மனிதாபிமானப்பிரச்னை'யாகிவிட்டது. கன்னனூர் மாவட்டப் பொருளாதார நிலை இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது.

வழி பிறந்தது

மக்கள் நலத்தில் நாட்டங் கொண்ட அனைவரும் உரிமையாளர்களை அணுகி, தொழிலாளர்களின் இன்னல்களைத் தெளிவாக எடுத்துக் கூறி மன்றுடியபிறகுங்கூட, உரிமையாளர்கள் உற்பத்தியைத் தொடங்க மறுத்துவிட்டனர். எனவே, தொழிலாளர்களின் துயர் களைந்து அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியைக் கொணர்வது மாநில அரசின் தலையாய கடமையாயிற்று.

அரசு நிகழ்த்திய பல்வேறு ஆலோசனைகளிலிருந்து, கூட்டுறவு முறையே சிறந்த வழியென முடிவெடுக்கப்பட்டது. அதற்கேற்ப கன்னனூர் மாவட்டத்தைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு மையக் கூட்டுறவுச் சங்கமும், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு கிளைக் கூட்டுறவுச் சங்கமும் நிறுவப்பட்டன. கிளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை மையச் சங்கம் அவ்வப்போது அளித்து, பீடிகளைப் பெற்று விற்பனை செய்யும்.

செயல் துவங்கியது

வேலையிழந்த தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன், கேரளத் தொழிலமைச்சர் கலந்துரையாடி 12 சங்கங்களைத் தொடக்கத்தில் நிறுவுவதென முடிவெடுக்கப்பட்டது. ஆனால் தொழிலாளர்களின் நிலை மிகவும் இரங்கத்தக்க நிலையிலிருந்ததாலும், மேலும் 8 சங்கங்கள் பின்னர்த் துவக்கப்பட்டன.

ஒவ்வொரு கிளைச் சங்கமும், ஓர் உற்பத்தி நிலையமாக அமைக்கப்பட்டது. இங்குத்தான் பீடிகள் சுருட்டப் பெற்று, உலர்த்தப்படும். பின்னர் கட்டுக்களாகக் கட்டப்பெற்று மத்தியச் சங்கத்திற்கு அனுப்பப்படும். ஒவ்வொரு நிலையத்திலும் 50 தொழிலாளர்கள் பணியாற்றுவர். கிளைச் சங்கத்திலுள்ள மேற்பார்வையாளருக்கு, அச்சங்கமே ஊதியமளிக்க வேண்டும். பீடிகளின் தரத்தை அவ்வப்போது சோதித்து, சிறந்தன வற்றை மையச் சங்கத்திற்கு அவர் அனுப்புவார். மைய நிலையத்திலுள்ள தலைமைச் சோதகர் கிளை நிலையத்திலிருந்து வரும் பீடிகளைச் சோதிப்பார். இவருக்கு மையச் சங்கம் ஊதியம் அளிக்கும். இயக்குநர்கள் அடங்கிய ஒரு குழு கிளைச் சங்க அலுவல்களைக் கவனிக்கும். முதல் மூன்றாண்டுகளுக்கு அரசால் நியமனம் செய்யப்படுபவர்களே இயக்குநர்களாகப் பணியாற்றுவர்.

உதவி கிடைத்தது

பீடித் தொழிலாளர்கள், சமுதாயத்தில் மிகவும் நலிந்த இனத்தைச் சார்ந்தவர்களாயிருப்பதால், அவர்களால் பங்கு மூலதனம் செலுத்தப் படமுடியாத நிலையை அரசு தெளிவாக உணர்ந்தது. எனவே, ஒவ்வொரு பங்கிற்கும் உள்ள மொத்த மூலதனத்தில், தொழிலாளர் ஒருவர் ரூ.1 மட்டும் அளித்தால் போதுமென்றும், எஞ்சிய ரூ. 19-ஐ அரசு நீண்ட காலக் கடனுக அளிக்குமென்றும் அரசு கூறியது. இதற்கென அரசு ரூ. 1·90 இலட்சத்தை ஒதுக்கியது.

கூட்டுறவு முறையில் பீடிகளை உற்பத்தி செய்ததால்மட்டுமே, பீடித் தொழிலாளர்கள் முழுப் பயனைப் பெறவியலாது. தயாரிக்கப்பட்ட பீடிகள் அனைத்தும் விற்பனை செய்யப் படவேண்டும். ஆனால் பீடியுலகில் பலத்த போட்டியிருப்பது நாம் நன்கு அறிந்ததே. எனவேதான், முதலில் மூவாயிரம் தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்தியைத் துவங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு தொழிலாளியும் 750 பீடிகள் மட்டுமே சுருட்டவேண்டும்.

விற்பனை பெருகியது

1969ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மேலும் 1000 பேர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இருப்பினும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கையில் நான்காயிரம் பேர்களுக்கே வேலை வாய்ப் பளித்தது, அனைவருக்கும் சங்கடத்தையே அளித்தது. விற்பனை பெருகினுலன்றி, உற்பத்தியைக் கூடுதலாக்கவியலாது. எனவே, 1969ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பீடி விற்பனை இயக்கமொன்று கொண்டாடப் பெற்றது. இவ்வியக்கத்தின்போது இலட்சக்கணக்காக ரூபாய்கள் மதிப்புள்ள பீடிகள் விற்பனை செய்யப் பட்டன.

மையச் சங்கம் மேற்கொண்டுள்ள பொறுப்புக்கள் சாதாரணமானவையல்ல. காலப்போக்கில் 12,000 பேர்களுக்கு வேலை அளிக்கவேண்டும். தவிர, கிளைச் சங்கங்களுக்கு மூலப் பொருட்களை அளிக்கவும், தயாரான பீடிகளைக் கிடங்குகளில் வைத்துக் காப்பாற்றவும் மையச்சங்கம் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. இவையனைத்தையும்விட, பீடிகளை இலாபகரமாக விற்பனை செய்ய வேண்டும்.

துயர் கலைகிறது

இத்திட்டம்தொடங்கப்பட்டுத் தற்போது ஆறு திங்களகளையாகின்றன. இக் குறுகிய கால அளவில், மேற்காணும் இடர்ப்பாடுகளனைத்தையும் மையச் சங்கம் திறம்பட வெல்ல வேண்டியிருந்தது. இருப்பினும், இந்நாள் வரை மைய, கிளைச் சங்கங்கள் ஆற்றியுள்ள சிறந்த பணி மிகவும் போற்றுதற்குரியது. ஆறு திங்கள் காலத்தில் 4000 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்தது சிறந்த சாதனையேயன்றே!



தைவிடாத நிலம்

இராஸ்தான் பாலைவனத்திலுள்ள 10,000 ஏக்கர்களில் விரைவிலேயே 'பசுமைப் புரட்சி' நிகழவிருக்கிறது.

வெளிநாட்டு நிபுணர்களால் கைவிடப்பட்ட இந்த 10,000 ஏக்கர் களில் எல்லாவிதத் தானியங்களையும் பயிரிடமுடியும் என்ற ஓர் அருமையான தகவலை மண்வள மைய ஆராய்ச்சி நிலையத்தினர் அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

தொடக்கத்தில் 15 ஏக்கர் நிலம் மட்டுமே ஆராய்ச்சிக்கென ஒதுக்கப் பட்டது. இந்நிலத்தில் பல்லாண்டுகளாகப் புல்கூடத் தோன்றவில்லை. மேலும், இதில் உப்பு அதிகமாகக் கலந்திருந்ததால், மண் பற்பல விதங்களில் காணப்பட்டன.


பாலையில் நெல்வயல்

டாக்டர் ஐ. சி. தாஸ் அவர்களின் சீரிய தலைமையில் மண்சோதனை நடைபெற்றது. 'ஜிப்சம்' என்ற உப்பைச் சேர்த்து, நிலத்தை உழுதால் ஓரளவு பயன் கிடைக்கலாமென்று முதலில் கண்டறியப்பட்

டது. அதற்கேற்ப 15 ஏக்கர்களும் பற்பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மேலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. ஒரு பகுதியில் பசுந்தாள் உரம் பயிரிட்டபின்னர், வயலே நன்கு உழுது நெல்லைப் பயிரிட்டனர். வயலுக்குத் தொழு உரம்மட்டுமே தரப்பட்டது. என்ன விந்தை! புல் கூட முளைக்காத அந்நிலத்தில், ஏக்கருக்கு 60—70 மணங்குவரை நெல் விளைச்சல் கிடைத்தது! ஏனைய சிறந்த பகுதிகளைப் போன்றே, இப் பாலை வனப்பகுதியிலும் மிகு விளைச்சல் கிடைத்துள்ளதென ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். இப் பகுதியில், ஏக்கருக்கு 20 முதல் 30 மணங்கு விளைச்சல் கிடைப்பதே மிகு விளைச்சலாகக் கருதப்படுகிறதாம்!

போதிய நீர், உரம் போன்றவை தடங்கலின்றிக் கிடைப்பின், ஆறு திங்கள் காலத்தில் இப்பாலை வனப் பகுதியைச் சோலையாக மாற்ற வியலும் என்று டாக்டர் தாஸ், டாக்டர் ஆஞ்சனேயலு என்ற இரண்டு விஞ்ஞானிகளும் உறுதியாகக் கூறுகின்றனர்.

நம் விஞ்ஞானிகளின் அறிவுத் திறன் நமக்கு மகிழ்வைத் தருகிற தல்லவா?



மத்தியப் பிரதேச உஜ்ஜயின் மாவட்டத்திலுள்ள சிறிய ஊர், 'மகித்பூர்சாலே.' ஓராயிரம் மக்களே இங்கு வசிப்பினும், ஒரு சர்க்கரை ஆலையும், புகைவண்டி நிலையத்தையும் இது தன்னகத்தே கொண்டுள்ளது. இவை தவிர, மகித்பூர் சாலையில் ஓர் உயர்நிலைப் பள்ளி, ஒரு மருந்தகம், ஒரு சிறந்த அங்காடி ஆகியவையும் உள்ளன. ஊர் முழுவதிலும் மின்விளக்குகள் இரவில் ஒளியை உமிழ்கின்றன.

ஓர் ஊருக்குத் தேவையான எல்லா வசதிகளும் இங்கிருக்கையில், ஒரு குறையும் கூடவே இருந்தது. அதுதான் போதிய சாலை வசதிகள் இல்லாமை. மழைக் காலங்களில், முழங்கால் அளவு நீரில்தான் ஊர் மக்கள் ஓரிலவத்திலிருந்து மறு இல்லத்திற்கும், மற்ற ஊர்களுக்கும் செல்லவேண்டும். ஊர் மக்கள் அனைவரும் பற்பல தொழில்களைத் தழுவி, நாள் முழுவதும் ஓயாது உழைத்ததனால், ஊருக்குரிய பொது நன்மைகளைக் குறித்து, எவரும் சிந்திக்க வில்லை; ஊராட்சியும் இதுபற்றிப் பேசிய கவனம் செலுத்தாதிருந்தது.

கருத்து பிறந்தது

மகித்பூர் சாலையின்கண் வதியும் திரு. சீமாலி என்பவர் சாலைகளின் சீர்கேடான நிலைபற்றி மிகவும் கவலை கொண்டு சிந்திக்கலானார். அவருடைய தெருவைமட்டும் செப்பனிட்டுச் சீராக்கினால் அதைக் கண்ணுறும் ஏனைய மக்களும் அவரவர் தெருக்களை சீராக்கிக் கொள்வர் என்ற கருத்தின் பேரில், செயலில் முனைந்தார். தன் தெருவிலுள்ள பள்ளி மாணவர்களைக் கண்டு பேசி, அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டார்.

செயல் வளர்ந்தது

தெருவை எவ்வாறு சீராக்குவது? திரு. சீமாலிக்கு ஓர் அரிய வாய்ப்புக் கிட்டியது. தெருவின் தாழ்வியிலிருந்த கிணறுக்கருகாமையில், ஏராளமான சரளைக் கற்கள் குவியலாகக் கிடந்தன. அவற்றைத் திரு. சீமாலியும், மாணவர்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுமந்து வந்து தெருவில் பரப்பிச் சாலை அமைக்கத் தொடங்கினர். இது ஒரு பொது நலப் பணியானதால், ஊராட்சி எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. விரைவிலேயே தெருவின் பெரும் பகுதியில் சரளைக் கற்கள் பரப்பப் பட்டன.

எஞ்சி நின்ற ஒரு பகுதிக்குச் சரளைக் கற்கள் தேவைப்பட்டன. எங்கே செல்வது? அதற்கும் ஒரு வழி தென்பட்டது. ஊரில் ஒரு பெரிய கிணறை அண்மையில் தோண்டி முடித்திருந்தனர். கிணறைத் தோண்டுகையில் ஏராளமான கற்கள் கிடைத்தன. அவை கிணறுக்கு அருகிலேயே கிடந்தன. திரு. சீமாலியும் அவருடைய தோழர்களும், அக் கற்களைச் சுமந்து வந்து, எஞ்சிய

பகுதிகளில் போட்டனர். இவர்களின் தன்னலமற்ற சேவையைக் கண்ணுற்ற ஊராட்சி, நிதியுதவி அளித்ததோடன்றி, ஊராட்சி உறுப்பினர்களும் இப் பணியில் தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்தனர். ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்கள் உழைத்ததனால், சாலை முழுவதும் சரளைக் கற்கள் பரப்பப் பட்டன.

முடிவு பெற்றது

இப்பணி முடிவுற்ற பின்னர், சிறிது பணத்தைச் செலவிட்டு, சாலையைச் சமப்படுத்தினர். பிறகு பெய்த மழையினால் சாலை நன்கு அமைந்து விட்டது.

'மகித்பூர் சாலை' என்னும் இவ்வூரில் திரு. சீமாலியின் தெருமட்டும் இன்று சரளைக் கற்களால் அமைக்கப் பட்டுப் பொலிவுடன் விளங்குகிறது.

திரு. சீமாலியைத் தழுவி, ஒவ்வொரு தெருவினரும், தத்தம் தெருக்களைச் செப்பனிட்டுக் கொள்ளலாமே! இயலாத செயலா என்ன?



சுற்றிலும் வண்ணமலர்கள்; ஒரு பக்கம் கோழிப்பண்ணை; மற்றொரு பக்கம் பால் பண்ணை! இவற்றிற்கு நடுவினிலே ஓர் அலுவலகக் கட்டடம். அக்கட்டடத்தின் ஓர் அறையிலே ஓர் அழகிய மேசை. அதன் மேல் ஒரு தொலைபேசி. அருகிலுள்ள அலமாரியில், கணக்குப் புத்தகங்களும் பதிவேடுகளும். இவை மட்டுமா? மற்றோர் அலமாரி நிறையப் பண்ணைச் செய்திகளும் தகவல்களும் அடங்கிய குறிப்புக்கள் ஒரு தட்டில். மற்ற விடங்களில் வேளாண்மை ஆராய்ச்சி பற்றிய புத்தம் புதிய கட்டமைக்கப்பட்ட நூல்கள். இவையனைத்தையும் கண்ணுறும் ஒருவர் என்ன எண்ணுவார்? இஃது ஓர் ஆராய்ச்சி நிலையமோ அல்லது ஒரு தொழில் நிர்வாகியின் அலுவலக அறையோ என்றெல்லாம் எண்ணக்கூடும். ஆனால் இது சர்தார் பகத்சிங் அவர்களுடைய பண்ணை அலுவலகமே என்ற உண்மையை அறிந்தவுடன் அவருடைய வியப்பு பன்மடங்காவதில் எல்லோருக்குமே பெருமைதானே?

குடிபெயர்ந்தோரின் குதூகலம்

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், மிகவும் அல்லலுற்று இந்தியா வந்தடைந்தவர்களில் இவரும் ஒருவர். உறவினர்களில் சிலர் மர வணிகத்தில் ஈடுபட்டிருந்ததால், அத்துறையில் இவரும் தம் நாட்டத்தைச் செலுத்தினர். ஆனால் போதிய வருவாய் கிடைக்கவில்லை.

எனவே, துர்க் மாவட்டத்திலுள்ள (மத்தியப் பிரதேசம்) 'ரஜ் நாங்கோன்' என்ற ஊரில் குடியேறி. காடும் கரம்புமாகவிருந்த 8·5 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கினர். நிலங்களைச் செப்பனிட்டுச் சீராக்கி 1959ஆம் ஆண்டு துவக்கம் வேளாண்மையில் ஈடுபடலானர். வெற்றி அவர்பக்கமே! 1967ஆம் ஆண்டளவில் மேலும் சிறிது நிலங்களைப் பெற்று, ரூ. 30,000 வரையில் செலவிட்டு அவற்றையும்வளமுடையதாக்கினர். தற்போது இவரிடம் 35 ஏக்கர் நிலங்கள் உள்ளன.

பதினேரு பயிர்கள்

பண்ணையில் மின் வசதியுள்ளது. ரூ. 18,000 செலவிட்டு ஒரு கிணறையும், ரூ. 13,200 மதிப்பில் மற்றொன்றையும் தோண்டி அழகுபெற அமைத்துள்ளார். இவ் விரண்டு கிணறுகளிலும் ரூ. 17,000 மதிப்புள்ள இரண்டு நீரிறைக்கும் கருவிகள் பண்ணை முழுவதற்கும் பாசனம் செய்யப் போதுமானவையாயுள்ளன.

திரு. பகத்சிங், இயந்திரக் கலப்பை கூடப் பயன்படுத்துவதில்லை. ஆனல் அவற்றிற்கு மாருக, அவரிடம் பற்பல நவீன உழுபடைக் கருவிகள் உள்ளன. நெல், மக்காச் சோளம், சோளம், கம்பு, கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், கம்பு, காய்கறிகள், தீவனங்கள் ஆகியவை இங்குப் பயிரிடப்படுகின்றன.

பாலும் முட்டையும்

பால் பண்ணையில் ஒன்பது பசுக்கள், எட்டு எருமைகள், ஈரெருதுகள் இருக்கின்றன. இவையனைத்தும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து தருவிக்கப்பட்டவை. நல்ல தீவனங்கள் கொடுக்கப்பட்டு, பண்ணை சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது. கறவைகளிலிருந்து நிங்களுக்கு 1,500 லிட்டர் பால் கிடைக்கிறது. தவிர, நல்ல எருவும் கிடைக்கிறது.

150 கோழிகள் உள்ள கோழிப் பண்ணையிலிருந்து நாளொன்றிற்கு 90 முட்டைகள் கிடைத்தவண்ணமுள்ளன. அவ்வப்போது சில கோழிகளும் உண்பதற்கென விற்கப்படுகின்றன.

வெளியில் தலைகாட்டமாட்டார்

பால், கோழிப்பண்ணைகளுக்குரிய தீவனங்களைத் திரு. பகத்சிங் வெளியில் வாங்குவதில்லை. அவை கலப்படமாயுள்ளதெனக் கூறும் இவர், தம்முடைய பண்ணையிலேயே தேவையான நீவனங்களை உற்பத்தி செய்து கொள்கிறார். தவிர, இவருடைய பண்ணையில் தயாரிக்கப் பெறும் எண்ணெய், முதற்தர எண்ணெயென்ற நற்பெயர் பெற்றுள்ளது. ஆம்! ஒரு சிறிய செக்கைக்கூட இவர் நிறுவியுள்ளார்.

பால், முட்டைகள், காய்கறிகள், எண்ணெய், உணவு தானியங்களுக்கு 'ராஜ் நாங்கோன்'னிலேயே நல்ல விற்பனை கிடைக்கிறது. கூறப் போனல், மக்கள் இவருடைய பண்ணைக்கே வந்து, பொருட்களைப் பெற்றுச் செல்கின்றனர்.

இதுவல்லவோ இலாபம்!

ஆண்டொன்றில் திரு. பகத்சிங் அவர்களுக்குக் கிடைக்கும் மொத்த ஆதாயம் ரூ. 1,25,00. இதில் செலவுத் தொகையான ரூ. 70,000 போக, எஞ்சியுள்ள இலாபம் ரூ. 55,000 ஆகும். பால், கோழிப் பண்ணைகளிலிருந்துமட்டுமே கிடைக்கும் எஞ்சிய இலாபம் ரூ. 8,000 என்றல், வேளாண்மை தரும் மிதமிஞ்சிய ஆதாயத்தைக் கணக்கிட்டுக் கொள்ளுங்களேன்!

இன்பகரமான இல்வாழ்க்கை நடாத்தும் திரு. பகத்சிங் அவர்களுக்கு இரண்டு செல்வர்கள், ஒரு செல்வி உள்ளனர். மனைவியும், மூத்த மகனும் பண்ணையில் பணியாற்றுகின்றனர். பண்ணையிலேயே வசிக்கும் இதர 10 குடும்பங்களுக்கு, ஆண்டு முழுதும் வேலைவாய்ப்பு உள்ளது. தேவை ஏற்படின் வெளியிலிருந்தும் தொழிலாளர்கள் தருவிக்கப்படுகின்றனர்.

மூ.மு.ப. ரூ. 12,000!

ஒரு ஹெக்டேர் நில்த்தில் மூன்று முறை பயிரிடுவதனல் ரூ. 12,000 வருவாய் கிடைக்குமென்று, புதுடில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், சோதனைகள் மூலம் கண்டறிந்துள்ளது.

அக்டோபர் முதல் வாரத்தில் ஜப்பான் வெள்ளை இனச் சிகப்பு முள்ளங்கியையும், அதைத் தொடர்ந்து டிசம்பர் நடுவில் 'சோனரா - 64' கோதுமையையும் பயிரிட்ட பிறகு, ஜூன் நடுவில் 'சி.எஸ்.எச் 1' சோளத்தைப் பயிரிட வேண்டும்.

களை களையும்

இவ்வாறு பயிரிட்டபிறகு, அடுத்த முறையில் 'சிந்தூரி' உருளைக் கிழங்கை அக்டோபர் முதல் வாரத்

தில் பயிரிடலாம். இதைத் தொடர்ந்து 'சோனரா-64'ஐ விளைவித்த பின்னர், ஜூன் நடுவில் 'ஐ. எஸ். எச்-1'ஐப் பயிரிடவேண்டும்.

களையெடுக்கும் பெரும் பிரச்னை, இம்முறையில் பயிரிடுவதால், தவிர்க்கப்படுகிறது. ஆனால் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் தவறாது கையாளப்படவேண்டும்.

வா., மா., பமி., அ.— வெளிநாடுகளுக்கு


குவயத், பஹ்ரன், தோஹா, துபாய் ஆகிய நாடுகளுக்கு 4,500 டன் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ததன் வாயிலாக ரூ. 40 இலட்சம் அந்நியச் செலாவணியைப் பெற்றுள்ளது, ஜல்கான் என்ற மகாராட்டிர மாவட்டம். இம்மாவட்டத்திலுள்ள மொத்த நிலங்களில் பாதி யளவு நிலங்களில், 30,000 ஏக்கர்களில் வாழைகள்தாம் உள்ளன.

ரூ. 4·5 இலட்சம் மதிப்புள்ள 200 டன் மாங்காய், 400 கிலோ பச்சை மிளகாய், 6 டன் அன்னாசியையும் இம்மாவட்டம் ஏற்றுமதி செய்துள்ளது.

வா...வா...வாழையா?

ஜல்கான் மாவட்டப் பழவிற்பனைக் கூட்டுறவுச் சங்கம்தான், இவ்வேற்றுமதிகளைத் திறம்படக் கையாள்கிறது. இதற்கு 19 கிளைச் சங்கங்கள் உள்ளன. இவையனைத்தும் ஒன்றுக இணைந்து 90 டன் வாழைகளை (ரூ. 31,000 மதிப்புள்ளவை) பம்பாய் நகரத்தில்மட்டும் விற்பனை செய்துள்ளன.

1969-70ஆம் ஆண்டில் 5,400 டன் வாழைகள் பாரசீக வளைகுடாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும். ஜப்பான் நாட்டிற்கும் இவற்றையனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



பூச்சி மருந்துகளையும், உரங்களையும் பெறுதற்கு, உழவர்கள் பற்பல இடங்களை நாடிச் செல்ல வேண்டியதைத் தவிர்த்து, இவ்விரண்டையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள வசதி செய்யும் முறையில், மேற்குக் கோதாவரி (ஆந்திர மாநிலம்) மாவட்ட வளர்ச்சி வாரியம் ஒரு புதுமுறையைக் கையாளத் துவங்கியுள்ளது.

பூச்சி மருந்துகளையும், உரங்களையும் விற்பதற்கென, சில சிறந்த கூட்டுறவுச் சங்கங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. தனியார் நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பூச்சி மருந்துகளைச் சங்கங்களிடம் ஒப்படைக்கின்றன. ஆதாயமோ, இழப்போ ஏதுமின்றி, அடக்க விலைக்கே இவை உழவர்களுக்கு விற்கப்படுகின்றன. நடுவரின் ஆதாயம் ஒருபுறம் நீக்கப்படுவதிருக்க, கலப்படமில்லாத தரமையான பொருட்களை விற்பனை செய்வதற்கு, இச்சங்கங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

ஆதாயம் இல்லை; இழப்பும் இல்லையே!

'மேற்குக் கோதாவரி மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்க'மானது, உரங்களை அதனுடைய கிளைகள்

வாயிலாக, 'ஆதாயமோ இழப்போ ஏதுமின்றி' விற்பனை செய்கிறது. பற்பல உர நிறுவனங்கள், தங்களுடைய உரங்களை ஊர்ப்புறங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளன.

தனியார் நிறுவனத்தின் நேர்முக விற்பனையாளர்களோ அல்லது முகவர்களோ இல்லாத இடங்களில் பூச்சி மருந்துகள், உரங்களின் விற்பனை போதுமானதாயுள்ளது. ரூ. 1,55,652 மதிப்புள்ள மருந்துகள், ஒன்பது கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இதில் ரூ. 79,218 மதிப்புள்ள மருந்துகள் விற்பனையாகியுள்ளன. வரும் ஆண்டில், விற்பனைமேலும் பெருகுமெனத் தெரிகிறது.

வாடகையும் கடன்!

ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பூச்சி மருந்துகளை வாங்கும் உழவர்களுக்கு, கருங்களால், விசைகளால் இயங்கும் தெளிப்பான்கள் குறைந்த வாடகைக்குத் தரப்படுகின்றன. இவற்றிற்குரிய வாடகைக் கட்டணங்கூட உறுப்பினர்களின் கணக்கில் பற்று வைக்கப்பட்டு, பின்னர் பெற்றுக் கொள்ளப்படும்.

வேளாண்மைத் துறையின ரிடமுள்ள பூச்சி மருந்துகள், உரங்களைக் கூட, மேற்கண்ட முறைகளைப் பின்பற்றி, விற்பனை செய்யலாமென்று யோசனை கூறப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யின், வளர்ச்சி அலுவலருக்குக் கிடைக்கும் ஒய்வை, வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தலாமென்றும் கருத்தறிவிக்கப்பட்டுள்ளது சிறந்த யோசனையன்றே!



'பழைய கழிதலும்,
புதிய புகுதலும்'

என்ற மரபிற் கேற்ப, பன்னெடுங் காலமாகக் கையாளப்பட்ட வித்துக்களெல்லாம் கைவிடப்பட்டு, புதிய இன உயர்வீளைச்சல் இனங்களெல்லாம் பயன்படுத்தப்படுகின்றனவென்பதை நாமறிவோம். இதற்குச் சான்றுக, மேற்கு வங்கத்தைக் கூறலாம். இம் மாநிலத்திலுள்ள மிதுனப்பூர் மாவட்டத்தில் 'ஐ. ஆர்-8', 'டி. என்-1' என்ற இரண்டு புதிய இன வித்துக்கள் பெரும்பான்மையான வயல்களில் பயிரிடப்பட்டுள்ளன.

இரண்டு வீரர்கள்

திரு. மனோரன்ஜன் என்ற உழவர், ஓர் ஏக்கர் நிலத்தில் 'ஐ. ஆர்-8' பயிரிட்டு, 136 மணங்குவரை வீளைச்சல் பெற்றுள்ளார். இவ்வுயரிய வீளைச்சல் அவருக்குப் பெரும் வியப்பைத் தந்துள்ளது.

இன்னோர் உழவரான ஜீன்தர நாத் அவர்களுக்குக் கிடைத்த வீளைச்சல் அவரை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கச் செய்துள்ளது. அவருக்கு 115 மணங்கு உற்பத்தி கிடைத்தது.

பழைய இனங்களைப் பயிரிட்டோருக்கு ஏக்கர் ஒன்றில் 20 மணங்குகள் மட்டுமே இதுகாறும் கிடைத்தன.

32,831; 4,27,370 என்ன இவை?

இவ்வாண்டு ஆகஸ்ட் திங்களில்மட்டும் 260 நகரங்கள், ஊர்கள், சிறிய ஊர்களுக்குத் தமிழ்நாடு மின்வாரியம் மின்வசதி செய்து தந்துள்ளது. இதுவரை தமிழகத்தில் மின்வசதி செய்யப்பட்டுள்ள நகரங்கள், ஊர்களின் மொத்த எண்ணிக்கை 32,831 ஆகும். ஆகஸ்ட் திங்களில்மட்டும், 5645 நீரிறவை இயந்திரங்கள் மின்வசதி பெற்றுள்ளன. இதுவரை மின் தொடர்பு பெற்றுள்ள இறவை இயந்திரங்களின் கூடுதல் 4,27,370.

நிலமும் உதவியும் வீடு

நிலமில்லாதோருக்கு நிலம் வழங்கும் திட்டம், மகாராட்டிர மாநிலத்தில் சிறப்பாகச் செயற்படுகிறது. சுமார் 60,000 ஹெக்டேர் (1·5 இலட்சம் ஏக்கர்கள்) நிலங்கள் இது காறும் வழங்கப்பட்டுள்ளதன் வாயிலாக, சுமார் 50,000 டன் கூடுதல் உற்பத்தி கிடைத்துள்ளது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

சுமார் 8 இலட்சம் உழவர்கள், சுமார் 10 இலட்சம் ஹெக்டேர் நிலங்களைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு நிலங்களை வழங்கியதால் மட்டுமே பிரச்னைகள் தீர்ந்து விட வில்லை. அவர்களுக்குத் தேவையான பணம், பொருள்களையும் அளிக்க வேண்டியுள்ளது. எனவே, அவற்றிற் கெனவும், மாநில அரசு சில திட்டங்களை உருவாக்கியுள்ளது.

எவ்வளவு நிலம்?

நிலமில்லா ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 ஏக்கர் நிலம் அளிக்கப் படுகிறது. தவிர, நிலத்தைச் சீர் செய்வதற்கென ரூ. 100 தரப்படுகிறது. உழுபடைக்கருவிகள், வித்துக்கள், உரங்களைப் பெறுதற்கென ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 275 தரப்படுகிறது. இதில் 25 சதவீதம் மட்டுமே கடனுகவும் எஞ்சிய தொகை உதவிப் பணமாகவும் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, 19,546 குடும்பங்கள் 59,000 ஹெக்டேர் நிலங்களைச் செப்பனிட்டுச் சீராக்கி வேளாண்மையை மேற்கொண்டுள்ளன. இவர்களுக்குத் தரப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2·89 கோடி.

தற்போது மகாராட்டிர அரசிடம் ரூ. 11·15 இலட்சமும், சுமார் 25,000 முதல் 28,000 ஹெக்டேர்கள் (அதாவது 60 முதல் 70 ஆயிரம் ஏக்கர்கள்) நிலமும் உள்ளன. இவை காலப் போக்கில் நிலமில்லாதோருக்கு வழங்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாட்டில் மண் பரிசோதனை நிலையங்கள்

தமிழ்நாட்டில் ஏழு மண் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. அவைகளும், பயன்படும் மாவட்டங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

		பயன்படும் மாவட்டங்கள்
1. கோயம்புத்தூர்	—	கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தர்மபுரி
2. ஆடுதுறை	—	தஞ்சாவூர்
3. கோவில்பட்டி	—	திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி
4. கடலூர்	—	தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி
5. மதுரை	—	மதுரை
6. குடியாத்தம்	—	வட ஆர்க்காடு
7. காஞ்சீபுரம்	—	செங்கற்பட்டு, சென்னை

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன்கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.


தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்
பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்
திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநூற்புத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4



அன்னிய ஆட்சியில் அடிமைப் பட்டு உழன்ற காலத்தில், மின் வசதி பெற்றிருந்த ஊர்கள் மிகச் சிலவேயாகும்.

1951ஆம் ஆண்டுவரை முடிவுற்ற காலத்தில் மின்வசதி பெற்றிருந்த ஊர்கள் 3623 மட்டுமேயாகும். ஆனால் 1969 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் கணக்கிடப்படுகையில், நம் நாட்டிலுள்ள 70,000 ஊர்கள் மின் வசதியைப் பெற்றிருந்தன. தவிர, 1951 ஆம் ஆண்டில் 18,709 நீரிறைக்கும் இயந்திரங்களே மின்சாரத்தால் இயங்கின. இது 60 மடங்கு உயர்ந்து, 1969 ஆம் ஆண்டில் 10·88 இலட்சத்தை எட்டியது.

தொடக்கக் காலங்களில், ஊர்ப் புறங்களுக்கு மின்வசதியளிப்பதற்கே சிறப்பிடம் அளிக்கப்பட்டது. இக் கொள்கை 1965ஆம் ஆண்டளவில் பெரும் மாற்றத்திற்குள்ளாகியது. அதன் காரணமாக, எண்ணிறந்த மின் இறவை இயந்திரங்கள் மின் தொடர்பைப் பெற்று, நீரை வாரியிறைத்து, நாட்டில் வேளாண்மையைப் பன்மடங்கு வளர்ச்சி பெறப் பேருதவி செய்தன.

முதல், இரண்டு, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், மைய அரசுமட்டும் முறையே ரூ. 30, ரூ. 75, ரூ. 153 கோடிகளை மின் வசதிக்கென ஒதுக்கியது. 1966 தொடக்கம் 1969 வரையிலான காலத்தில்மட்டும்,மைய அரசு மாநில அரசுகளுக்குக் கடன் வழங்கிய தொகை ரூ. 150 கோடியாகும்.

களர்நிலம் — நல்ல விளைநிலமாக வேண்டுமா ?

கால்சியம், மெக்னீசியம் உப்புக்களால் ஏற்படும் களர், உப்புக் களர் என்றும், சோடா உப்புக்களால் ஏற்படுவது வெண்களர், கருங்களர் என்றும் சொல்லப்படுகிறது. களர் உண்டாவதற்குக் காரணமான சோடியத்தை மண்ணிலிருந்து நீக்கினால் களர்த் தன்மை நீங்கும். 'ஜிப்சம்' என்று சொல்லப்படும், 'கால்சியம் சல்பேட்' என்னும் உப்பைக் களர் நிலத்தில் இடவேண்டும். ஓர் ஏக்கருக்கு எவ்வளவு 'ஜிப்சம்' இடவேண்டும் என்பதை மண் பரிசோதனையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சிபாரிசு செய்யப் பட்ட அளவு ஜிப்சம் உப்பை உழவுசாலில் இட்டு, மண்ணுடன் நன்றாகக் கலக்கச் செய்யவேண்டும். ஒரு நாள் முழுவதும் நிலத்தில் நல்ல நீரைத் தேக்கி வைத்து, நீர் முழுவதையும் வடித்துவிட வேண்டும். இவ்விதம் நான்கு முறைகள் நீரைத் தேக்கி வடிக்க வேண்டும். பயிர் செய்வதற்குமுன், தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாள் உரப்பயிரைப் பயிரிட்டு, அந்த நிலத்திலேயே மடக்கி மக்கச் செய்யவேண்டும். களர்நிலம், நல்ல விளைநிலமாக மாறி விடும்.

இனடென்சிவ்

அக்ரிகல்சர்

இதழிலிருந்து...

சிறு நிலம் முயற்சி ஆர்வம் மிகுந்த வருவாய்

மிகுந்த வருவாய்க்கு மிகுந்த முதலீடோ, அயரா உழைப்போ, தளரா முயற்சியோ தேவையில்லை. சிறிது நிலம், சிறிது முயற்சி, சிறிது ஆர்வம் இருந்தால் மிகுந்த வருவாயைப் பெறலாம். இவ்வுண்மை ஓர் உழவரின் வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளது.

திரிபுராவைச் சார்ந்த திரு. இராதா சரண்பால் அவர்களிடம் 0·4 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. இதைக் கொண்டு காய்கறி பயிரிட்டு ரூ. 1500 வருவாய் பெற்றுள்ளார். அதுமட்டுமா? மூட்டை கோஸ், காலிஃபிளவர் ஆகியவற்றை மிகுந்த அளவில் பயிரிட்டதற்கென, அவருக்கு முதற்பரிசும் கிடைத்துள்ளது.

வழி பிறந்தது

முதற் பரிசைப் பெறுதற்கு திரு. பால் என்ன செய்தார்? அவருடைய வட்டார வேளாண்மை அலுவலர் களைச் சந்தித்து அளவளாவினர். காலிஃபிளவர், மூட்டை கோஸைப் பயிரிடின் பெரும் ஆதாயம் கிடைக்குமென அவர்கள் கூறினர். அதற் கேற்றவாறு அவற்றைப் பயிரிட முனைந்தார்.

25 அடிக்கு 4 அடி அளவிலுள்ள நாற்றங்காலில் பண்ணையுரம், மரத் தூள், மற்றும் 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவை உரங்களாக இடப் பட்டன.

விதைகளை வரிசையாக நட்டு, மிருதுவான மண்ணைக் கொண்டு மூடினார். 'கால்சியம் அமோனியம் நைட்ரேட்'டை நீரில் கலந்து, நாற் றங்காலில், பதினைந்தாம் நாளன்று தெளித்தார். இரண்டுமுறை களை எடுக்கவும், இரண்டுமுறை நீர் தெளிக்கவும் அவர் மறந்தாரில்லை.

பிறகு வயலைப் பண்படுத்தத் தொடங்கினார். வயலில் 60 மணங்கு மக்கிய உரத்தைப் போட்டார். 60 செ. மீட்டருக்கு 60 செ. மீ. கணக் களவில் இடைவெளிவிட்டு 15 செ. மீட்டருக்கு 15 செ. மீ. அளவில் குழிகளைத் தோண்டி, அவற்றுள் மக்கிய பண்ணையுரத்தையும், சூப்பர் பாஸ்பேட் ஓர் அவுன்ஸ், 0·5 கிராம் 'ஸபார்டின்'னும் இட்டார்.

வருவாய் கிடைத்தது

25 நாட்கள் பருவமடைந்த நாற் றங்காலை, அவற்றில் நடவு செய்தார்.

முயற்சியின் விளைவுகளென்ன? 2,000 மூட்டை கோசுகளும், 2,000 காலிஃபிளவர்களும் அவருக்குக் கிடைத்தன.

திரு. பால் அவர்களுக்குக் கிடைத்த ஆதாயம் ரூ. 1500.

உள்ளம் கவர்ந்த ஐ.ஆர் 5

சாலியோரத்தில் உள்ள செழிப்பான பயிர், உழவர்களின் கண்களையும் கருத்துக்களையும் கவர்வதில் வியப்பென்ன? அய்யம்பேட்டை—பசுபதிகோவில் (தஞ்சை மாவட்டம்) சாலையில் 35 சென்ட் வயலில், செழிப்புடன் வளர்ந்துள்ள ஐ.ஆர்-5 பயிர் அத்தகைய கவனத்தைப் பெறுகிறது.

அப்பயிரின் உரிமையாளர் திரு. எம். டி. மூர்த்தியை உழவர்கள் அடிக்கடி அணுகி, அவருடைய பயிர் முறைகள்பற்றிக் கேள்விகள் கேட்டவண்ணமுள்ளனர். அய்யம்பேட்டைக் கடைவீதியில் தேங்காய் வணிகஞ் செய்யும் இவர், அப்போது கடையை விட்டுவிட்டு, வயலுக்குச் சென்று, பார்வையாளர்களுக்கு விளக்கிக்கூற வேண்டியுள்ளது.

''பயிரில் இன்னும் கதிர் காணவில்லை; அதற்குள்ளாகவே, வித்துக்களுக்காக நெல் வேண்டுமென உழவர்கள் பணத்தோடு வந்துவிடுகின்றனர்'' எனப் பெருமையுடன் கூறுகிறார் இவர்.

தமிழகத்திற்கு ஏற்ற இனம்

'கோ-25 ஐக் காட்டிலும்; ஐ.ஆர்-5 சிறந்தபயிர், நிறைந்த விளைச்சல் தருகிறது என்பது என் எண்ணமாகும்' என்கிறார். ஏனைய உழவர் கூட, தமிழகத்தைப் பொறுத்த வரை— ஐ. ஆர்-5 மட்டுமே சிறந்ததாகும் எனக் கூறுகின்றனர். விரைவிலேயே ஐ. ஆர்-8, கோ 25, ஆடு-27 இனங்கள் மறைந்து, ஐ. ஆர்-5 அவற்றின் இடங்களை ஆட்கொண்டுவிடும் எனக் கூறுகின்றனர்.

ஐ. ஆர்-5ஐத் தாளடியாகப் பயிரிட்ட மாயவர உழவர் திரு. வெங்குச் செட்டியாருக்கு, ஏக்கர் ஒன்றில் 2·2 டன் விளைச்சல் கிடைத்துள்ளது. ''இனி இவ்வினத்தையே கூடுதலாகப் பயிரிடவிருக்கிறேன்'' எனக் கூறும் இவர், கோ-25, ஐ. ஆர்-8 ஆகியவற்றைவிட ஐ.ஆர்-5 குறைந்த நாட்களில் மிகு விளைச்சலைத் தருகிறது என்கிறார். அதனால் சனவரி இறுதியில் சிறுதாளியங்களை ஒருமுறை பயிரிட முடிகிறதென்பதும் இவருடைய கூற்றே.

சிறப்பின் காரணம்

''ஐ. ஆர்-5 சம்பாப் பயிராக நிறைந்த விளைச்சலைத் தரவல்லது'' என உறுதியாகக் கூறுகிறார், ஆனதாண்டவபுர உழவர் திரு. கிருஷ்ணசாமி.

மாவட்ட வேளாண்மை அலுவலர் திரு. சிவசங்கரன் அவர்களின் கூற்று ''ஐ. ஆர்-5 கொலை நோயை எதிர்த்து நின்று போராட வல்லது. இது ஒன்றே இதன் சிறப்பிற்குப் போதுமானதாகும்'' என்பதாகும்.

ஐ. ஆர்-5 இல் ஒரு குறையுள்ளது. கோ25நாற்றுக்களைக் காலந்தாழ்த்தி நடவு செய்யலாம். ஆனால் ஐ.ஆர் 5ஐ உரிய காலத்தில் நடவுசெய்து விட வேண்டும்.

Articles reproduced from 'Panchayat Raj', 'Intensive Agriculture', etc. pages 57 to 64 and 66 to 68.

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

FACT

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.


பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ்
திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம் : 2-வது மாடி,
19, மவுண்ட்-இன்-சீப்-ரோடு,
சென்னை-6.

ஊரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்













Collarion FT 2201 Tel

அமோக விளைச்சலுக்கு
யூரியா



இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்போரேஷன்
தயாரிப்பு

FDSNLC 114



ஸ்டெல்லா சரோஜினி செய்தார்?

ஒன்றியத்தில் பணியாற்றும் முக்கிய சேவிகையென்றால் முக்கியப் பணிகளாற்றுவதுதானே? அவற்றிற் கெடுத்துக்காட்டாக விளங்குபவர் பூவிருந்தவல்லி ஒன்றிய (செங்கை மாவட்டம்) முக்கிய சேவிகை திருமதி ஸ்டெல்லா சரோஜினி.

ஆசிரியையாக இருந்து முக்கிய சேவிகை பதவியை ஏற்றுள்ள இவர் பதினேழு ஆண்டுகளாகப் பதவியிலிருக்கிறார்.

38 வயது நிரம்பிய திருமதி ஸ்டெல்லா சரோஜினி குடும்ப நலத் திட்டத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர். இவருடைய தொடர்ந்த முயற்சிகளின் காரணமாக 850 தந்தையர், 22 தாய்மார்கள், குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துள்ளனர். தவிர 250 மகளிர் கருத்தடை வளையம் அணிந்து மக்களைப் பெறுவதைத் தள்ளி வைத்துள்ளனர். மேலும் 2650 பேர்கள் கருத்தடைக் கருவிகளைப் பெற்றுள்ளனர் இவர் துணையினுல்.

'பழம்' பெருமை

இவ்வொன்றியத்திலுள்ள 30 மகளிர் மன்றங்களில் 5 மன்றங்களில் 'பழம் பதனிடும் நிலையங்கள்' நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் தயாரிக்கப் பெறும் பழச்சாறுகளை, ஊர் வளர்ச்சி இயக்குநர் திரு. திருமால் ஐ.ஏ.எஸ் அவர்கள் நேரிற் கண்ணுற்று, அவற்றின் தரம் பற்றிப் பாராட்டுக்கள் அளித்துள்ளார் என்பதனை இவர் அடிக்கடி பெருமையுடன் கூறிக் கொள்கிறார்.

திருமதி ஸ்டெல்லா சரோஜினியின் முயற்சியினுல் வெள்ளவேடு, கருணாகரச் சேரி ஆகிய ஈரிடங்களிலுள்ள மகளிர் மன்றங்களுக்கு ஐந்து பசுங்கன்றுகள் வீதம் அளிக்கப்பட்டுள்ளன. இவை ஓராண்டு நிறைவெய்திய காலை அளிக்கப்பட்டதால், இன்னளவில் 2½ ஆண்டுகள் நிரம்பியுள்ளன. இவை ஆண் கன்றுகளை ஈன்றால், அவற்றை விற்பதனுல் கிடைக்கப்பெறும் தொகை மகளிர் மன்றத்திற்கு அளிக்கப்படும். பசுங்கன்றுக இருப்பின், திருவுளச் சீட்டு மூலம் அறியப்படும் ஒரு மகளிர்க்கு அக்கன்று இலவசமாகத் தரப்படும். இஃது இவ்வாறுகத் தொடர்ந்து கொண்டிருக்கும்.

கிழமைக்கு 160 முட்டைகள்

சத்துணவுத் திட்டம் செயற்படும் பல ஒன்றியங்களில் பூவிருந்தவல்லி ஒன்றியமும் ஒன்றாகும். இங்குள்ள இரண்டு மகளிர் மன்றங்களில் 20 கோழிகள் கொண்ட இரண்டு பண்ணைகள் உள்ளன.

தவிர ஒன்றியத்தின் ஆதரவுடன் திருமதி ஸ்டெல்லா தனியார் கோழிப் பண்ணைகளைத் துவக்குதற்கும் உதவியுள்ளார். 45 கோழிகளை உள்ளடக்கிய 4 பண்ணைகள் நான்கு தனியாரிடம் இருக்கின்றன. ஒவ்வொரு பண்ணையும், கிழமை தோறும் 40 முட்டைகளைக் குழந்தைகள் காப்பகத்திற்குத் தரவேண்டுமென்பது நியதி. அவ்வாறே அவர்களும் தவறாது அளிக்கின்றனர் எனக் கூறுகிறார், முக்கிய சேவிகை.

வாடும் வனிதையர்க்கு வேலை வாய்ப்பு

இவர் ஆற்றியுள்ள பணிகளிலெல்லாம் மனிதாபிமானம் நிறைந்த செயல் ஒன்றுண்டு. அதை அவரே கூறட்டும்: ''கைம் பெண்கள், கைவிடப்பட்ட மகளிர், வறுமையில்

வாடும் வனிதையர், நெடுங்காலமாகத் திருமண வாயிலே நெருங்காதிருந்தோர் ஆகியவர்களில் 17 பேர்களை, தாம்பரம், தஞ்சை, கடலூர் ஆகிய விடங்களிலுள்ள சேவை இல்லங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். நிம்மதியாக வாழ்கின்றனர்.'' இதைச் சொல்லி முடித்த போது சேவிகையின் முகம் தெள்ளெனக் காட்டியது.



டலே திருமதி ஸ்டெல்லா சரோஜினி.


இதயத்தில் தோன்றிய மன நிறைவை அவர்

'ஸ்ச' என்ன செய்துவிட்டார்? என்பதற்கு மேலே சில செயல்களைக் கூறினோம். உரையாடலில் அடக்கம், பழக்கத்தில் இனிமை, பொறுமையின் இருப்பிடம் இவற்றின் கூட்டு

இவருக்கு இரண்டு செல்விகள், ஒரு செல்வன் உண்டு. செல்விகள் கல்லூரிகளில் பயில்கின்றனர். கணவர் வேலூரில் மின் கண்காளிப்பாளராகப் பணியாற்றுகிறார்.

இரண்டாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள 'சீரணி' வேலைகள் — ஒரு கண்ணோட்டம்

1.	கட்டி முடிக்கப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள்	...	822
2.	தூர் எடுக்கப்பட்ட கால்வாய்கள், குளங்கள்	...	892
3.	அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள்	...	410
4.	மருந்து தெளிக்கப்பட்ட நிலப் பரப்பு	...	1,500 ஏக்கர்
5.	சாகுபடிக் கேற்றதாகப் பண்படுத்தப்பட்ட தரிசு நிலப் பரப்பு	...	500 ,,
6.	வெள்ளையடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள்	...	13,523
7.	பள்ளிகட்கு வழங்கப்பட்ட பெயர்ப் பலகைகள்	...	2,562
8.	அமைக்கப்பட்ட காய்கறித் தோட்டங்கள்	...	3,217
9.	மற்ற வேலைகள் (விதித்துப்புரவு, பள்ளிச் சுவர்களில் திருக்குறள் எழுதுதல், பள்ளிகட்குத் திருவள்ளுவர் படங்கள், மின் விளக்குகள் கொடுத்தல் போன்றவை)	...	9,598
10.	நாள் ஒன்றுக்கு ஒருவேளை கோதுமை உணவை உண்ண இணங்க வைக்கப்பட்டோர்	...	7,02,146
	செய்யப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு		ரூ. 57,17,300
	அதற்கான அரசினர் செலவு		ரூ. 22,76,110



புன்செய்ப் பயிரில் கூட்டுக் கோயுச் சாகுபடி முறைகள்

நம் மாநிலத்தில் சுமார் 180 இலட்சம் ஏக்கர் சாகுபடிப் பரப்பளவில் 34 இலட்சம் ஏக்கர்களில் மானாவாரிப் பயிர்கள் சாகுபடிப் செய்யப்படுகின்றன. காடு செழிக்க நாடு செழிக்கும் என்பதற்கேற்ப மானாவாரிப் பயிர்களின் சாகுபடியிலும் நாம் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைக் கையாண்டால், விளைச்சலைக் கணிசமான அளவு அதிகரிக்க முடியும். மானாவாரிப் பயிர்களின் சாகுபடியில் முக்கியக் கூறுகள் பின் வருமாறு:

மானாவாரி விளைச்சல் பெரும்பாலும் பெய்யும் மழையைப் பொறுத்துள்ளது. ஆகையால் மழைநீர் பயிர்களுக்கு நன்கு பயன்படவும் சத்துள்ள மேல்மண் அரித்துப் போகாமல் இருக்கவும் மானாவாரி நிலங்களில் மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளவேண்டும். மண்வளப் பாதுகாப்புத் திட்டம் அரசினரால் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

பயிர் அறுவடைக்குப்பின் ஒவ்வொரு மழைக்குப் பின்பும் நிலத்தை உழுது நல்ல புழுதியாக்கிக் களைகள் இல்லாமல் வைத்திருப்பது அவசியம். சரிவுக்குக் குறுக்காக உழுவது நலம். இம் மாநிலத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் மானாவாரிப் பயிர்களுக்கு உரமிடப்படுவதில்லை. ஏக்கருக்கு 5—10 வண்டி தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் இட்டால் மகசூல் அதிகரிக்கும். நிலத்தைச் சுற்றிலும் மழைக் காலங்களில் கொடிப் பூவரசுக் குச்சிகளை நட்டு, இடைக்கும் தழையைக் கொண்டு கம்போஸ்ட் தயாரிக்கலாம். மேலும் ஆண்டுச் சராசரி மழை 50 செ. மீட்டருக்கு அதிகமாக உள்ள பகுதிகளில் ஏக்கருக்கு 8—10 கிலோ வரை தழைச் சத்து தரும் இரசாயன உரத்தைக் கடைசி உழவில் இடுவதால் மகசூல் அதிகரிக்கும்.

பொதுவாக மானாவாரி நிலங்களில் வரிசையில் விதைப்பது நல்லது. சரிவான நிலங்களில் சரிவுக்குக் குறுக்கே விதைக்கவேண்டும். மானாவாரிப் பயிர்களில் தக்க தருணத்தில் பயிரைத் தாக்கும் பூச்சி, நோய்களுக்கேற்பப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரிப்பது மிகவும் அவசியம். இதற்கான மருந்துகள் 30 சதவிகித மானிய விலையில் விவசாய இலாகா மூலம் விநியோகிக்கப்படுகின்றன. மானாவாரிப் பயிர்கள் தனிப்பட்ட பயிராகவும், கலப்புப் பயிர்களாகவும் பயிரிடப்படுகின்றன. கலப்புப் பயிர்ச் சாகுபடியும், மாற்றுப் பயிர்ச் சாகுபடியும் மானாவாரி நிலங்களுக்கு உகந்தவை. பொதுவாகச் செவ்வல் நிலங்களில் ஆவி, ஆடி மாதங்களிலும், கரிசல் நிலங்களில் புரட்டாசி, ஐப்பசி மாதங்களிலும் மானாவாரிப் பயிர்களை விதைக்கவேண்டும். இப் பொழுது நாம் சில முக்கிய மானாவாரிப் பயிர்களின் கட்டுக்கோப்பு முறைகள்பற்றிக் கவனிப்போம்.

1. சோளம்:

சுமார் 18% இலட்சம் ஏக்கர்களில் சாகுபடியாகும் இப்பயிர், மானாவாரியாக 15 இலட்சம் ஏக்கர்களில் பயிரிடப்படுகின்றது.

கோ-20: கோவை மாவட்டத்திற்கு ஏற்றது. கடுமல்லி என்னும் புல்லுருவியால் பாதிக்கப்படாத ரகம்.

கோ-19: செங்கற்பட்டு, வடஆர்க்காடு, சேலம், கோவை, திருச்சி

ஆகிய மாவட்டங்களுக்கு ஏற்ற தலை விரிச்சான் ரகம்.

கோவில்பட்டி 3 : மதுரை, இராம நாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு ஏற்ற பெரிய மஞ்சள் இருங்கு கலப்பு ரகம்.

ஏக்கருக்கு 6—7 கிலோ விதை தேவைப்படும்.

சுருப்பூட்டை நோய் வராமல் தடுக்க 1 கிலோ விதையுடன், 4 கிராம் கந்தகத்தூள் அல்லது 2கிராம் அக்ரசான் கலந்து விதைக்கவேண்டும். பயிரில் செம்பான் (மைட்) காணப்பட்டால் உடனடியாக ஏக்கருக்கு 8லிருந்து 10 கிலோ கந்தகத்தூள் தூவவேண்டும். கதிரில் நாவாய்ப் பூச்சியைத் தடுக்க, பால் ஏறும் தருணத்தில் ஏக்கருக்கு 8லிருந்து 10 கிலோ பி.எச்.சி-10 சதம் மருந்து தூவவேண்டும். ஏக்கருக்குச் சுமார் 300—400 கிலோ தானியம் கிடைக்கும்.

2. கம்பு :

சுமார் 10 இலட்சம் ஏக்கர்களில் சாகுபடியாகும் இப்பயிர் ஒன்பதே முக்கால் இலட்சம் ஏக்கர்களில் மானுவாரியாகப் பயிரிடப்படுகிறது.

கோவில்பட்டி-1 : திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு,

கோ-3 : இதர மாவட்டங்களுக்கு ஏற்றது.

எச்.பி.-1 : ஒட்டு வீரியக் கம்பு. இது மானுவாரிப் பயிராகச் சாகுபடி செய்ய, எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது.

ஏக்கருக்கு 3 கிலோ விதை தேவைப் படும்.

ஒட்டு வீரியக் கம்புப் பயிருக்குக் கடைசி உழவில் 14:14:14 கூட்டு உரம் ஏக்கருக்கு 100 கிலோ அளவில் இடவேண்டும். சுதிரில் நாவாய்ப் பூச்சிச் சேதத்தைத் தடுக்க ஏக்கருக்கு 8லிருந்து 10 கிலோ பி.எச்.சி-10 சதம் மருந்து தூவவேண்டும். ஏக்கருக்கு 500லிருந்து 700 கிலோ தானியம் கிடைக்கும்.

3. ராகி :

சுமார் 8 இலட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடியாகும் இப்பயிர் 4½இலட்சம் ஏக்கர்களில் மானுவாரியாகப் பயிரிடப்படுகிறது.

கோவில்பட்டி-2 : இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு ஏற்றது.

கோ-1 : இதர மாவட்டங்களுக்கு ஏற்றது.

ஏக்கருக்கு 3 கிலோ விதை தேவை. ஒரு கிலோ விதையை 2 கிராம் அக்ரசான் மருந்து கலந்து விதைக்க வேண்டும். தத்துப்பூச்சி, பெள். பச்சைப்புழு இவைகளைக் கட்டுப் படுத்த பி.எச்.சி-10 சதம், டி.டி. டி-5 சத மருந்துகளை சம அளவில் கலந்து ஏக்கருக்கு 8லிருந்து 10கிலோ தூவவேண்டும். ஏக்கருக்கு 300—500 கிலோ தானியம் கிடைக்கும்.

4. நிலக்கடலை :

22 இலட்சம் ஏக்கர்களில் சாகுபடியாகும் இப்பயிர் 19 இலட்சம் ஏக்கர்களில் மானுவாரியாகப் பயிரிடப்படுகிறது. இது அந்நியச் செலாவணி தரக்கூடிய முக்கியமான பயிர்.

டி.எம்.வி-1, டி.எம்.வி-3 கொடி ரகம்.

டி.எம்.வி-2, டி.எம்.வி-7 கொத்து ரகம். எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றவை.

பி.ஒ.எல்-1 பொள்ளாச்சிப் பகுதிக்கு ஏற்றது.

கொடிரகம் - ஏக்கருக்கு 40—45 கிலோ.

கொத்துரகம்: ஏக்கருக்கு 45—50 கிலோ விதை வேண்டும்.

7ஆம் எண் கலப்பு உரம் (4:8:12) ஏக்கருக்கு 100 கிலோ கடைசி உழவில் இடவேண்டும். மேலும் வெங்காரம் ஏக்கருக்கு 5 கிலோ வீதம் 3ஆண்டுகளுக்கு ஒருமுறை இடுவதால் மகசூல் பெருகும். நிலக் கடலை ஏற்றுமதித் திட்டம், செங்கற் பட்டு, வடஆர்க்காடு, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் அமுலில் உள்ளது. இத்திட்டத்தில் மானுவாரி நிலக்கடலை சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் நபருக்கு ரூ. 750 வரை வேளாண்மைத் துறை யால் கடன் வசதியளிக்கப்படுகிறது.

சிவப்புக் கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்த, புழுக்கள் சிறியனவாக இருக்கும்பொழுதே ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி-10 சத மருந்து தூவவேண்டும். புழுக்கள் பெரியன ஆகிவிட்டால் எண்டிரின் அல்லது பாரத்தியான் மருந்து தெளிக்கவேண்டும். இதற்குத் தலக்கடன் ஏக்கருக்கு ரூ. 10 வீதம் நபருக்கு ரூ. 100 வரை பூச்சிக்கொல்லி மருந்தாகக் கடன் வழங்கப்படுகின்றது. ஏக்கருக்கு 500—800 கிலோ மகசூல் கிடைக்கும்.

5. பருத்தி :

சுமார் 10 இலட்சம் ஏக்கர்களில் சாகுபடியாகும் இப்பயிர் 7 இலட்சம் ஏக்கர்களில் மானுவாரியாகப் பயிரிடப்படுகின்றது. கருங்கண்ணி, கம்போடியா ஆகிய பருத்திவகைகள் தென்மாவட்டங்களிலும், மத்திய மாவட்டங்களிலும் மானுவாரியாகச் சாகுபடியாகின்றன.

கருங்கண்ணி ரகங்கள் : கோவில் பட்டி 6, 7.

கம்போடியா ரகங்கள் : எம்.சி.யு-1.

கருங்கண்ணி : ஏக்கருக்கு 6 கிலோ விதையும்,

கம்போடியா : ஏக்கருக்கு 9 கிலோ விதையும் தேவைப்படும்.

ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் அக்ரசான் கலந்து விதைக்கவேண்டும். ஆரம்பத்தில் அசுவணி, பேன், தத்துப்பூச்சி ஆகியவைகளைக் கட்டுப்படுத்த பி.எச்.சி-10 சதம், டி.டி.டை-5 சத மருந்துகளைச் சம அளவில் கலந்து ஏக்கருக்கு 6—8 கிலோ தூவவேண்டும். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த கார்பரில் 10% மருந்து 4—6 கிலோ வுடன் 2 கிலோ கந்தகத்தூள் கலந்து தூவவேண்டும். கருங்கண்ணி ஏக்கருக்கு 150—200 கிலோ பருத்தியும், கம்போடியா 200—300 கிலோ பருத்தியும் மகசூல் கொடுக்கும். அநேக விவசாயிகள் மானுவாரிப் பயிர்களில் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைக் கையாண்டு நல்ல பலனடைந்திருக்கிறார்கள். நீங்களும் இம்முறைகளைக் கையாண்டு விளைச்சலைப் பெருக்கி நலம் பெறுங்கள்!

[திருச்சி வாஞ்சலி]

வறட்சி நிவாரணப் பணி மேற்கொண்டதன்மூலம் 13,400 சிறிய நீர்ப்பாசன ஏரிகள் தூர் எடுக்கப்பட்டன. 5500 சாலை வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 683 மண் வளப் பாதுகாப்பு வேலைகள், 821 குடிமராமத்து வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. ஒரே சமயத்தில் 40,600 வேலைகள் உச்ச கட்டத்தில் தமிழ்நாடு முழுதும் நடைபெற்றன. அதில் 8 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றுப் பயனடைந்தனர்.

— முதல்வர் அவர்களின் சட்டப் பேரவைப் பேச்சிலிருந்து

கேட்டேன் செய்தேன் பெற்றேன்

நமது செய்தியாளர்

ஜூலியஸ் சீசர் அன்று கூறினர். ''சென்றேன், பார்த்தேன், வென்றேன்'' என்று. துரை கன்னியப்பன் இன்று கூறுகிறார்: ''கேட்டேன் செய்தேன், பெற்றேன்'' என்று.

எதை? அது ஒன்றல்ல, இரண்டல்ல.....

''அரசு பலவகை உதவிகளைத் தவருது செய்யினும், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதில், உழவர்களே அடித்தளமாகவும், மையமாகவும் விளங்குகின்றனர். எனவே, அவர்கள் குன்று ஆர்வத்துடன் உழைத்தால் ஆண்டு முழுவதி



லும் இடையருத வருவாயைத் தர வல்லது வேளாண்மை ஒன்றே'' என அறுதியிட்டு, அனுபவத்தால் கூறுகிறார், திரு. துரை கன்னியப்பன்.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்துள்ள சத்திய விசய நகரத்தில் வாழும் இவர், வேளாண்மையில் இதுகாறும் காணப்பட்டுள்ள புதுமைகள் அனைத்தையும் முதன் முதலாகச் செயற்படுத்தி, கணிசமான வருவாயைத் தொடர்ந்து காண்பராவார்.

எதிலும் முதல்வர்


சான்றாக, சத்திய விசய நகரிலேயே முதன்முதலாகத் துணிந்து, 'டாய்ச்சுங் நேடிவ்-1', 'ஐ.ஆர்-8', 'ஐ.ஆர்-5', 'தி.எஸ்.எச் 1. ஒட்டுச் சோளம்', கரும்பு ஆகிய பயிர்களைச் செய்து, ஏனைய உழவர்களுக்கு முன்னோடியாக விளங்கிய நற்பெருமை திரு. துரை கன்னியப்பனையே சாரும்.

பயிர் முறைகளிலும் புதியமாற்றங்களை உடனே செயற்படுத்துகிறார். இதை விளக்குதற்கு அவர் ஒன்றைக்கூற விரும்பினர். என்ன வென்பதை அவர் வாயிலாகவே அறிவோம். ''ஐ.ஆர்-8 நாற்றங்காலே வழக்கமாக 8''×4'' அளவில்தான் நடவு செய்கிறார்கள். ஆனால் இதே 8''×4'' அளவை ஒரு வரிசையிலும், இரண்டாவது வரிசையை 4''×4'' அளவிலும், மூன்றுவதாக, முதல் வரிசையைப் போன்றே 8''×4'' அளவிலும், மாற்றி மாற்றி 'இரட்டை வரிசை' முறையில் நடவு செய்தால், கூடுதல் வீளைச்சல் கிடைக்குமென்று, வானொலியில் கூறக் கேட்டேன். அதன்படிச் செய்த

தில் 10 சதவீதம் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது.''

பழங்கூற்று பழங்கதையாயிற்று!

உழவர்களுக்கு ஆண்டு முழுவதி லும் வயல்களில் வேலையில்லை என்ற



கூற்றினைப் பொய்யாக்கியுள்ள எண் ணற்ற உழவர்களில் திரு. துரை கன்னியப்பனும் ஒருவர். இவர் ஆண்டு முழுவதிலும் பற்பல பயிர் களைப் பயிரிட்டுக் கொண்டேயிருக் கிறார்.

டிசம்பர்முதல் மேவரை 'ஐ. ஆர்-8ம், மே-ஜூலையில் ஆடுதுறை-27 மற்றும் 'சி.எஸ்.எச். -1' சோள மும், ஆகஸ்ட்-செப்டம்பரில் 'ஜி.இ. பி-24,' நெல் இனம் மற்றும் 'ஐ. ஆர்-5'-2ம், சனவரி-டிசம்பர் திங்கள் களில் கரும்பையும் பயிரிடுகிறார். மே-ஜூன் ஆகிய இரண்டு திங்கள் களிலும் ஓர் ஏக்கர் நிலத்தில் 'செஸ் பேனியா' பயிரிடுகிறார்.

தந்தையின் மறைவிற்குப் பின்னர், 11 ஏக்கர் நிலங்களில் புதுமையை வரவேற்று, ஒன்றிய அலுவலர்களின் யோசனைகளுக்குச் செவிமடுத்து ஆர்வமுடன் வேளாண்மை செய்யும் இவருடைய ஆண்டு வருவாய் ரூ. 30,000. இது தவிர, வயல்களைச் சுற்றியுள்ள 200 தென்னைகளிலிருந்து இவருக்கு ஆண்டுதோறும் மேலும் ரூ. 2000 கிடைக்கிறது.

பரிசு பெற்ற தந்தை

இவருடைய தந்தையும் ஒரு முன் னாள் உழவர். சிறந்த முறையில் வேளாண்மை செய்ததற்கென, 'வேளாண்மையில் ஒரு முன்னோடி' எனப் பொறிக்கப்பட்ட ஒரு கேட யத்தை வேளாண்மைத் துறையின ரிடமிருந்து, 1944-45இல் இவர் பெற்றுள்ளார்.

ஆறு விதமான பயிர்களோ ஏயாது, ஒழியாது பயிரிடும் இவருடைய அனு பவங்களிலிருந்து இவர் 'சி.எஸ். எச்-1' ஒட்டுச் சோளத்தைமட்டும்



எவ்வாறு பயிரிடுகிறார் என்பதைக் காண்போம்.

சோளம் பயிரிடும் முறை

6 கிலோ எடையுள்ள 'சி.எஸ். எச்-1' சோள வித்துக்களை 12 கிராம்

எடையுள்ள கந்தகத்தூளில் கலந்து 8 மணி நேரம் வைத்துவிடுதல் வேண்டும்.

பின்னர் ஓர் ஏக்கரில் 20 வண்டிச் சுமை கலவையுரமிட்டு வயலே மூன்று அல்லது நான்கு முறை இரும்புக் கலப்பையில் செவ்வையாக உழ வேண்டும்.

''எவ்வாறு விதையிட்டீர்கள்?''

— சிரணிச் செய்தியாளர்

''ஒன்றரை அடி இடை வெளியிலுள்ள 'பார்'களின் சரிவில் 9:9:9 என்ற கலவையுரத்தில் 200 கிலோ உரத்தை 3 அங்குல ஆழத்தில் கோடு கிழித்துப் போட்டேன். இதைத் தொடர்ந்து 6 அங்குல இடை வெளிகளில் இரண்டிரண்டு விதைகளே நட்டேன்'' என்று விவரிக்கிறார், திரு. துரை கன்னியப்பன்.

''பாசன முறைகளைப்பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?'' — செய்தியாளர்

''நட்டவுடன் நீர்பாய்ச்ச வேண்டும். பிறகு மூன்றும் நாளன்று இரண்டு முறைகளாக 'உயிர்த்தண்ணீர்' விடவேண்டும். வயல், மணற் சாரியாக இருப்பின் வாரம் ஒரு முறையும், களிம்பு நிலமாக இருந்தால் 10 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்சவேண்டும். அறுவடை வரை 10 முறைகள் பாசனம் செய்ய வேண்டியிருக்கும்'' என விளக்குகிறார் இவர்.

உரமிடுதல்

முப்பதாம் நாளன்று மேலுரமாக ஏக்கருக்கு 35 கிலோ யூரியா உரமிட்டார். கால்மிதித் தெளிப்பானைக் கொண்டு, ஒரு சதவீத யூரியா கரைசலைப் பின்னர் தெளித்தார். 15ஆம் நாளன்றும், அதிலிருந்து பிறகு 15ஆம் நாளன்றும் இரண்டு முறைகளாகக் களையெடுத்தார்.

பயிர்ப் பாதுகாப்பு

நடவிலிருந்து 15, 25, 55ஆம் நாட்களில் 'எண்ட்சின்' தெளித்தார். கதிர்கள் வெளியானவுடனேயே 'பி. எச். சி'-10 சதவீதம் தெளித்தார்.

நடவிலிருந்து 100ஆம் நாள் அறுவடை செய்யப் பெற்றது. ஓர் ஏக்கரில் அவருக்குக் கிடைத்த விளைச்சல் 2500 கிலோவாகும். இதை விற்ற தனுல் பெற்ற ரூ. 1300லிருந்து, செலவு நீக்கி, எஞ்சிய ஆதாயம் ரூ. 1150 ஆகும்.

இந்த ஆதாயம்பற்றி, ஊர்ப்பணியாளர் திரு. சுந்தரம் ''சோள விளைச் சலில், இம் மாவட்டச் சராசரி வருவாயைவிட இந்த ரூ. 1150 வருவாயானது, 30 சதவீதம் கூடுதலான தாகும்'' என்கிறார்.

உளமார ஒத்துழைப்பவர்

திரு. துரை கன்னியப்பன் அவர்களிடம் சொந்தமாகச் சேறு கலக்கும் கருவி, இரும்புக் கலப்பை, களையெடுக்கும் கருவிகள் உள்ளன. அண்மையில், இயந்திரக் கலப்பையொன்றை வாங்கவிருக்கிறார்.

சத்திய விசய நகர ஊராட்சி உறுப்பினராகவும், வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சேவையாற்றும் இவரைப்பற்றி, ஆரணி ஒன்றிய ஆணையர் திரு. பட்டாபிராமன் சொல்வது:

''திரு. துரை கன்னியப்பன் எங்களுடன் உளமார ஒத்துழைப்பவர். ஏனைய உழவர்களின் ஐயப்பாடுகளை அவ்வப்போது அகற்றி, அவர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியவர். வெளிநாடுகளுக்கு இளைஞர்களை அனுப்பும் திட்டத்தில், இவரை அமெரிக்காவிற்கு அனுப்பலாமென்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.''

பெண்ணே பெருந்தெய்வம்

கட்டியவன் ஈட்டிவரும் காசளவு கண்டுணர்ந்து
திட்டமுடன் தக்க செலவிடுவாள் - நற்றுணையாள்
கண்ணின் மணியனையாள்; கூட்டுப்பா டேந்துவதால்
பெண்ணே பெருந்தெய்வம் பேசு!

— கீரனூர் முத்துவடிவன்

ஊராட்சி அரசிதழ்

PANCHAYAT GAZETTE

சிறந்த ஊர் நல ஊழியர்களுக்குப் பரிசு

[Prize competition among village level workers during 1968-69 Orders - Issued.]

[Proceedings of the Director of Rural Development No : 199674/S1/68-1 dt. 12-1-70.]

ஊர்நல ஊழியர்களிடையே நல்ல முறையில் பாராட்டத்தக்க பணி ஆற்றுகின்ற உணர்வினைத் தூண்டும் வகையில், ஊர்நல ஊழியர்களிடையே போட்டிப் பரிசு அளிக்கும் திட்டத்தினைத் தொடர்ந்து செயற்படுத்த மைய அரசு முடிவுசெய்துள்ளது. 1968-69ஆம் ஆண்டுக்கு இத் திட்டத்தினைச் செயற்படுத்தி வைக்க மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சில குறிப்பிட்ட இலக்குகளையும் குறியீடுகளையும் கொண்டு ஆற்றியுள்ள சாதனைகளை முன்வைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த ஊர்நல ஊழியர் என்று ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டனர்.

2. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், கீழ்க்கண்ட ஊர்நல ஊழியர்கள் அந்தந்த மாவட்டத்தில் 1968-69ஆம் ஆண்டுக்குச் சிறந்த ஊர்நல ஊழியரெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஊர்நல ஊழியரின் பெயர்	பணிபுரியும் வட்டாரம்	மாவட்டம்
திரு. வி. விநாயகம்	திருக்கழுக்குன்றம்	செங்கற்பட்டு
,, எம். வரிகை முகமது	போளூர்	வட ஆர்க்காடு
,, ஏ. செயராமன்	விக்கிரவாண்டி	தென் ஆர்க்காடு
,, ஆர். செங்கோடன்	பள்ளிபாளையம்	சேலம்
,, ஏ. கோபாலகிருஷ்ணன்	திருவரங்குளம்	திருச்சிராப்பள்ளி
,, என். கைலாசம்	நீடாமங்கலம்	தஞ்சாவூர்
,, வி. குருசாமி	தேனி	மதுரை
,, எஸ். அரங்கராமானுசம்	விருதுநகர்	இராமநாதபுரம்
,, ஏ. சண்முக சுந்தரம்	களக்காடு	திருநெல்வேலி
,, ஆர். நாராயணராவ்	கிருஷ்ணகிரி	தர்மபுரி
,, ஏ. எட்வர்ட்	திருவட்டாறு	கன்யாகுமரி
,, எம். நஞ்சன்	கோத்தகிரி	நீலகிரி

3. கோயமுத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை வட்டாரத்தைச் சேர்ந்த ஊர்நல ஊழியர் திரு எஸ். முத்துசாமி மாநில அளவில் சிறந்த கிராம நல ஊழியராத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டபடியால் கோவை மாவட்டத்திற்கு அதற்கடுத்த சிறந்த ஊர்நல ஊழியரைத் தேர்ந்தெடுக்கத் தனியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[12-1-70 நாளிட்ட கிராம வளர்ச்சி இயக்குநரின் நடைமுறைக் குறிப்பு எண். 199674/S1/68-1]

ooooo சிறந்த கிராமங்களுக்குப் பரிசு ooooo

[Prize competition among villages during 1968-69 - Orders Issued.]

[Proceedings of the Director of Rural Development C. No : 199674/S1/68-2 dt. 12-1-70.]

கிராமங்களிடையே உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் பூர்வமான போட்டி உணர்வினைத் தூண்டுவதற்காக வேண்டி, மைய அரசின் சமுதாய வளர்ச்சி அமைச்சகம், கிராமங்களிடையே போட்டிப் பரிசு ஒன்று அளிக்கும் திட்டத்தினைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்துள்ளது. 1968-69ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தினைச் செயற்படுத்தி வைக்க மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சில குறிப்பிட்ட இலக்குகளையும் குறியீடுகளையும் கொண்டு செய்துள்ள சாதனைகளை முன்வைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த கிராமத்தினைத் தேர்ந்தெடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்கண்ட கிராமங்கள் அந்தந்த மாவட்டத்தில் 1968-69ஆம் ஆண்டின் சிறந்த கிராமமெனத் தெர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக அளிக்கப்படும் பரிசு ஒரு தகுதிச் சான்றிதழாகும்.

கிராமத்தின் பெயர்	வட்டாரத்தின் பெயர்	மாவட்டத்தின் பெயர்
விட்டலாபுரம்	திருக்கழுக்குன்றம்	செங்கற்பட்டு
களம்பூர்	போளூர்	வட ஆர்க்காடு
கீழ்ப்புளியாம்பட்டு	காட்டு மன்னூர் கோவில்	தென் ஆர்க்காடு
உலிபுரம்	கங்கவல்லி	சேலம்
உய்யக்கொண்டான்திருமலை	மணிகண்டம்	திருச்சிராப்பள்ளி
பின்னேயூர்	திருவோணம்	தஞ்சாவூர்
நிலக்கோட்டை	நிலக்கோட்டை	மதுரை
மீசலூர்	விருதுநகர்	இராமநாதபுரம்
சிவகிரி	வாசுதேவநல்லூர்	திருநெல்வேலி
அஞ்சஹள்ளி	பெண்ணாகரம்	தர்மபுரி
தெங்கம்புதூர்	இராசக்காமங்கலம்	கன்யாகுமரி
கோத்தகிரி	கோத்தகிரி	நீலகிரி

3. கோயமுத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை வட்டாரத்தில் உள்ள உடையகுளம் கிராமம், மாநில அளவில் சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதால் கோயமுத்தூர் மாவட்டத்தில் அடுத்த சிறந்த கிராமத்தினைத் தேர்ந்தெடுக்கத் தனியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[12-1-70 நாளிட்ட கிராம வளர்ச்சி இயக்குநரின் அலுவலக குறிப்பு எண் 199674/S1/68-2]

சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சுழற்கேடயங்கள் அளித்தல்

[Prize competition — Scheme for the award of Rolling Shield for the best Panchayat union at District level — 1968-69 — Orders - Issued.]

[Proceedings of the Dircetor of Rural Development C. No : 40947/S7/69 dt. 12-1-1970.]

1-12-66 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண் 2765இல், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்குச் சுழற்கேடயம் ஒன்று அளிக்கும் திட்டத்திற்கு, அரசு அனுமதி அளித்துள்ளது. ஒவ்வோராண்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறந்த ஊராட்சி ஒன்றியம் ஒன்றினைத் தேர்ந்தெடுக்குமாறு கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதை ஒட்டி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடமிருந்து சாதனைகள் பற்றிய விவரங்கள் பெறப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த ஊராட்சி ஒன்றியமானது, அதனுடைய சாதனைக் குறிப்புகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1968-69ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்கள் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

மாவட்டத்தின் பெயர்		ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்
செங்கற்பட்டு	—	சித்தாமூர்
வட ஆர்க்காடு	—	காவேரிப்பாக்கம்
தென் ஆர்க்காடு	—	திருவெண்ணெய்நல்லூர்
சேலம்	—	ஆத்தூர்
கோயம்புத்தூர்	—	ஆனைமலை
திருச்சிராப்பள்ளி	—	திருமானூர்
தஞ்சாவூர்	—	குத்தாலம்
மதுரை	—	பாலையம்
இராமநாதபுரம்	—	திருப்பத்தூர்
திருநெல்வேலி	—	சேரன்மகாதேவி
தர்மபுரி	—	பர்கூர்
கன்யாகுமரி	—	திருவட்டாறு
நீலகிரி	—	கூடலூர்

1967-68ல் சுழற்கேடயம் வழங்கப் பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களிட மிருந்து சுழற்கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திரும்பப் பெற்று, அவற்றை மேற்கண்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு, பொருத்தமான விழாவில், கூடுமான வரையில் குடியரசு தினத்தன்று வழங்க ஏற்பாடுகள் செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

[12-1-70 நாளிட்ட கிராம வளர்ச்சி இயக்குநரின் நடை முறைக் குறிப்பு எண் 40947/S7769.]

உள்ராட்சித் தேர்தல்— அவ்வப்போது ஏற்படுகிற காலி இடங்களை நிரப்புதல்

[Elections—Panchayat — Casual Vacancies - Filling up — Clarification — Issued.]

[G.O. Ms. No: 2531, R.D.L.A, Dt. 27-12-69.]

அந்த ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் 2-2-1970 உடன் முடி வடைந்துவிடும், ஆனால், ஊராட்சி வாக்காளர் பட்டியல் தனியாகத் தயாரிக்கப்படல் வேண்டும் என்ற சட்டபூர்வமான தேவையை ஒட்டி, 1970 சனவரி, பிப்ரவரி மாதங்களில் நடைபெற வேண்டிய ஊராட்சி களுக்கான சாதாரணத் தேர்தல்களை சில மாதங்களுக்குத் தள்ளிவைக்க லாம் என அரசு கருதுகிறது. அதை ஒட்டி, ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலத்தை ஆறுமாதங்களுக்கு அதிகப்படுத்தியோ குறைத்தோ செய்யக் கண்காணிப்பாளருக்கு (Inspector) அதிகாரமளிக்கிறமுறை யில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத் தின் 17ஆவது பிரிவு திருத்தப்பட்டுள் ளது. இப்படிச் செய்ததினால், இப் பொழுது உள்ளதும் இனிமேல் ஏற் படக்கூடியதுமான அவ்வப்போது ஏற்படக்கூடிய காலியிடங்களை நிரப் புவதற்காக அவ்வப்போது தேர்தல் கள் நடத்தவேண்டுமா என்ற ஒரு பிரச்னையை சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எழுப்பியுள்ளனர்.

2. 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 17 (3) (சி)-ன் படி, கண்காணிப்பாளர் வேறு விதமாக உத்தரவு பிறப்பித் திருந்தாலன்றி, காலமாகிவிட்டதி னால் உறுப்பினர்கள் பதவிக்காலம் முடிந்த தேதியிலிருந்து ஆறுமாதங் களுக்குள்ளாக ஊராட்சிகளில் அவ் வப்போது நடத்தும் தேர்தல்கள் நடத்த வேண்டியதில்லை. 1970 ஆகஸ்ட் வரையில் ஊராட்சி உறுப் பினர்களின் பதவிக் காலமானது நீடிக்கப்படலாம். அப்படிச் செய்யப் பட்டால், 1969டிசம்பருக்கு முன்னால் இருக்கின்ற அவ்வப்போது ஏற்படு கிற காலியிடங்களை நிரப்பவேண்டும். ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடத் துவதற்கு முன்னால் தனியாக ஊராட்சி வாக்காளர் பட்டியல்களும் புதிய வாக்காளர் சீட்டுகளும் அச்ச டித்து முடிக்கப்படல் வேண்டும். இப் பொழுது போடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின்படி, ஊராட்சி வாக்காளர் பட்டியல் இறுதியாக வெளியிடுவது சூன் 1970இல் செய் யப்படல்வேண்டும். ஆனால், தேர்தல் கமிஷனின் உத்தரவின்படி சட்ட மன்றத் தேர்தல்களுக்கான வாக்கா ளர் பட்டியல் திருத்தப்படுவதினால் இந்தத் தேதியானது அநேகமாகத் தள்ளிவைக்கப்படலாம். இந்த நிலை யில் ஊராட்சிகளில் இப்பொழுது உள்ளதும் இனிமேல் ஏற்படக் கூடி யதுமான அவ்வப்போது ஏற்படுகிற காலியிடங்களை, ஊராட்சிகளுக்கு அடுத்த சாதாரணத் தேர்தல்கள் நடைபெறும்வரை நிரப்பாமல்விட்டு வைத்திருக்கலாம் என அரசு கருது கிறது. ஆகவே அவ்வப்போது ஏற்படு கிறன் எல்லாக் காலியிடங்களையும் நிரப்பவேண்டியதில்லை என எல்லா

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், கிராம வளர்ச்சி இயக்குநருக்கும் அறிவிக்கப்படுகிறது.

[27-12-69 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண் 2531.]

'சிரணி'யில் அரசு ஊழியர்கள் சேரலாம்

[Prosperity Brigade — Enrolment of Govt. employees in prosperity Brigade — Orders — Issued.]

[G.O. Ms. No: 21, R.D.L.A. dt. 6-1-1970.]

பொதுப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள இதயம் படைத்தவர்கள், தங்களுடைய காரியத்தைக் கவனித்ததுபோக மீதமுள்ள நேரத்தைச் சமுதாயத்தை மேம்படுத்தவும், பொதுப் பணிக்கும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் பயன்படுத்தவேண்டும். தங்கள் நேரத்தில், உழைப்பில் ஒரு பகுதியை அவர்கள் சமுதாயப் பணிக்கு அளித்திடவேண்டும். இந்தச் சீரிய நோக்கத்துடன் தமிழகத்தில் ''சிரணி'' தொடங்கப் பெற்றது. மிகப் பிரம்மாண்டமான வெற்றியினை ''சிரணி'' ஈட்டியிருக்கிறது.

2. அரசு ஊழியர்களில் பெரும் பாலோர் ''சிரணி''யில் சேர விருப்பம் தெரிவித்துள்ளார்கள். ஊர்க் காவல் படையைப் போலவே, 'சிரணி'யிலும் அரசு ஊழியர்கள் சேர அனுமதி அளிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்தது. முழுக்க முழுக்கச் சமூகப் பணிபுரியும் நிறுவனமாகச் 'சிரணி' இருப்பதனாலும், சமுதாயத்தில் சமூக, பொருளாதார மேம்பாட்டினைத் தன் முழு நோக்கமாகச் ''சிரணி'' கொண்டிருப்பதனாலும், அரசு ஊழியர்களை (உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்களையும் சேர்த்து) ஆண்-பெண் இருபாலாரும் 'சிரணியில்' சேர அரசு அனுமதி அளிக்கிறது. நாட்டின் புதியதொரு சமுதாய அமைப்பினை உருவாக்கச் 'சிரணி'யில் சேர்ந்து தங்களுக்கு உள்ள ஓய்வு நேரத்தில் அவர்கள் பணிபுரியலாம்.

'சிரணி'யின் நோக்கம்; குறிக்கோள் ஆகியவற்றையும் 'சிரணி'யின் பத்து அடிப்படைக் கொள்கைகளையும் இவ்வாணையின் இணைப்பில் காணலாம்.

'சிரணி'யில் சேரத் தகுதி :

1. உடல் வலுப்பெற்ற எல்லா அரசு ஊழியர்களுக்கும் (ஆண்-பெண் இருபாலாரும்) 'சிரணி'யில் சேரத் தகுதி உண்டு.
2. வயது 45க்கு மேல் இருக்கக் கூடாது.
3. நல்ல குண நலனும், உடல்வலுவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
4. சமூகப் பணிபுரியும் ஆர்வமும் ஆற்றலும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

சென்னை நகரில் பணிபுரியும் அரசு ஊழியர்களில் 'சிரணி'யில் சேர விரும்புபவர்கள் ''தனி அதிகாரி, 'சிரணி', கோட்டை சென்னை-9'' என்ற முகவரிக்கும் மாவட்டங்களில் பணிபுரிவோர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், தாங்கள் பணிபுரியும் அதிகாரி மூலமாக மனுச்செய்து கொள்ளலாம்.

4. ஊர்க்காவல் படையில் அவசரமான நேரங்களில் மட்டும் அழைப்பு விட்டுப்பணிபுரிவதுபோல் அல்லாமல் 'சிரணி'யின் பணி தொடர்ந்து செய்யப்படுகின்ற தன்மை வாய்ந்ததால், அரசு அலுவலர்கள், 'சிரணி'யில் சேருவதினால், தங்களுடைய அன்றாட அரசு அலுவல்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

விடுமுறை நாட்களிலும், அலுவலக நேரம் தவிர மற்ற நேரங்களில் மட்டுமே, கூடுமானவரை 'சிரணி'

யில் சேருகின்ற அரசு ஊழியர்களைப் பணிபுரிய அழைக்கவேண்டும்.

5. சமுதாயம் நல்வாழ்வினை நோக்கி முன்னேற்றப் பாதையில் நடைபோடுவதே 'சீரணி'யின் அடிப்படை இலட்சியமாகையால், எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லாமல் தானே முன் வந்து சமூகப்பணி புரியும் ஓர் அமைப்பாகச் 'சீரணி' உள்ள படியால் 'சீரணி'யின் வெற்றி, 'சீரணி'த் தொண்டர்கள் தொண்டுள்ளத்துடன், தன்னலங்கருதாது தொண்டாற்றுவதிலேதான் உள்ளது.

6. எல்லாத்துறைத் தலைவர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர்களும் இவ்வாணையில் சொல்லப்பட்டுள்ள செய்திகளைத் தங்களின் கீழ்ப்பணியாற்றும் எல்லா அரசு ஊழியர்களின் பார்வைக்கும் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

[6-1-70 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண். 21.]

அரசு ஆணை எண் 21-ன் இணைப்பு :

நோக்கங்களும் குறிக்கோள்களும் :

1. சமுதாய உணர்வினையும் தன்னலமற்ற சேவை உணர்வினையும் வளர்த்தல்.

2. ஊர்களில் தலைமை உணர்வினை வளர்த்தல்.

3. ஊராட்சிகள், கூட்டுறவுகள் போன்ற கிராம நிறுவனங்களில் இணைப்பான முறையில் பணிபுரிகின்ற ஆர்வத்தைத் தூண்டுதல்.

4. கிராமிய வளர்ச்சிக்கு முக்கிய அடித்தளமாகக் கிராமமே அமைய உதவி செய்தல்.

5. கிராம ஆதாரங்களை வளர்த்தல்; ஒன்று சேர்த்தல்.

6. தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் துப்புரவைக் கடைப்பிடித்தல்.

7. ஊர்ப்புற ஆள் வலத்தினைப் பயன்படுத்துதல்.

8. ஊர்ப்புற நபர் வருமானத்தைப் பெருக்குதல்; தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பணியில் ஊர்ப்புற மக்களை ஈடுபடுத்துதல்.

9. தன்னலத்தை உதறிவிட்டுப் பொது நலம் பேணுகின்ற உணர்வினை வளர்த்தல்.

10. அரசு மாளியங்களையே ஊர்ச் சமுதாயம் நம்பியிராமல், ஊர்ப்புற ஆதாரங்களையும், ஊர்ப்புறச் சக்திகளையும் திறமைகளையும் பயன்படுத்தி ஊர்ப்புறத் தேவைகளை நிறைவு செய்தல்.

சீரணி - புத்தகு

1. ஊதியம் பெருது ஓய்வு நேரப் பணி ஆற்றல்.

2. தன்னலங்கருதாப் பணி பேணல்.

3. தன் மதிப்பையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தல்.

4. உழவும் தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல்.

5. கல்வியறிவும், பொது அறிவும் வளர வகை செய்தல்.

6. பொதுநலம் காணத் துப்புரவுப்பணி மேற்கொள்ளல்.

7. தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல்.

8. அன்பு வழியாகச் சமூகக்கேடுகளைதல்.

9. திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல்.

10. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல்.

தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசு

பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் அத்தனை பேருக்கும்

—— கல்வி உதவித் தொகை ——

[Social Welfare — Welfare of Backward classes — Award of Scholarships to stundents belonging to Backward classes without limit in number - Proposal - Approved.]

G.O. Ms. No: 948, Social Welfare dt: 19-2-1969.]

அரசு ஆணையின்படி, இன்றுள்ள நிலையில், பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த தகுதி படைத்த மாணவர்களுக்கு, இணைப்பில் கொடுக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ள 54 படிப்புப் பிரிவு படிப்பவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் இத்தனை உதவித் தொகைகள் (Scholarships) தான் கொடுக்கலாம் என்று வரையறை செய்து அந்த எண்ணிக்கை அந்தப் பிரிவுக்கு எதிராக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. 8-6-69 நாளிட்ட சமூக நலத்துறையின் அரசு ஆணை எண் 948இல், பிற்பட்ட வகுப்பினர் (Backward classes) மிகவும் பிற்பட்ட வகுப்பினரைச் (Most Backward classes) சேர்ந்த மாணவர்களுக்கு, உதவித் தொகை அவர்களுக்கு அளிக்கப்பட, அவர்கள் 40 மதிப் பெண்கள் அல்லது அதற்கு மேலும் பெற்றிருந்தால் போதும்; பிற்பட்ட வகுப்பினர் முன்பிருந்ததைப்போல் 50 மதிப்பெண்களும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 45 மதிப்பெண்களும் பெற்றிருக்கவேண்டும் என்பது அவசியமில்லை; 40 மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அந்த மாணவர்கள் கல்வி உதவித்தொகை (Scholarships) பெறத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையினால், மேலேகுறிப்பிட்ட 54 படிப்புப் பிரிவு பயிலும் மாணவர்களில் உதவித்தொகை கோரிடும் மாணவர்களின் எண்ணிக்கை அதிக மாகிவிட்டது. இதனால், இந்த ஆணையின் இணைப்பில் சொல்லப்பட்டுள்ள 54 வகையான படிப்புப் பிரிவில் பயிலும் பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களில் தகுதி படைத்தோருக்கு வரையறை என்றில்லாமல், எல்லோருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க அனுமதி வழங்கவேண்டுமெனப் பிற்பட்ட வகுப்பினர் துறை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார். பிற்பட்ட வகுப்பினர் துறை இயக்குநரின் இக்கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்கிறது.

2. பிற்பட்ட வகுப்புகள், மிகவும் பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்துள்ள தகுதி படைத்த இந்த ஆணையின் இணைப்பில் சொல்லப்பட்டுள்ள படிப்புப் பிரிவு பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குவதில் வரையறை என்று ஒன்றும் இருக்கவேண்டியதில்லை என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது. தகுதிபடைத்த எல்லோருக்கும் கல்வி உதவித்தொகை வழங்கலாம் எனவும் அரசு ஆணை பிறப்பிக்கிறது.

[18-12-69 நாளிட்ட சமூக நலத் துறையின் அரசு ஆணை எண் 948.]



1. சிற்றூரின், உழவர்களின் நலனுக்காக இயங்கும் இதழ் என்று கண்டு மகிழ்ச்சியுற்றோம்.

இ. ஆதிமூலம், ஆசிரியர், இரும்பிலிக்குறிச்சி, திருச்சி மாவட்டம்.

2. ''கண்கவர் எழிலேப் பெற்று
கட்டுரை கவிதை தாங்கி
உண்டிட உணவளிக்கும் உழவனின் பெருமை கூறி
எண்ணத்தை ஈர்க்கும் சிறு இன்பநற் கதையும் ஏற்று
அண்ணனின் அறிவால் வந்த அருமை சீரணியே வாழ்க;''

புலவர் ஆ. பெ. காந்திதாசன், கல்லவராயன்பட்டி,
பண்ணைபுரம், மதுரை மாவட்டம்.

3. சீரணி இதழ் படிப்பதற்கு மிகவும் எளிய நடையில் இருக்கிறது. அது எப்போது வரும்வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதனுடைய முகப்போவியங்கள் எழிலாக உள்ளன.

ஆ. ராமதாசு, தெற்குத் தெரு, பசுபதி கோவில், தஞ்சை மாவட்டம்.

4. அதிகப் பக்கங்களுடன் அழகாக வெளியிட்டமை மிகுந்த பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

சி. தியாகராசன், தலேஞாயிறு, தஞ்சை மாவட்டம்.

5. சீரணியின் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர் வரப்பெற்றேன். நல்ல முறையில் அமைந்திருந்தது. தங்களுக்கு என் பாராட்டுக்கள்.

மு. தவசியப்பன், மாமரத்துத் தோட்டம், அந்தியூர், ஈரோடு.

6. செய்தியில் சீரும், சிறப்பும் பெற்று ஊரணிபோல் நிறைந்தது சீரணிதான்.

கு. சங்கரலிங்கஞ் செட்டியார், உலேம்பட்டி, மதுரை மாவட்டம்.

7. தங்கள் இதழில் பல நல்ல தரமான செய்திகள் உள்ளன. என் போன்ற மாணவர்களின் மேன்மைக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், மாணவர்க்கென்று ஒரு பகுதியைத் தொடங்கினால் சிறப்பாக இருக்கும் என என் மனம் எண்ணுகிறது. என் ஆசை நிறைவேறுமா?

க. தேவதாஸ், செளரிபாளையம், கோயம்புத்தூர்-4.

8. தங்கள் சீரணியின் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர் படித்தேன். கலேஞர் கருணாநிதியின் குறளோவியமும், மாண்புமிகு மா. முத்துசாமி அவர்களின் 'உங்களிலே நான் ஒருவன்' என்ற கட்டுரையும், விக்ரமன் எழுதிய கடமையும் கண்ணீரும், படிப்பதற்குத் தெவிட்டாத தேனாக இருந்ததுடன், நல்ல கருத்துக்களைக் கூறுவனவாகவும் இருந்தன. சுகி சுப்பிரமணியம் எழுதிய 'கிராமத்தில் வள்ளுவர்' என்ற குறள்களை வைத்து எழுதிய கட்டுரை படிப்போர்க்கு அறிவினை ஊட்டுவதாகவும் இருந்தது.

ம. மு. பாலராசு, கோபி வட்டம், கோவை மாவட்டம்.

9. சீரணி, ஓர் ஊருணியாய் தமிழ் நெஞ்சங்களை வழி நடத்தும் பேரணியாய்ச் சீரோடு உலவி வருவது, என் போன்ற தமிழ் நெஞ்சங்கட்கு இன்பத் தேனூட்டும் தென்றல். இலக்கியப் பகுதிகள் 'சீரணி'யின் ஒரு சிறப்புப் பகுதி. கவிதைகளின் வெள்ளோட்டம் மிகச் சிறப்பு.

இளம்பரிதி, பழநி.

10. அரசின் வெளியிடான சீரணியைக் கண்டோம். மகிழ்ந்தோம். அமைச்சர்களின் வாழ்க்கை வரலாறு அருமை. தொடர்ந்து வெளியிடுமாறு

வேண்டுகிறேன். குடும்ப ரகசியம் என்ற தொடர் நாடகம் செல்வர்கட்கு சவுக்கடியாக இருப்பது கண்டு மகிழ்ச்சி.

அ. சிவசண்முகம், கோவை-4.

11. தமிழ்த் தரணியில் தரமான சிரணி இதழ் சிந்தையைக் கவரும் சீர்மை மிக்கதாகப் பொலிகின்றது.

க. சுப்பராயன், நாமக்கல், சேலம்.

12. மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு எனப் பல பயிர்களின் வளர்ப்பு முறைபற்றி விளக்கிக் கூறுவது 'சிரணி' ஒன்றே.

இரா. நவநீதன், மதுரை.

13. வள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு இதழின் சுவைபற்றிய, என் எண்ணத்தை எழுத்தால் கூறுவது கடினம். கருவூறிய இதழுக்கு மெருகூறிய ஓவியரின் திருவோவியம் என்னே உண்மை உலகிலிருந்து, கற்பனை உலகிற்குச் சிறகடிக்கச் செய்துவிட்டது.

கவிஞர் தேனிதியாகன், மதுரை மாவட்டம்.

14. சிரணி இதழ்கள், லாபம் கருதி நடத்தப்படும் தனியார் பத்திரிகை களைவிடச் சிறந்த முறையில் வெளிவருகின்றன. வரவர ஒவ்வோர் இதழும் இது தீபாவளி மலரா, பொங்கல் மலரா என எண்ணத் தோன்றுகிறது.

எஸ். முத்துசாமி, ஆசிரியர், நாமக்கல், சேலம்.

15. தேனும் தினைமாவும் பாகும் பருப்பும்
கற்கண்டும், சேர்த்தொன் முகப்பிசைந்து - உண்மையிலே
காணுகின்ற இன்சுவையே போலினிமை காண்கின்றேன்
சிரணியைக் கற்கையிலே நான்

மா. சுப்பிரமணியன், அரண்மனைக் குறிச்சி, திருச்சி மாவட்டம்.

16. டிசம்பர் திங்கள் சிரணியின் அட்டைப் படம், காண்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகிக் களிப்பூட்டும் வண்ணத்தில் அமைந்து, உள்ளத் திற்கும் ஓர் எழுச்சியை ஊட்டியது.

க. கோ. இராமலிங்கம், சிதம்பரம், தெ. ஆ. மாவட்டம்.

17. 'சிரணி' தெள்ளத் தெளிவாக, தேன் அமுது போன்று இத்திக்கும் கருத்துக்களை எங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது மட்டுமல்லாமல் எங்கள் வாழ்க்கையிலும் சுடர் விட்டு எரியும் மட்டிலா மகிழ்ச்சியையும், பேரானந்தத்தையும் வழங்குகிறது.

எஸ். ஆர். வேலுசாமி, கோவை மாவட்டம்.

18. திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர் சிறப்பாக இருந்தது. கட்டுரைகளில் இலக்கிய மணமும், இனிய சுவையும் நிறைந்திருப்பதைக் கண்டேன்.

தெ. கி. சந்திரன், ஆசிரியர், அவினாசி வட்டம், கோவை.

19. வள்ளுவரின் கருத்தை முதல் கட்டுரையில் ஓவியமாகவே படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள் தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள். 'பைந்தமிழ்த் தேர்ப்பாகன்' சிறந்த ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை. அதனைப் படிக்க என் மனம் புல்லரித்துவிட்டது.

சே. கு. முத்தையா, துணைச் செயலாளர், சேலம் மாவட்டச் சமரச சன்மார்க்க சங்கத் தலவழிபாட்டுக் குழு, சேலம்.

20. ''செந்தமிழின் நன்னுடைச் சீர்படுத்தப் பாடுபட
வந்திருக்கும் சிரணி! நீ வாழியவே—சந்ததமும்
தாரணிதான் போற்றத் தலைநிறந்த நல்ஏடாய்ச்
'சிரணி' வாழ்க! செழித்து!!

வித்துவான் ஆ. சுப்புலக்ஷ்மி, தமிழாசிரியை, ஆசிரியர் கவ்லூரி உயர்நிலைப் பள்ளி, சென்னை-15.

21. திருவள்ளுவர் மலரின் முகப்பில் அமைந்த புதுமையான நிழல் ஓவியத்தின் இனிமையான காட்சி காண்பவர் கண்களுக்கு அருமையான விருந்தாக அமைந்திருந்தது.

எஸ். வெங்கட கிருஷ்ணன், பு. தோட்டக் குறிச்சி, கரூர் வட்டம்.

22. சீரணி திங்கள் தோறும் அறிவுக் களஞ்சியமாக வெளிவருகிறது. எத்துறையைச் சார்ந்தவர்களாயினும் அவசியம் இல்லந்தோறும் வாங்கிப் படித்துப் பயன் பெறலாம்.

எஸ்.பி. வேலுச்சாமி, பானு மருத்துவமனை,
நன்செய்த்தலையூர், கோவை,

23. சிறப்பு மிக்க கருத்துக்களைக்கொண்டு 'சீரணி' இதழ் திங்கள் தோறும் அனைவர்க்கும் பயன்தரத்தக்க முறையில் வெளிவருவதுகண்டு மட்டிலா மகிழ்ச்சியடைகின்றேம். குறிப்பாக ஊராட்சி அரசிதழ் பகுதியில் வெளியிடப்படும் அரசினர் ஆணைகள் எங்களுக்குப் பயன் தரத்தக்க விதத்தில் உள்ளன.

கி. கருப்புசாமி. மாவட்டச் செயலாளர், ஊராட்சி ஒன்றிய
ஊழியர்கள் சங்கம், கோவை.

வெள்ளிர வெளி
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி
&
விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. ஏ. ஏ. 73
வெள்ளிர வெளி பி.ஓ. குன்னத்தூர் (வயா) கோவை மாவட்டம்

எங்களிடம் 30s, 40s, 60s-ல் தயார் செய்த
சிறந்த கலர் சேலை ரகங்கள்
30s நெம்பரில் தயார் செய்த சிறந்த மல் பீஸ்கள்
வேஷ்டிகள், நவீன டிசைன்களில்
சீட்டி ரகங்கள் 2/20 பெட் ஷீட்டுகள்
கலர் துண்டுகள், 2/40 டையமண்ட் வேஷ்டி ரகங்களும்,
ஈரை துண்டு, கர்சீப் ரகங்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா
'கோ-ஆப் டெக்ஸ்'
விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

எங்கள் விற்பனை நிலையம்:
32, அக்ரஹார வீதி, ஈரோடு.

தலைவர்: வி. அய்யாசாமி

தமிழ்நாடு அரசுக்காக அரசுக் எழுதுபொருள்-அச்சுத் இயக்குநரால் ஸ்ரீ பி.எல்.எஸ். அச்சகத்தில் (6511, ஆர்காடு சாலை, சென்னை-26) அச்சிடப்பட்டது.